
கல்கி
KALKI ஏப்ரல் 8, 1956
4 அணா


ஆரோக்கியமான குழந்தைகள் தவறாமல் லைஃபாய் சோப்
உபயோகித்துக் குளிக்கின்றனர்
*அன்றாட அழுக்கிலுள்ள கிருமிகளை அது
கழுவிக் களைகிறது!
*தினசரி சம்பந்தப்படும் அழுக்கிலுள்ள கிருமி
கள் வாயிலாக ஒவ்வொருவரும் தொத்து
நோய் ஆபத்துக்கு ஆளாகிறோம். அதன்
காரணமாகவே, ஆரோக்கியமுள்ள பலர்
வழக்கமாக லைஃபாய் சோப் உபயோகித்து
அழுக்குடன் கிருமிகளையும் கழுவிக்
களைந்து தங்கள் ஆரோக்கியத்தைப் பாது
காத்துக் கொள்கின்றனர்—ஆரோக்கிய
மான அந்தரங்க புதுமலர்ச்சியை
அது அளிக்கிறது!
LIFEBUOY SOAP
LIFEBUOY
SOAP

மலர் 15
இதழ் 16

கல்கி
பொருளடக்கம்

மன்மத ஆ
பங்குனி 26

8, ஏப்ரல் 1956

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 15 இதழ் 36	தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்	மன்மத ௵ பங்குனி௴ 26

எட்டு வருஷப் பிரச்னை

பாரத நாடு சுதந்திரம் பெற்று எட்டு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன.

சுதந்திரம் பெற்ற பின் எழுந்த பல பயங்கரமான பிரச்னைகளைச் சமாளிப்பதில் இந்தியா வெற்றி பெற்றது.

முக்கியமான சில உலகப் பிரச்னைகள் தீருவதற்கும் இந்தியா பேருதவி புரிந்தது. சர்வதேச அரங்கில் தனது மதிப்பையும் செல்வாக்கையும் உயர்த்திக் கொண்டது.

அப்படியிருந்தும் எட்டு ஆண்டுகளாகக் காஷ்மீர் நெருக்கடி தீரவில்லையெனில், அதற்குப் பாரத நாடு பொறுப்பாளியல்ல.

காஷ்மீரத்தின்மீது பாகிஸ்தான் படையெடுத்து, காஷ்மீரைச் சேர்ந்த பல நகரங்களைச் சூறையாடியது.

அந்தத் தவற்றை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மழுப்ப முயற்சித்ததும் சேர்ந்து, காஷ்மீர் விஷயம் தீராத பிரச்னையாகி விட்டதற்குக் காரணமாக அமைந்தது.

பாகிஸ்தானின் தவற்றை மறைமுகமாக ஒப்புக் கொண்ட ஐ. நா. பிரதிநிதிகள் அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு பாகிஸ்தானின் நேர்மையற்ற தன்மையைக் கண்டித்து, அதற்குப் பரிகாரம் தேட முற்பட்டிருப்பார்களாயின், காஷ்மீர் நெருக்கடி இவ்வளவு தூரத்துக்கு முற்றியிராது.

ஆனால் அதற்கு மாறாக ஐ. நா. ஸ்தாபனத்தில் உள்ள முக்கிய வல்லரசுகள் பாகிஸ்தானுக்கு ஆதரவு அளிக்க முற்பட்டதால், காஷ்மீர் பிரச்னையில் அதிக சிக்கல்கள் ஏற்பட்டு விட்டன.

காஷ்மீரில் பாகிஸ்தான் அநீதியான முறையில் ஆக்கிரமித்துத் தன் வசமாக்கிக் கொண்ட பிரதேசங்கள் இன்று வரையில் பாகிஸ்தான் படைகளின் ஆதிக்கத்திலேயே இருந்து வருகின்றன.

போதாக்குறைக்கு, பாகிஸ்தான் அமெரிக்காவிலிருந்து ஏராளமாகப் போர்த் தளவாடங்களை இறக்குமதி செய்ய முற்பட்டிருப்பதுடன், இராணுவ உதவியை அடிப்படையாகக் கொண்ட பக்தாத் உடன்படிக்கை, 'ஸீட்டோ' ஒப்பந்தம் போன்ற நடவடிக்கைகளிலும் கலந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறாக ஒருபுறம் போர்க்கோலம் பூண்டு வரும் பாகிஸ்தான் தலைவர்கள் மற்றொரு புறம் இந்தியாவுடன் சமாதானமாகப் போவதே தங்களுடைய நோக்கம் என்று பறை சாற்றுவது ஒன்றுக்கொன்று முரணாகவே இருக்கிறது.

காஷ்மீரின் எதிர்காலத்தை சர்வஜன வாக்கு எடுப்பின் மூலம் காஷ்மீர் மக்களே முடிவு செய்ய வேண்டும் என்பது பாகிஸ்தான் தலைவர்களின் உண்மையான நோக்கமாக இருக்குமாயின், அவர்கள் காஷ்மீர் பிரதேசத்தில் உள்ள தங்கள் துருப்புகளுக்குத் திரும்பி வரும்படி கட்டளையிட்டிருப்பார்கள்; போர்த்தளவாட இறக்குமதி, இராணுவ உடன்படிக்கைகள் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள்.

எனவே இத்தகைய சூழ்நிலையில், காஷ்மீரிலிருந்து பாகிஸ்தான் தன் துருப்புக்களை வாபஸ் செய்து கொண்டாலன்றி, காஷ்மீரில் சர்வஜன வாக்கு எடுப்பு என்ற பேச்சுக்கோ, மத்தியஸ்தப் பேச்சுக்கோ இடமில்லை என்று பாரதத் தலைவர் நேருஜி மக்கள் சபையில் சென்ற வாரம் கூறியிருப்பதை நியாய புத்தி படைத்த எவரும் ஆட்சேபிக்க முடியாது.

"சென்ற ஒன்பது ஆண்டுகளாக, பாகிஸ்தானின் விபரீதப் போக்கினால் காஷ்மீர் விஷயத்தில் மாறி மாறிப் பல்வேறு கட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந் நிலையில், காஷ்மீர் பிரச்னையை வெளியாரின் மத்தியஸ்தத்துக்கு விடுவதென்ற பாகிஸ்

தானின் யோசனைக்கு நான் எப்படி இணங்க முடியும்!" என்று நேருஜி கூறியுள்ளார்.

இவ்விஷயத்தை யாதொரு சந்தேகத்துக்கும் இடமின்றித் தெளிவாக எடுத்துக் கூறியுள்ள நேருஜிமீது பாகிஸ்தான் ஜனாதிபதி இஸ்கந்தர் மிர்சாவும் பிரதமர் முகம்மது அலியும் சீறி விழுந்திருக்கிறார்கள்.

காஷ்மீர் பாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு பகுதியே என்றும், அதைப் பாகிஸ்தானிடமிருந்து பிரிக்க எவருக்கும் உரிமை இல்லை என்றும் பாகிஸ்தான் பிரதமர் முழங்குகிறார்.

காஷ்மீர் சம்பந்தப்பட்ட வரையில் இந்தியா சர்வதேச ஒப்பந்தங்களையெல்லாம் மீறி விட்டதாகவும், எனவே உலகில் இனி அமைதிக்கோ, பாதுகாப்புக்கோ வழி இல்லை என்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி கூறுகிறார்.

இத்தகைய அபாண்டமான குற்றச் சாட்டுக்களால் காஷ்மீர் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது என்பதையும், வெளி நாடுகளின் இராணுவ உதவியையோ, மத்தியஸ்தத்தையோ நாடுவதால் யாதொரு பலனும் ஏற்படாது என்பதையும் பாகிஸ்தான் தலைவர்கள் உணராதது ஆச்சரியமாக இருக்கிறது.

உண்மையில் பரஸ்பர நட்பையும் ஒத்துழைப்பையும் நாடி, நேரடியாகச் சமரசப் பேச்சு நடத்துவது ஒன்றுதான் காஷ்மீர் பிரச்னை சுமுகமாகத் தீருவதற்கும் இரு நாடுகளின் நீடித்த நட்புக்கும் சிறந்த வழி என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

கல்வித் திட்டம்

நாம் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த சென்னை அரசாங்கத்தின் கல்வித் திட்டம் சென்ற வாரம் வெளியாகி விட்டது.

இதில் விசேஷ திடுக்கிட வைக்கும் மாறுதல்களோ, புதுமைகளோ ஒன்றும் இல்லை.

கூட்டல் விஷயத்தில்தான் புதுமை செய்யப்பட்டிருக்கிறது. அதாவது 8+3=11 என்றிருந்ததை 7+4=11 என்று மாற்றியிருக்கிறார்கள். ஆரம்பப் படிப்பு, எலிமென்டரி பள்ளிப் படிப்புமாக எட்டு ஆண்டுகள் என்றிருந்ததை ஏழாண்டுகளாகக் குறைத்து விட்டார்கள். உயர்நிலைப் படிப்பு மூன்று ஆண்டுகளாக இருந்ததை நான்கு ஆண்டுகளாக மாற்றி யிருக்கிறார்கள். அவ்வளவே!

மற்றொரு முக்கிய மாறுதல். ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாகவும் ஹிந்தியை இஷ்ட பாடமாகவும் செய்திருக்கிறார்கள்.

இது ஹிந்தி எதிர்ப்புக் கோஷ்டியினரைத் திருப்தி செய்வதற்காக மாற்றப்பட்டிருக்க வேண்டும்.

ஹிந்தி கட்டாய பாடமாக்கப்படா விட்டால், திரு கே. சந்தானம் எச்சரிக்கை செய்வது போல் ஹரிஜனங்களுக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் தபால், ரயில்வே போன்ற மத்திய சர்க்கார் உத்தியோகங்கள் பெற வாய்ப்பே இல்லாமற் போகும். மேற்படி உத்தியோகங்களுக்கு ஹிந்தி பாஷையறிவு அவசியம் தேவை என்று மத்திய சர்க்கார் வற்புறுத்தத்தான் செய்வார்கள். பள்ளிக்கூடத்தில் ஹிந்தி படிக்க வாய்ப்புப் பெறாதவர்கள் அகில இந்திய வேலைகளுக்கு அருகதையற்றவர்களாகி விடுவார்கள்.

"ஹிந்தியைத் திணிக்கக் கூடாது" என்று மத்திய சர்க்காருடன் சொல்லிப் போராடுவது வேறு விஷயம். ஆனால் பள்ளிக்கூடங்களில் பல மொழிகள் கற்க ஏற்பாடு செய்வது வேறு விஷயம்.

இளம் பருவத்தில் மேல்நாடுகளில் சிறுவர்களுக்கு மூன்று பாஷைகள் வரை கற்பிக்கப்படுகின்றன. மேல் நாட்டுச் சிறுவர்களுக்கு நம் சிறுவர்கள் அறிவிலும் ஆற்றலிலும் குறைந்தவர்கள் அல்ல. அதனால் ஹிந்தி மொழியைக் கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும்!

வகுப்புகளில் 60 மாணவர்களுக்கு மேற்பட்டு விட்டால் முப்பது மாணவர்களைத் தோட்ட வேலை முதலிய வெளி வேலைகளைச் செய்யும்படி விட்டு விட்டுப் பாக்கி முப்பது மாணவர்களுக்கு மூன்று மணி நேரம் பாடம் நடத்தலாம். அடுத்த ஷிப்டில் "வெளி வேலை"களில் ஈடுபட்டிருந்த மாணவர்களுக்கு வகுப்பு நடத்தலாம் என்று "வெள்ளை அறிக்கை" யோசனை சர்வ ஜாக்கிரதையாகக் கூறுகிறது.

மொத்தத்தில் புதுக் கல்வித் திட்டத்துக்கும் பழைய மெக்காலே கல்வி முறைக்கும் விசேஷ மாறுதல் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை!

வளரும் தமிழ் வாழியவே!

ஆதி காலத்திலே தமிழைப் பேரரசர்கள் போற்றி வந்தார்கள். தமிழ்ப் பாவாணர்களை மனமுவந்து வரவேற்று அவர்கள் நூல்களைக் கேட்டு மகிழ்ந்து பரிசில்கள் வழங்கினார்கள். அரசர்கள் இல்லாத ஊர்களில் பெருங்கொடை வள்ளல்கள் ஆதரித்து வந்தார்கள்!

ஆனால் இன்றைய ஜனநாயக யுகத்திலே அத்தகைய அரசர்களுக்கு எங்கே போவது! எனவே கலைகளையும் இலக்கியத்தையும் தக்கபடி போற்றிக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு சர்க்காரிடம் அமைந்து விட்டது.

சென்னை சர்க்கார் தமிழில் வெவ்வேறு துறைகளில் வெளியாகும் சிறந்த ஆறு நூல்களுக்குப் பரிசுகள் வழங்குவது என்று திட்டமிட்டுத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மூலமாக ஆண்டுதோறும் வழங்கி வருகிறார்கள்.

1954-ல் வெளியான சிறந்த ஆறு நூல்களை எழுதிய ஆசிரியர்களுக்குத் தலைக்கு ரூ. 500/- வீதம் பரிசு வழங்கி யிருக்கிறார்கள். சென்ற 31-ம் தேதி இந்தப் பரிசளிப்பு வைபவம் சென்னை பல்கலைக் கழகத்தின் செனேட் மண்டபத்தில் திரு வி. ஆர். சீனிவாசன் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பரிசு பெற்ற எழுத்தாளர்கள்



கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை




வித்துவான் பு. ரா. புருஷோத்தம நாயுடு



அ. ச. ஞானசம்பந்தன்



ஆர். வெங்கடராமன் (ஆர்வி)



ஆர். வீரபத்திரன்



டாக்டர் எஸ். திரிபுரசுந்தரி (லக்ஷ்மி)

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் காரியதரிசியான திரு பெரியசாமித் தூரன் ஆண்டறிக்கையைப் படித்தார்.

கவிதைத் துறையில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுடைய "தேவியின் கீர்த்தனங்கள்" என்ற நூலுக்குப் பரிசு கிடைத்துள்ளது. ஆனால் இன்று கவிமணி நம்மிடையில்லை. அவர் உயிருடன் இருந்த காலத்து இப்போட்டியில் கலந்து கொண்டதாலும், பரிசு பெற்றுக் கொள்ள வேண்டிய இச்சமயத்தில் அவர் நம்மிடை இன்மையாலும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் இப் பரிசுத் திட்டம் தெய்விகம் அடைந்து விட்டது என்று முடிவுரையில் திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் கூறிய மொழிகள் நூற்றுக்கு நூறு உண்மை என்று அங்கிருந்தவர்கள் அனைவரும் உள்ளத்தால் ஆமோதித்தனர்.

இயற்கை, விவசாயம் இத்துறையில் திரு ஆர். வீரபத்திரன் அவர்கள் எழுதிய "இயற்கையின் விந்தை" என்ற நூல் பரிசு பெற்றது. ஆராய்ச்சித் துறையில் திரு அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் எழுதிய "இலக்கியக் கலை" என்ற நூலுக்குப் பரிசு கிடைத்தது. சிறுகதைப் பகுதியில் திரு ஆர். வெங்கடராமன் (ஆர்வி) எழுதிய "குங்குமச் சிமிழ்" என்ற புஸ்தகத்துக்கும், கல்வி முறை, தத்துவம், மனத்தத்துவம், சமயம் ஆகியவை கொண்ட துறையில் வித்வான் பு. ரா. புருஷோத்தம நாயுடு அவர்கள் பதிப்பித்த "திருவாய் மொழி"க்கும் பரிசுகள் வழங்கப் பட்டிருக்கின்றன. வைத்தியம், சுகாதாரம் என்ற துறையில் டாக்டர் திரிபுரசுந்தரி (லக்ஷ்மி) எழுதிய "குழந்தை வைத்தியம்" என்ற நூலுக்குப்பரிசு வழங்கப்பட்டது.

தற்சமயம் தென் ஆப்பிரிக்காவில் இருக்கும் டாக்டர் திரிபுரசுந்தரியைத் தவிர, மற்ற நூலாசிரியர்கள் எல்லாரும் கல்வி மந்திரி பரிசு வழங்க நேரே வந்து பொதுமக்களின் மகிழ்ச்சிக் கிடையே வாங்கிச் சென்றனர்.

இப்பரிசுகளை வழங்கியபின் கல்வி மந்திரி தம் சொற்பொழிவில் ஒரு விஷயத்தைச் சொன்னார். சமீபத்தில் நடைபெற்ற அமிருதசரஸ் காங்கிரஸில் திரு சுப்பிரமண்யம் "நமது தேச மொழிகளுக்குப் புது ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் இத்தகைய பணிகளை மத்திய சர்க்காரே மேற்கொள்ள வேண்டும். அப்படி மேற்கொண்டால் மத்திய சர்க்கார் ஒரு மொழியிடத்து அதிகச் சலுகை காட்டுகிறது என்ற வீண் அபவாதம் நீங்கும்!" என்று சொன்னாராம். இந்த யோசனையைப் பாரதப் பிரதமர் நேரு அங்கீகரித்து அதற்கான வேலைகளில் ஈடுபட்டு விட்டார் என்றும், தமிழ் மொழிக்காக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் பரிசு பெற்ற ஆசிரியர்களையும், நூல்களையும் பற்றி வெகு ரஸமாக அறிமுகப்படுத்தி, விழாவுக்கு விஜயம் செய்தவர்களுக்கும் நன்றி கூறினார்!

என்ன சேதி?

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

பம்பாய்த் தமிழர்களின் மொழி அபிமானத்தின் சின்னமாக விளங்கி வருகிறது பம்பாய்த் தமிழ்ச் சங்கம். சென்ற பதினாறு ஆண்டுகளாகப் பம்பாய்த் தமிழ்ச் சங்கம் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் ஆற்றி வரும் தொண்டு அபாரமானது. குறிப்பாக இலக்கியமும், இசைக்கலையும் வளருவதற்கு மிகச் சிறந்த முறையில் சேவை செய்து வருகிறது.

தமிழ் நாட்டை விட்டு எத்தனையோ நூறு மைல்களுக்கு அப்பால் சென்று பம்பாயில் குடியேறி யிருந்தாலும் தமிழ் மக்கள் தங்கள் விழாக்களைக் கொண்டாடாமல் விடுவதில்லை. அதற்கு உறு துணையாகப் பம்பாய்த் தமிழ்ச் சங்கம் பம்பாயில் உள்ள தமிழ் மக்களின் மகிழ்ச்சிக்காக எத்தனையோ விழாக்களை விடாமல் நடத்தி வருகிறது. தமிழ் ஆண்டுப் பிறப்பு, பொங்கல் திருநாள் போன்ற தமிழ்நாட்டு விழாக்களையும், காந்தி ஜயந்தி, சுதந்திர தினம் போன்ற தேசிய விழாக்களையும், தென்னு தமிழில் இறவாப் பெருங் காவியங்கள் இயற்றிய கம்பர், வள்ளுவர், பாரதி போன்ற மகாகவிகள் நாட்களையும், இன்னும் தற்காலத்தில் தமிழ் வளர்த்த பெரியார்களின் நினைவு நாட்களையும் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

இந்த விழாக்களுக்குத் தமிழ் நாட்டில் இருந்து பல பேரறிஞர்களை வரவழைத்து, அவர்களைக் கொண்டு அருமையான பல சொற்பொழிவுகளை நிகழ்த்தச் செய்து பம்பாய்த் தமிழ் மக்களுக்கு, பம்பாய்த் தமிழ்ச் சங்கம் ஆற்றி வரும் தொண்டை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இவ்வாறு தமிழ் மக்களுக்குச் சேவை செய்து வரும் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்துக்குச் சொந்தமாகக் கட்டடம் இல்லாத குறை பெருங் குறையாக இருந்து வந்தது. அந்தக் குறையைப் போக்குவதற்காகச் சென்ற நான்கு ஆண்டுகளாகக் கலை நிகழ்ச்சிகளும், நாடக விழாக்களும் நடத்திப் பொருள் திரட்டி வந்தனர். இவ்வாறு திரட்டிய நிதியுடன் தமிழ்ப் பெருமக்கள் அள்ளிக் கொடுத்த பொருள் உதவிகளையும் சேர்த்துச் சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் அற்புதமான தமிழ் மண்டபம் ஒன்றை நிறுவியுள்ளனர். தமிழ் மண்டபம் கட்டி முடிவதற்கு இன்னும் ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் துண்டு விழுகிறது. அதற்காக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைக் கச்சேரிக்குப் பம்பாய்த் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. மாதுங்கா, கிங் சர்க்கிளுக்கு அருகே பம்பாய் ஸ்ரீ ஷண்முகானந்தா சங்கீத சபாவுக்குச் சொந்தமான இடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் விசேஷப் பந்தலில் ஏப்ரல் மீ 15உ நடைபெறப் போகும் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் கச்சேரிக்குப் பம்பாய் வாசிகள் திரளாகச் செல்வதன் மூலம் இரண்டு பலன்களைப் பெறலாம். நல்ல சங்கீதத்தைக் கேட்டு அனுபவிப்பதுடன், 'பம்பாய்த் தமிழ்ச் சங்கக் கட்டட நிதிக்குப் பொருள் வழங்கிய புண்ணியத்தையும் பெறலாம்.


“ ரயில்வே வாரம் ”

சென்ற வாரம் பத்திரிகையாளர் கூட்டத்தில் தென் இரயில்வே பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு கே. சீனிவாசன், இம்மாதம் 10-ம் தேதி முதல் 16-ந் தேதி வரை நடைபெற விருக்கும் ரயில்வே வாரக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி விளக்கினர்.

பாரத நாட்டில் ரயில் ஓடத் தொடங்கி இன்றைக்கு நூற்று மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இந்த நூற்று மூன்றுவது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடப் பாரத சர்க்கார் விரிவான ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

சுதந்திரத்துக்கு முன் பிரிட்டிஷ் முதலாளிகளின் தனி உடைமையாக இருந்து வந்த ரயில்வே ஸ்தாபனம் சுதந்திரத்துக்குப் பின் பாரததேச மக்களின்—சர்க்காருக்கு உடைமையாகி விட்டது. தேச மக்கள் தங்கள் சொத்தை எப்படிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை விளக்கவும், சர்க்கார் தாங்கள் ரயில்வேயில் என்னென்ன சீர்திருத்தங்கள் செய்து வருகிறார்கள் என்பதைப் பொதுமக்களுக்கு உணர்த்தவும் இந்த வாரம் கொண்டாடப்படுகிறது. ரேடியோ ஒலிபரப்புகளும் சென்னை எழும்பூர், மதுரை, விஜயவாடா, பெங்களூர் முதலிய ஸ்டேஷன்களில் ரயில்வே சம்பந்தமான கண்காட்சிகளும் ஏற்பாடு செய்யப்படும். சென்னை சென்ட்ரல், எழும்பூர், கோயமுத்தூர், தஞ்சை, திருச்சிராப்பள்ளி இப்படி முக்கியமான இருபது ஸ்டேஷன்களில் பொதுமக்களிடம் கார்டுகள் வழங்கப்படும். இந்தக் கார்டுகளில் ரயில்வேக்களைச் சீர்திருத்தப் பொது மக்கள் என்னென்ன யோசனைகள் சொல்ல விரும்புகிறார்களோ அவற்றை எழுதித் தபால் பெட்டியில் போட்டு விடலாம். பொது மக்களுக்குத் தபால் தலை

என்ன மாற்றம்?



கல்வித் திட்டத்தில் புதிய மாறுதல்களைப் புகுத்தியிருப்பதாகச் சென்னை அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

வாங்கி ஓட்ட வேண்டிய சிரமம் கூடக் கிடையாது. இந்தத் திட்டத்தைப் பொது மக்கள் மனமுவந்து வரவேற்பார்கள் என்று நினைக்கிறோம்.

சென்னைக் கடற்கரையிலிருந்து தாம்பரம் வரை ஓடும் மின்சார வண்டிகளில் புது இத்தாலி நாட்டு 'பிரடா கோச்' வண்டிகள் இந்த வாரத்தின் போது முதன் முறை ஓட்டப்படும். இருபது ஆண்டுகளுக்கு மேலாகிறது பழைய வண்டிகளை மாற்றி. இப்புது வண்டிகள் சுமார் 310 பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் வசதி பெற்றவை என்று கூறப்படுகிறது. இந்தப் புது மாதிரி வண்டிகள் இப்பொழுது இரண்டு தான் விடப்படும். விரைவில் இன்னும் நான்கு வண்டிகள் விடப்படும் என்று அறிகிறோம். இவைகள் வந்தால் இப்பகுதியில் வாழும் பொதுமக்கள் நெருக்கியடித்துக் கொண்டு பிரயாணம் செய்யும் தொல்லை பெருமளவு குறையும் என்பதில் ஐயமில்லை.

அம்பர் சர்க்கா

"ஆடுராட்டே சுழன்றாடு ராட்டே"

என்று ராட்டை சுற்றியே இந்த நாட்டைப் பெற்றோமல்லவா? அதைப் போலவே ராட்டை சுற்றியே இந்த நாட்டை வளர்க்கவும் இப்போது வழி தோன்றியிருக்கிறது.

சென்ற சில காலமாக அம்பர் சர்க்காவைப் பற்றியும் அதன் உபயோகம் குறித்தும் ஆராய்ச்சிகளும் சர்ச்சைகளும் நடந்து வருவதை நேயர்கள் அறிந்திருப்பார்கள். நமது நாட்டில் நூறு இடங்களுக்கு மேல் சோதனை செய்து நாட்டு மக்களுக்கு அம்பர் சர்க்கா ஓர் இன்றியமையாத சாதனம் என்று சர்க்கா கமிட்டியார் தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். ஒரு லட்சம் சர்க்காக்களை உற்பத்தி செய்யவும் திட்டம் வகுத்திருக்கிறார்கள்.

நமது சென்னை ராஜ்யம் ஏற்கனவே நூற்புக்கும், நெசவுக்கும் பிரசித்தி பெற்ற இடம். அம்பர் சர்க்காவை முதல் முதலாகக் கண்டு பிடித்து வழங்கிய பெருமையும் நம்மையே சேரும்.

இந்திய நாடு ஏழை விவசாய நாடு. தொழில் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் இன்னும் எத்தனையோ வளர்ச்சி அடைய வேண்டும். விவசாயத்தையே முக்கியமாக நம்பிக் கொண்டிருக்கும் பெரும்பாலோரான விவசாயிகள் அம்பர் ராட்டை மூலம் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம். தங்கள்

சொந்தத் தேவைகளையும் நிரப்பிக்கொள்ளலாம். ஒரு அம்பர் சர்க்காவின் மூலம் ஒரு பெரியவர், ஒரு சிறுவன் ஆக இரண்டு பேர் வேலை செய்தால், மாதம் ஒன்றுக்குத் தொண்ணூறு ரூபாய் சம்பாதிக்க முடியும் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். மில்லில் தயாராகும் நூலைக் காட்டிலும் சிறந்த நூல்களை உற்பத்தி செய்யலாமென்றும் மில் நூலை விடக் குறைந்த விலையில் விற்க முடியுமென்றும் கூறப்படுகிறது.

கோவை டெக்ஸ்டூல் கம்பெனி ஒன்றில் அம்பர் சர்க்காவைப் பல முன்னேற்ற அம்சங்களுடன் தயாரித்திருப்பதாகவும் அறிந்து மகிழ்கிறோம்.

எழுத்தாளர் சங்கம்


தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆண்டு விழாவை இம்மாதம் 7, 8 தேதிகளில் வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. முதல் நாள் 7ம் தேதி மாலை 6 மணிக்கு மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபாவில் கல்வி மந்திரி திரு சி. சுப்பிரமண்யம் விழாவைத் துவக்கி வைக்கிறார். ரஸிகமணி டி. கே. சி. யின் திரு உருவப் படத்தை ராஜாஜி அவர்கள் திறந்து வைக்கிறார்கள்.

இவ்வாண்டு முது பெரும் புலவரான ஸ்ரீ வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் அவர்களுக்கும், மாசு மறுவற்ற ஆராய்ச்சியாளரான பெரியார் திரு சதாசிவ பண்டாரத்தார் அவர்களுக்கும் கேடயப் பரிசுகள் வழங்குவதன் மூலம் எழுத்தாளர் சங்கம் தன்னைத் தானே கௌரவித்துக் கொள்கிறது. இப் புலவர்கள் இயற்றிய நூல்களை யானைமீது வைத்து மயிலையிலுள்ள திருவண்ணாமலை ஆதீன மடத்திலிருந்து ரஸிக ரஞ்சனி சபைக்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப் போகிறார்கள். பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை, 'கல்கி' ஆசிரியர் திரு சோமு, திரு கி. வா. ஜகந்நாதன், திரு டி. ஜகந்நாதாச்சாரியார் முதலியோர் இப் புலவர்களின் மகத்தான சேவையைப் பாராட்டிப் பேசுவார்கள்.

மறுநாள் மகாநாடு காலை 8-30 மணிக்கு ராஜாஜி ஹாலில் தொடங்குகிறது. "நாடக வளர்ச்சி எந்த வகையில் தேவை?" என்ற விஷயம் பற்றிய விவாதத்தை நாடகாசிரியர் ப. சம்பந்த முதலியார் அவர்கள் துவக்கி வைக்கிறார்.

மாலை இவ்வாண்டு சிறந்த கதைகள், கட்டுரைகள் எழுதியவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். மாலை நிகழ்ச்சிகளில் திரு ம. பொ. சி, திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரி, திரு பெரியசாமித் தூரன், திரு பி. எஸ். ராமய்யா முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஈஸ்வரன் – மனோரஞ்சிதம்



சென்ற 22-3-56 வியாழக்கிழமை நெகமம் க. தி. கந்தசாமி செட்டியார் பௌத்திரியும் கே. ஆர். காமாட்சி செட்டியார் குமாரத்தியுமான

கே. மனோரஞ்சிதத்திற்கும்

திருப்பூர் எஸ். சங்கரன் செட்டியார் பௌத்திரனும், ராம்ராஜ் நிட்டிங் கம்பெனி பாகஸ்தரும், லட்சுமி ரைஸ் மில் நிர்வாகஸ்தருமான எஸ். சவுண்டப்ப செட்டியார் சகோதரனுமான

எஸ். ஈஸ்வரனுக்கும்

பொள்ளாச்சி தாலூகா பெரிய நெகமம் பெண் வீட்டார் இல்லத்தில் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. அன்று நகர பிரபலஸ்தர்களும் பந்துக்களும் வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்தார்கள்.

அட்டைப்பட விளக்கம்

கடல் கண்ட கனவு

'நீலத் திரைகடல் ஓரத்திலே-நித்தம்
நின்று தவம் செய் குமரியெல்லை-வட
மாலவன் குன்றம் இவற்றிடையே-புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு'

என்று பாரதியார் பாடினார்.

"வடவேங்கடம் தென் குமரி
ஆயிடைத்.
தமிழ் கூறு நல்லுலகம்"

என்பது தொல்காப்பியத்தின் பாயிரப் பாடல்.

மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த நாடு நம்முடைய செந்தமிழ் நாடு. இந்தத் தெய்வத் தமிழ் நாட்டின் பேரில் அந்தக் கருநீலக் கடலுக்குக் கரைகாணாத காதல்! தன்னுடைய நீண்ட இரண்டு கைகளையும் பரந்து நீட்டி, அன்போடு செந்தமிழ் நாட்டைத் தழுவி அணைத்துக் கொண்டு ஓய்வு ஒழிவில்லாத காதல் கீதங்களைப் பாடிக் கொண்டே அலை வீசுகிறது அந்த முக்கடல்! அந்த ஓசையிலே காதல் மட்டுந்தானா ஒலிக்கிறது! மூங்கி மூழ்கிப் போன புகழ்பெற்ற சாம்ராஜ்யங்கள் பலவற்றின் இதயம் அந்த ஓசை ஒலியிலே துடிக்கிறது. மறைந்து மாய்ந்து விட்ட எத்தனையோ இலக்கியங்களின் ஜீவநாடி, அவற்றைப் பாடிய மாசற்ற புலவர்களின் இலக்கிய நெஞ்சங்கள்—இவற்றின் துடிப்பும் அந்த நீலக் கடலின் ஓசையிலே துடிதுடிக்கிறது. எத்தனை காதல்கள்! எத்தனை கனவுகள்! எத்தனை ஆசைகள்! அந்த நீலக் கடலின் ஆழத்திலே கிடந்து எத்தனை ஆயிரம் இதயங்கள் பெருமூச்சு விடுகின்றன!

'கலங்கரை விளக்கம்' என்று தமிழ் இலக்கியங்களிலே வர்ணிக்கப்படுகிற Light House ஒன்று அதோ நிற்கிறது. அதன் கரையிலே எத்தனை அதிசயமான காட்சி!

திரைகள் ஓலமிடுகிற அந்த நீல மயமான கடலின் பரப்பிலே படகு தவழ்ந்து செல்லப் போகிறது. அந்தப் படகினுள், பால் மணம் மாறாத அந்தப் பச்சிளம்குழந்தையை வலம்புரிச் சங்கோடு சேர்த்து வைத்துக் கடலிலே மிதக்க விட்டு விடுகிறாள் அவள்! வெறுப்பினாலா! வஞ்சகத்தினாலா! அந்தக் குழந்தையிடம் ஏற்பட்ட பகைமையினாலா! இல்லை! அன்பினால்! எல்லையற்ற பாசத்தினால்! அந்தக் கடலைப் போலக் கரைகாணாத வாஞ்சையினால் அப்படிச் செய்கிறாள் அவள்! அவள் அந்தக் குழந்தையின் தாய். அருமை அன்னை!

ஆம்; அன்பின் சக்தி அது! இன்னொருத்தி பெற்ற குழந்தையானால் வேறு விதமாகச் சொல்லுவோம். அது அவள் பெற்ற குழந்தை. ராஜபோகங்களிலே பிறந்து, பட்டு மெத்தையிலே தவழ்ந்த குழந்தை அது! தமிழ் நாட்டு அரசப் பண்பாடு சரீரம் முழுதும் பாய்ந்து ஓடுகிற பாலகன் அவன்.

கண்ணற்ற தீவிலே இருந்து, கண்ணற்ற கடலிலே கொண்டு போய்ப் படகிலே வைத்துத் தள்ளிவிட வேண்டும் என்றால், அந்தக் கன்னுள்ள தாயினால் எப்படி முடிந்தது!

ஒரு தாயின் உள்ளத்திலே உள்ள பாசத்தின் தன்மைகளை எப்படிச் சொல்லுவது! இதயத்தின் அந்தரங்கத்திலே உள்ள ஒரு தாயின் கனவுகளையெல்லாம் யார் கண்டார்கள்! அவளுக்குத் தெரியும். அந்தக் கருங் கடலுக்கும் தெரியும்! பிறர் கண்ட கனவுகளையெல்லாம், தமிழ் நாட்டைச் சுற்றி வளைந்து நிற்கும் அந்த ஆழமான பரந்த கடல் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தது. வெளியுலகம் காணாத கனவுகளையெல்லாம் தன் உள்ளத்திலே வைத்து வைத்துப் பொருமிப் பொங்கியது அந்த நீலக்கடல்! நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகப் பொங்கிப் பொங்கி அலை வீசிக் கொண்டிருக்கிறது அது!



இளவரசிகளின் காதல்கள், இளவரசர்களின் இலட்சியங்கள், தீவுகளிலே சென்று கொடி நாட்டிய சிங்கங்களின் போர்கள், தாயுள்ளங்களின் பாசம், வீராதி வீரர்களான தேச பக்தர்களின் ஆவேசக் கனல் — இத்தனையும் கடல் கண்ட அந்தக் கனவிலே திரைப்படச் சுருளாக, அலை அலையாக எழுந்து வருகிறது.

"கடல் கண்ட கனவு" — அடுத்த வாரம் ஏப்ரல் 15ந் தேதி தமிழ்ப் புத்தாண்டு மலரிலே ஆரம்பமாகிறது. அந்தக் கனவில் இனித் தோன்றப் போகும் ஒரு காட்சியை இந்த இதழிலே வர்ண அழகும், இதய உணர்ச்சியும் நிரம்பிய மூவர்ண அட்டைப்படமாக வழங்குகிறார் நமது ஓவியர் 'மணியம்.'

காணாத  பேட்டி

"விடாக்கண்டர்"

"விடக் கூடாது; விடக் கூடாது" என்று பலமாகக் கூவிக் கொண்டே நமது முதன்மந்திரி ஸ்ரீ காமராஜ் முன்னிலையில் போய் நின்றேன்.

சட்டசபையினர் ஹாஸ்டல் தினக் கொண்டாட்டத்தில் 'டக் - ஆப் - வார்' போட்டியில் தீவிரமாக ஈடுபட்டிருந்த அவர் என்னைக் கண்டதும், "வாரும், விடாக்கண்டரே! இக் கயிற்றைத் தானே சொல்கிறீர்! நானா விடுவேன்" என்றார்.

"இல்லை; கயிற்றைச் சொல்லவில்லை!"

"பின், என்னத்தைச் சொல்கிறீர்?"

நான் இரண்டு விரல்களை அவருக்குக் காட்டி, "எங்கே? நான் என்னத்தைச் சொல்கிறேன் என்று ஊகித்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றேன்.

"சொல்லட்டுமா!" என்றார் அவர்.

"உம்."

"முதல் மந்திரிப் பதவியை!......"

"இல்லை, தப்பு; அதைத் தாங்கள் விட மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்" என்று மீண்டும் இரட்டை விரலைச் சுட்டிக் காண்பித்தேன்.

முதல் மந்திரி தமது தலையைத் தடவி விட்டுக் கொண்டு மீண்டும் யோசித்தார். பிறகு; "எனக்குப் புரியவில்லை; நீரே சொல்லும்" என்றார்.

"தட்சிணப் பிரதேசம் வேண்டுமா?— வேண்டாமா?— இந்த இரண்டில் தாங்கள் எதை ஆதரிக்கிறீர்கள்?" என்றேன்.

"நான்தான் அதை ஆரம்பம் முதல் ரொம்பத் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேனே! இதில் உமக்கு என்ன சந்தேகம்?"

"அப்படியா?" என்று என் தலையைத் தடவிக் கொண்டேன். பிறகு, "எனக்குப் புரியவில்லை; தாங்களே சொல்லுங்கள்" என்றேன்.

"தட்சிணப் பிரதேசம் சம்பந்தமாக மக்கள் தீர்ப்பே முடிவானது. அவர்கள் அபிப்பிராயப்படியே நடந்து கொள்வேன். இதைத்தான் நான் ஆரம்பம் முதல் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதில் உனக்கு எப்படிச் சந்தேகம்வந்தது!"

"இதில் தங்களுக்கென்று ஒரு தனி அபிப்பிராயம் கிடையாதா?"

"அதுதான் சொன்னேனே; மக்கள் அபிப்பிராயம்தான் என் அபிப்பிராயம் என்று......"

"தாங்கள் தான் சரியான விடாக்கண்டர்!......"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?......"

"இந்த ஒரே அபிப்பிராயத்தைத் திருப்பித் திருப்பி விடாப்பிடியாகச் சொல்லிக் கொண்டிருப்பதால்தான்."

"முதலில் எதையோ 'விடக் கூடாது, விடக்கூடாது' என்று சொல்லிக்கொண்டு வந்தாயே, அது என்ன?"

"தட்சிணப் பிரதேசம் விஷயமாகக் குட்டை குழப்பிக் கொண்டிருக்கிறீர்களே, அதைத்தான் சொன்னேன்."

"குட்டை குழப்பிக் கொண்டிருக்கிறேனா?......"

"ஆமாம்; தங்கள் கருத்து என்ன என்பதைச் சொல்லாமலேயே, எதிலும் பிடிபடாமல் வழுக்கிக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? அதன் மர்மம் எனக்குத் தெரியும்."

"மர்மமா!......அது என்ன?...உனக்கு எப்படித் தெரியும்?" என்று ஆச்சரியத்துடன் வினவினார் முதல் மந்திரி.

"சொல்லட்டுமா!"

"சொல், பார்க்கலாம்."

"இந்தச் சமயத்தில் பொது மக்களுக்குப் பிடித்தமில்லாத எந்த அபிப்பிராயத்தைச் சொன்னாலும் அதனால் தேர்தல் சமயத்தில் இடைஞ்சல் ஏற்படும். தட்சிணப் பிரதேச விஷயம் அபிப்பிராய பேதமுள்ள விஷயம். இதில் அபிப்பிராயம் கூறினால் யாராவது ஒரு சாராருக்கு அது பிடிக்காது. தேர்தலின்போது அது நம்மைப் பாதிக்கும். அதனால் பொது மக்களின் விருப்பப்படி நடக்கும் என்று கூறிச் சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டீர்கள்; இல்லையா? இதுதானே ரகசியம்!"

"விடாக்கண்டரே, நீர் பலே பேர்வழி? ரகசியம் எதுவாயிருந்தாலும் அதில் நான் மௌனம்" என்றார் முதல் மந்திரி.

"அதுதான் சரி; விடக்கூடாது; மௌனத்தை விடக்கூடாது" என்று சொல்லிக் கொண்டே தில்லிக்குப் பறந்து சென்றேன்.

இங்கே நம் ஊர் மந்திரிகளெல்லாம் விளையாட்டுப் போட்டியில் ஈடுபட்டிருந்ததைப் போல அங்கே தில்லி மந்திரிகள் எல்லோரும் ஹோலிப் பண்டிகையை 'ஜாலி'யாகக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் செந்நீர் விழாவில் குதூகலம் பிரவகித்து ஓடியது. பண்டித ஜவாஹரும் ருஷ்ய உதவிப் பிரதமர் மிகோயனும் ஆரத்தி ஸ்நானம் செய்து ஆனந்தப் பட்டுக்கொண்டிருந்தார்கள். நான் பிரத

மரை அனுபவி "விட்டு விடுங்கள், விட்டு விடுங்கள்" என்றேன்.

"யாரை? பீகோயனையா சொல்கிறாய்? முடியாது, விடமுடியாது; கண்டிப்பாய் விட முடியாது. நான் ருஷ்யாவுக்குப் போயிருந்த போது இவர்கள் என்னை என்ன பாடு படுத்தி வைத்தார்கள் தெரியுமா! அமோக வரவேற்பு அளித்து என்னைத் திக்குமுக்காடச் செய்து விட்டார்கள். அதற்குப் பதிலாக இப்போது வகையாக அகப்பட்டுக் கொண்டார்..." என்றார் பிரதமர்.

"பீகோயனைச் சொல்லவில்லை நான். காஷ்மீரைச் சொல்கிறேன்..." என்றேன்.

இதைக் கேட்டதும் ஜவாஹரின் முகம் செக்கச்செவேலெனச் சிவந்தது. அது கோபத்தாலா, செக்கீராலா என்று தெரியவில்லை.

"காஷ்மீரையா விடச் சொல்கிறாய்? யாரைப் பார்த்து அப்படிச் சொன்னாய்...!" என்று ஆக்ரோஷத்துடன் கர்ஜித்தார் பிரதமர்.

"காஷ்மீரைச் சொல்லவில்லை. அந்த விவகாரத்தை மக்களின் தீர்ப்புக்கு விட்டு விடுங்கள் என்று சொன்னேன்."

"அதைத்தான் விட முடியாது என்கிறேன்."

"அது எப்படி?" என்றேன்.

"இந்த விவகாரத்தை ஐ. நா. சபைக்குக் கொண்டு போய் ரொம்பக் காலமாயிற்று. அங்கே காஷ்மீர் மக்களிடம் வோட்டெடுத்து அதன்படி முடிவு கட்டுவதென்று தீர்மானமும் ஆயிற்று. ஆனால் அதற்கு இடைஞ்சலாகப் பாகிஸ்தான் படை காஷ்மீருக்குள் புகுந்து கொண்டிருக்கிறது. அவர்கள் அங்கே இருக்கும் வரை பொதுஜன வாக்கெடுப்பு என்பது நடக்காத காரியம் என்றுதான் கூறுகிறேன்" என்றார் ஜவாஹர்.

"அதுதான் சரியான முடிவு வெளுத்துக் கட்டுங்கள்; கொளுத்தித் தள்ளுங்கள்" என்று கூறிப் பண்டிதரிடம் விடை பெற்றுக் கொண்டேன்.

"விடாக்கண்டரே! நீர் சொல்லுவதின் உள் அர்த்தம் எனக்குத் தெரியும்" என்றார் பண்டிதர்.

"என்ன அது!"

"மக்கள் சபையில் நான் பாகிஸ்தானைப் பற்றி வெளுத்துக் கட்டியதையும் தில்லிச் சேரிகளின் அவல நிலையைக் கண்டு அதைக் கொளுத்தச் சொன்னதையும்தானே சொல்கிறீர்?" என்று என்னைத் திரும்பிப் பார்த்தார்.

நான் இதற்குள் மாயமாய் மறைந்து அமெரிக்காவை அடைந்து விட்டேன். அங்கே அமெரிக்க பிரஸிடெண்ட் ஐஸன்ஹவரைக் கண்டு 'கொடுத்து உதவுங்கள்' என்றேன்.

"யாருக்கு என்ன ஆபத்து? உங்களுக்கும் ராணுவ உதவி தேவையா?" என்று கேட்டார் ஐஸன்ஹவர்.

"வேண்டாம், உங்கள் ராணுவ உதவியைப் பாகிஸ்தானுக்கே அளியுங்கள். தற்சமயம் தங்கள் கையை மட்டும் கொடுத்து உதவுங்கள். தங்கள் கையைக் குலுக்கிச் சபாஷ் போடவேண்டும்?" என்றேன்.

"எதற்கு?"

"எங்கள் பிரதமர் ஜவாஹர்ஜியை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைத்திருக்கிறீர்களே, அதைப் பாராட்டுவதற்குத்தான்."

"இந்தியப் பிரதமரையும் இந்தியாவின் நட்பையும் நாங்கள் என்றென்றும் விரும்புகிறோம்" என்றார் ஐஸன்ஹவர்.

"ரொம்ப சந்தோஷம். எங்கள் பிரதமரின் உண்மையான நட்பைத் தாங்கள் விரும்பினால் உங்களிடமுள்ள அணுகுண்டுகளையும் யுத்தக் கருவிகளையும்............"

"ஏன், நாங்களே அதைத்தானே செய்து கொண்டிருக்கிறோம்? இப்போது கூட வல்லரசுகள் நால்வரும் லண்டனில் கூடி ஆயுதக் குறைப்பு மகாநாடு நடத்தினோமே!"

"ரொம்ப சரி; ஆயுதக் குறைப்பு விஷயம் பேச்சளவில்தானே இருக்கிறது. சொல்வதற்கு நேர்மாருக, காரியத்தில் ஆயுதத்தைக் குறைப்பதற்குப் பதிலாகப் பெருக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அங்கே மகாநாடு நடத்திவிட்டு இங்கே வந்து அணுகுண்டு சோதனை நடத்துகிறீர்கள். அப்புறம் உலக சமாதானம் இந்தியாவின் நட்பு என்றெல்லாம் பேசுவதில் என்ன பயன்?"

"விடாக்கண்டரே! நீர் பொல்லாத பேர்வழி! ருஷ்யாவுக்குப் போய்ப் பாரும். அவர்கள் குறைத்துக் கொண்டால்......"

"எனக்குத் தெரியும், ருஷ்யாவை நீங்கள் நம்பவில்லை. ஆனால் அவர்கள் உங்களை ...."

"விடாக்கண்டரே! அப்படியானால் இப்போது கைவசம் உள்ள அணு குண்டுகளை என்ன செய்கிறதாம்!" என்று கேட்டார் ஐஸன்ஹவர்.

"ஆழ்கடலில் தூக்கி எறியுங்கள்" என்று சொல்லிக் கொண்டு அடுத்த கணம் சென்னைமாநகரில் வந்து குதித்தேன். பதிலுக்குக் காத்திருந்தால் அந்த அணுகுண்டைத் தூக்கி என்ன செய்வாரோ, யார் கண்டார்கள்!

பனித்துளி

"சட்டசபையினர் ஹாஸ்டல் தினவிழாவின் போது நடந்த விளையாட்டுப் போட்டியில் மந்திரிகளும், கவர்னரும் எம். எல். ஏ.க்களும் கயிறு இழுக்கும் பலப் பரீட்சையில் கலந்து கொண்டனர்." —ஒரு செய்தி



சர்க்கார் பஸ்ஸைத் தள்ளும் போட்டி ஒன்று நடத்தி யிருக்கக் கூடாதா என்று அங்கலாய்க்கிறார் ஒரு பஸ் பிரயாணி.

★

"நல்ல நடிகர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பென்ஷன் வழங்க பம்பாய் சர்க்கார் உத்தேசித்திருக்கிறது." —செய்தி

"நல்ல நடிகர்களுக்குப் பென்ஷன் கொடுத்து அனுப்பி விட்டால் அப்புறம் நடிப்புக் கலையின் கதி என்ன ஆவது?" என்று கேட்கிறார் ஒரு ரசிகர்.

★

"செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சென்ற வருஷம் ஜவாஹர்லால் பிரசங்கம் புரிந்த காட்சியை மக்கள் மறக்க முடியாது. ஆகவே கோட்டைக்கு ஜவாஹர் கோட்டை என்று பெயர் வைக்க வேண்டும்." —ஒரு எம். எல். ஏ.

பெயரை மாற்றுவதால் மட்டும் பிரயோஜனமில்லை. அவர் கிழித்த கோட்டையும் தாண்டாமல் இருக்க வேண்டும்.

"சென்னை ராஜ்யத்துக்குப் பூர்வீகத்தில் தமிழ் நாடு என்று பெயர் இருப்பதாகச் சரித்திரத்தில் ஆதாரமில்லை. ஆகையால் இப்போது பெயரை மாற்ற வேண்டிய அவசியமில்லை."

ஒரு மந்திரி

பூர்வீகத்தை ஞாபகப்படுத்திக் கொள்ளுகிற பழக்கம், பெயரளவிலாவது இருக்கிறதே என்று மகிழ்ச்சி யடையலாமா?

★

"ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு குரங்கு மனிதனுடைய ராட்சதப் பல் ஒன்று சீனுவில் கண்டெடுக்கப் பட்டது." —செய்தி

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதோ!

★

"புதிய கல்வித் திட்டத்தில் பள்ளிக்கூடத்தில் சிறுவர்களைச் சேர்க்கும் வயது ஐந்து என்று இருப்பதை ஐந்தரையாக மாற்றி யிருக்கிறார்கள்." —செய்தி



பள்ளிக்கூடத்தில் 'அட்மிஷன்' கிடைப்பதற்கு அரை ஆறுமாத காலமாவது அவகாசம் வேண்டுமல்லவா!

பத்திரிகைகள் சங்கத் தலைவருக்குப் பாராட்டு

சென்ற மாதம் 24-ம் தேதி 'கல்கி' காரியாலயத்தின் அழகிய நந்தவனத்திலே ஓர் அருமையான தேநீர் விருந்துபசாரம் சிறப்பாக நடைபெற்றது. 'ஹிந்து' பத்திரிகையின் ஜெனரல் மானேஜரான திரு ஜி. நரஸிம்மன் அவர்கள் இந்திய - கிழக்குலக பத்திரிகைகள் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு அவரைப் பாராட்டி 'கல்கி' மானேஜிங் டைரக்டர் திரு சதாசிவம் ஓர் விருந்து நடத்தினர். இந்த வைபவத்துக்குச் சென்னை மேயர் ராமநாதய்யர், 'ஹிந்து' பத்திரிகை ஆசிரியர் திரு கே. சீனிவாசன், திரு ரகுநாதய்யர், 'மெயில்' பத்திரிகை ஆசிரியர் ஆலன் டெய்லர், திரு காஸா சுப்பராவ், ஸ்ரீ பகவன் தாஸ் கோயங்கா, ஸ்ரீ வி. எஸ். நரசிம்மன், 'கலைமகள்' ராமரத்னம் முதலிய பல பிரமுகர்களும், விளம்பர ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் விஜயம் செய்து சிறப்பித்தனர்.

'கல்கி' ஆசிரியர் திரு மீ. ப. சோமசுந்தரம் "தமிழ் நாட்டுப் பத்திரிகையாளர் அனைவரும் மிகுந்த மதிப்போடு எப்பொழுதும் நினைத்து வரும் பெரியார் கஸ்தூரி ரங்கய்யங்கார். அவருடைய குடும்பத்தில் வந்தவரான திரு ஜி. நரஸிம்மன் பத்திரிகையுலகில் மேலும்மேலும் வெற்றிகள் பெறுவாராக" என்று பாராட்டிப் பேசினர்.

அடுத்தாற் போல் திரு காஸா சுப்பராவ், விளம்பர ஸ்தாபனங்களின் சார்பில் திரு கே. ஆர். எஸ். வரதன் முதலியோர் தமது பாராட்டுரைகளைத் தெரிவித்தனர்.

திரு ஜி. நரஸிம்மன் நன்றி தெரிவித்துப் பேசினர்.

இவ் வைபவத்தின் சில காட்சிகளைப் பக்கத்திலுள்ள படத்தில் காணலாம் :—

1. மேயர் ராமநாதய்யர், திரு கே. சடகோபன், திரு கே. சீனிவாசன், திரு வி. எல். நாசு முதலிய பிரமுகர்களின் வருகை. 2. பெண்களில் ஒரு பகுதி. 3. திரு சதாசிவம் திரு ஜி. நரஸிம்மனுக்கு மாலை அணிவிக்கிறர். 4. 'கல்கி' ஆசிரியர் சோமு வரவேற்புரை நிகழ்த்துகிறர். 5. வந்திருந்த விருந்தினர்களில் மற்றொரு பகுதி. 'காஸா சுப்பராவ், திரு ரகுநாதய்யர், திரு கே. ஆர். எஸ். வரதன் முதலியவர்களைக் காணலாம்.





பெரிய மனிதர்

ஸோமாஸ்

சென்னைக்கு வந்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் சிவராமனுக்கு ஒரு வேலை கிடைக்கிற வழியாயில்லை. அவனும் வேலை தேடும் முயற்சியை நிறுத்தவில்லை.

இந்தச் சமயத்தில் அவன் மாமாவிடமிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது.

"அன்புள்ள சிவராமனுக்கு,

அநேக ஆசீர்வாதம். நீ வேலைக்காகப் பட்டணத்தில் சுற்றி அலைவது பற்றி உன் அப்பா எழுதியிருந்தார். அடையாற்றில் என் நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் ஒரு பெரிய மனிதர். செல்வாக்குள்ள ஒரு தொழில் அதிபர். இத்துடன் அவருக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் வைத்திருக்கிறேன். அவர் அவசியம் உதவி செய்வார். அவரைப் பார்த்த பிறகு எனக்குக் கடிதம் எழுது. இப்படிக்கு,

சங்கரன்"

இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் சிவராமனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. மறுநாள் ஞாயிற்றுக் கிழமையாயிருப்பதனால் பெரிய மனிதரைப் பார்ப்பதற்கு அதை விடச் சௌகரியமான நாள் கிடைப்பது சிரமம். ஆகவே, சிவராமன் ஞாயிற்றுக் கிழமை காலை, கன ஜோராக உடுத்திக் கொண்டு, முதல் பஸ்ஸிலேயே புறப்பட்டு, அடையாறு போய்ச் சேர்ந்தான். சுமார் ஏழரை மணிக்கெல்லாம் அவர் பங்களாவுக்குள் நுழைந்து விட்டான். அவன் அதிர்ஷ்டம் நாயோ, வேலையாளோ யாரும் அவன் எதிர்பார்த்தபடி அவனைத் தடுத்து நிறுத்தவில்லை. அந்தப் பங்களா பெரிய தோட்டத்தின் நடுவில் அமைந்திருந்தது. தோட்டம் முழுவதும் வண்ண மலர்கள் நிறைந்து வான வில்லின் வர்ண ஜாலங்களை அள்ளி வீசின.

அமைதி குடிகொண்டிருந்த பங்களாவின் தாழ்வாரத்துக்குத் தயங்கிக் கொண்டே சிவராமன் போய்ச் சேர்ந்தான்.

உடனே வேலைக்காரன் வெளியே வந்து, "யாரு நீங்க, உக்காருங்க" என்று கூறி, சிவராமனை உட்காரச் சொன்னான்.

சிவராமனுக்கு இது அதிசயமாயிருந்தது. அவன் சாதாரணமாகப் பெரிய மனிதர்கள் வீட்டில், யார் வந்தாலும் யார் போனாலும் லட்சியம் செய்ய மாட்டார்கள் என்று கேட்டிருக்கிறான். வேலையாள் தான் வந்த உடனே தன்னை விசாரித்ததை அவன் ஒரு நல்ல சகுனமாக நினைத்தான்.

"எஜமான் இருக்கிறாரா? அவரை நான் இப்பொழுது பார்க்க முடியுமா?" என்று கேட்டான் சிவராமன்.

வேலையாள் தலையைச் சொறிந்தபடி மௌனமாக நின்றான்.

"ஏன் தயங்குகிறாய்? என்னை உள்ளே எப்படி அனுப்புவது என்றுதானே? இந்தா, இந்தக் கடிதத்தை அவரிடம் கொடு. அப்புறம் அவர் சொல்லுகிறபடி நட" என்று சொல்லி, அவன் மாமாவிடமிருந்து வந்த சிபாரிசுக் கடிதத்தை வேலையாளிடம் கொடுத்தான்.

வேலையாள் உள்ளே போய் விட்டு, சிறிது நேரம் கழித்து வெளியே வந்து, "ஐயா உங்களை உள்ளே வரச் சொன்னாருங்க!" என்றான்.

சிவராமனுக்குத் தன் தலையில் யாரோ பனிக்கட்டியை வைப்பது போலிருந்தது. அவன் இவ்வளவு சுலபத்தில் அந்தப் பெரிய மனிதரின் பேட்டி கிடைக்குமென்று நம்பவேயில்லை. அதற்காக எத்தனையோ தடவைகள் அலைய வேண்டியிருக்கும் என்றுதான் அவன் எதிர்பார்த்தான்.

சிவராமன் உள்ளே போனதும் அந்தப் பெரிய மனிதர் மிகவும் அன்போடு அவனை வரவேற்றார்.

"வா, அப்பா சிவராமா! மிஸ்டர் சங்கரன் உனக்கு மாமாவா?"

"ஆமாம், ஸார்!" என்று மிகவும் பவ்யமாகப் பதில் அளித்து விட்டு நின்றான்.

"உட்காரு. உன் மாமா என் பழைய நண்பர். உன்னைப் பார்த்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம். உனக்கு வேலை பார்த்துத் தருகிறேன். என்னைப் பார்த்ததாக மாமாவுக்கும் எழுது!" என்று மிகவும் அன்போடு கூறினார் பெரிய மனிதர்.

சிவராமனுக்கு உள்ளம் முழுவதும் மகிழ்ச்சியால் நிறைந்தது. உடம்பெல்லாம் புளகம் உண்டாயிற்று. அவர்தான் எத்தனை நல்ல மனிதர் என்ற எண்ணம் மனசில் எழுந்து அவரிடம் மட்டற்ற மரியாதையையும் நன்றி உணர்ச்சியையும் உண்டாக்கியது. பேச நா எழவே யில்லை.

"...... உங்களுக்கு ......ரொம்பவும் ...... சிரமம் தருகிறேன். இன்று ஞாயிற்றுக்கிழமை யாகையினால் காலை வேளையில் சாவகாசமா யிருப்பீர்கள் என்று நினைத்து ......பார்க்க வந்தேன். ஒருவேளை உங்களுக்கு......ஏதாவது அவசர வேலை......" என்று சிவராமன் உளறிக் கொட்டினான்.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. இன்றைக்கு, இப்பொழுது நான் எங்கேயும் போகவில்லை. சும்மாத்தான் இருக்கிறேன். சரி, உன் யோக்கியதாம்ச விவரங்களைச் சொல்லு......?"

"நான் திருச்சி தேசியக் கல்லூரியில் பி. ஏ., பாஸ் செய்தேன்......" என்று சிவராமன் சொல்லிக் கொண்டிருக்கும்போது, 'சடக் சடக்' என்று செருப்பின் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து கிண்கிணி நாதம் போன்ற சிரிப்பொலி கேட்டது. அந்தச் சிரிப்பொலியைத் தொடர்ந்து, பவுடர் மணமும் வாசனை சென்டின் மணமும் வந்து சிவராமனின் மூக்கில் புகுந்து அவனை வான மண்டலத்துக்குத் தூக்கிச் சென்றன.

"அப்பா, யசோதரா என்னை அவள் வீட்டுக்குக் கூப்பிடுகிறாள். போய் வரட்டுமா?" என்று கிளி மொழியில் கொஞ்சிய வண்ணம் அவருடைய பெண் வித்தியா உள்ளே வந்தாள்.

"ஆகா, தாராளமாகப் போய்விட்டு வா!" என்று அவளை அனுப்பி வைத்தார் அவர்.

சிவராமன் மௌனமா யிருந்தான்.

பெரிய மனிதரே மீண்டும் சம்பாஷணையைத் துவக்கினார், "என்னப்பா, என்ன சொன்னாய்?" என்று கேட்டார்.

"நான் திருச்சி தேசியக் கல்லூரியில்...!"

"டிர்ரிங் டிர்ரிங்!" டெலிபோன் மணியடித்தது.

சிவராமன் மீண்டும் மௌனமானான்.

பெரிய மனிதர் டெலிபோனை எடுத்துப் பேசினார்.

"ஹலோ! ஆமாம்...நான்தான் பேசுகிறேன். பம்பாயிலிருந்து இன்றுதான் வந்தீர்களா? சரி...அவசியம் சாயங்காலம் காஸ்மோபாலிடன் கிளப்பிலே சந்திப்போம்! ஆல் ரைட்!" பேசி முடித்து டெலிபோன் ரிஸீவரை 'டங்' கென்று கீழே வைத்தார்.

"என்னப்பா, சிவராமன்! நான் உன்னை என்ன கேட்டேன்?"

"...என் யோக்கியதாம்சங்களைப் பற்றி ......" சிவராமன் வாக்கியத்தை முழுவதும் முடிக்கவில்லை.

அதற்குள் பெரிய மனிதர் ரேடியோ வைத் திருப்ப அது தன் திருவாய் மலர்ந்தது.

"புயலால் பாதிக்கப்பட்ட ராமநாதபுரம் ஜில்லாப் பகுதிகளில்.........(டர், புர் கர், டுங்......")

பெரிய மனிதர் சில நிமிஷங்கள் வரையில் ரேடியோவைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

சிவராமன், பாவம்! புயலால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருள் தப்பிப் பிழைத்த

வன் மாதிரி முகத் தோற்றத்துடன் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

"இன்னும் பராமுகம் ஏனோ
இதுஉமக்கு நீதி தானோ?"

ரேடியோவில் பாட்டு அமர்க்களப் பட்டது. பாட்டை விடப் பெரிய மனிதர் அதை ரஸித்த மாதிரி பிரமாதமாயிருந்தது. அதை விட அந்தப் பாட்டு சிவராமனது நிலையைக் குத்திக் காட்டியது பிரமாதமாயிருந்தது.

பாட்டு முடிந்தது. ரேடியோவின் ஒலியைக் குறைத்து விட்டுப் பெரிய மனிதர் சிவராமன் பக்கம் திரும்பி, "என்ன சொன்னாய்?" என்று கேட்டார்.



சிவராமன் முகம் சிவந்து விட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "......உம், என் யோக்யதாம்சங்களைப் பற்றிக் கேட்டீர்கள்..." என்று கூறினான்.

பெரிய மனிதர் குறுக்கிட்டு, "ஆமாம், ஆமாம். நினைவு வருகிறது. எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லு" என்றார்.

"நான் திருச்சி தேசியக் கல்லூரியில்..."

"அப்பா!" என்று கூப்பிட்டுக் கொண்டே சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தகுந்த ஒரு பெண்மணி உள்ளே நுழைந்தாள். அவள் தலையைப் படிய வாரிக் கொண்டை போட்டிருந்தாள். அலங்காரக் கொண்டைக்கு மேல் அழகுக் கதம்பம் சுமையாக வீற்றிருந்தது. கதம்பத்தின் மணம் கம்மென்று பரவியது.

"வா, அம்மா புவனா! என்ன வேணும்?" என்றார் பெரிய மனிதர்.

"நான் இப்பொழுது மாம்பலத்துக்குப் போகணும். காரை எடுத்துக் கொண்டு போகிறேன். கொஞ்ச நாழிகையிலே திரும்பி விடுகிறேன். நீங்கள் இப்பொழுது எங்கேயும் போகவில்லையே, அப்பா!"

"இல்லை அம்மா, புவனா! நீ காரை எடுத்துக் கொண்டு போய் விட்டு வா!"

புவனா போய் விட்டாள். ரேடியோவிலிருந்து அடங்கிய குரலில் சங்கீதம் வந்து கொண்டிருந்தது. ஒரு சிறு பையன் ஒரு அழகிய நாய்க்குட்டியோடு உள்ளே வேகமாக நுழைந்தான்.

"ரமேஷ், என்ன சமாசாரம்! 'மார்னிங் வாக்' போய் விட்டு வந்தாச்சா?" என்று அன்போடு கேட்டார் பெரிய மனிதர்.

"ஆமாம், அப்பா! நானும் ஜிம்மியும் இன்றைக்குச் சீக்கிரம் புறப்பட்டு ரொம்ப தூரம் போனோம்" என்றான் ரமேஷ்.

ஜிம்மி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து பெரிய மனிதர் மடிமீது ஏறி உட்கார்ந்து வாலை யாட்டி, செல்லமாக, பெரிய மனிதர் வீட்டுக்கு ஏற்ற ஜக்கான குரலில் 'வள் வள்' என்று குரைத்தது.

பெரிய மனிதர் ஜிம்மியை அன்போடு அணைத்துக் கொண்டு கொஞ்சினார். பிறகு, ஜிம்மியைக் கையினால் தடவிக் கொடுத்தபடி, "சிவராமன், உன் 'க்வாலிபிகேஷன்' என்ன?" என்று கேட்டார்.

சிவராமன் பரிதாபமான முகத் தோற்றத்துடன் பேச ஆரம்பித்தான்.

அந்தச் சமயம் பார்த்து ஜிம்மிக்குத் திடீரென்று உற்சாகம் பொங்க ஆரம்பித்தது.

"வள்வள் வள்" என்று குரைத்து வாலை ஆட்டிக் கொண்டு பெரிய மனிதரைச் சுற்றி வந்தது.

"ஓகோ, மணி எட்டரை ஆகி விட்டதா! உனக்குப் பிஸ்கோத்து கொடுக்கிற நேரம் வந்து விட்டதா! அட போக்கிரி!" என்று ஆதுரத்தோடு கூறி விட்டு, பெரிய மனிதர் எழுந்து பீரோவைத் திறந்து பிஸ்கோத்தைக் கொஞ்சம் எடுத்துக் கொண்டு வந்து ஜிம்மியிடம் போட்டார். ஜிம்மியும் ஆவலோடு தின்றது.

"சிவராமன், நீ எந்தக் காலேஜில் வாசித்தாய்?" என்று கேட்டார்.

சிவராமனுக்கு என்னவோ மாதிரி ஆகி விட்டது. பேச நா எழவில்லை. அந்தச் சமயத்தில் 'டிர் ரிங் டிர் ரிங்' என்று டெலிபோன் மணி ஒலித்தது.

"ஹலோ! நான்தான் பேசுகிறேன். டிரங்க் காலா? டில்லியிலிருந்தா?......நமஸ்காரம்...கல்யாணம் நிச்சயம் ஆகி விட்டதா? ரொம்ப சந்தோஷம்! இந்தச் சித்திரையிலேயே முகூர்த்தம் வைத்து விடுகிறீர்களா? பேஷ்.......! நான் இப்பொழுதே போய் அவரைப் பார்க்கிறேன். உங்களுக்குக் கவலை வேண்டாம். சரி, சரி...ஆல்ரைட்!" 'டங்' கென்று ரிஸீவரை வைத்தார்.

'டக்' கென்று சிவராமன் எழுந்தான். "ஸார், நமஸ்காரம்...நான் போய் வருகிறேன்..." என்று கைகூப்பிய வண்ணம் சொன்னான்.

"சிவராமன்! நான் சாவகாசமாக இருக்கும் போது இன்னொரு நாளைக்கு அவசியம் வா. இன்று மாதிரியே ஞாயிற்றுக் கிழமைகளில் காலை வேளையில் 'லேஷர்' தான்" என்றார் பெரிய மனிதர்.


"சரி, ஸார்!" என்று கூறி விட்டுச் சிவராமன் நடையைக் கட்டினான்.


மணியம்
காஷ்மீர நினைவுகள்

வட இந்திய யாத்திரையைப் பற்றி எழுத ஆரம்பித்ததிலிருந்து என் மனம் இடையிடையே ''காஷ்மீரம்! காஷ்மீரம்!'' என்று உருப்போட்டுக்கொண்டு வந்தது. ''காஷ்மீரத்தையும், காஷ்மீரத்தின் வனப்பையும், அங்குள்ள வர்ணிக்க முடியாத அழகுச் செல்வங்களையும் பற்றிச் சொல்லாமல் வேறு என்னவெல்லாமோ கதை அளந்து கொண்டிருக்கிறாயே!'' என்று என் நெஞ்சு குத்திக் காட்டிக்கொண்டே வந்தது. அந்தச்சமயத்தில் எல்லாம் ''பொறு, நெஞ்சே! பொறு!'' என்று படபடக்கும் என் நெஞ்சுக்கு இதோபதேசம் செய்து வந்தேன். உண்மையைச் சொன்னால் நான் என்னுடைய நெஞ்சுக்குப் பொறுமையை உபதேசித்து வந்ததெல்லாம் வேறு ஒரு முக்கிய காரணத்துக்காக.

இது வரை வட இந்திய யாத்திரையில் எழுதி வந்ததெல்லாம் வட இந்தியா தென் இந்தியாவை விடக் கடந்த ஆறு ஏழு ஆண்டுகளில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்ற விஷயங்களைத் தெளிவுபடுத்தத்தான். ஆனால் காஷ்மீரத்தைப் பற்றிய நினைவுகளை ஒரு கணம் நினைத்துப் பார்த்தால் அவை எல்லாம் பெரும்பாலும் இயற்கை தந்த ஈடு இணையற்ற சௌந்தர்யச் செல்வங்கள். அதைப் பற்றி நினைத்துக் கொண்டே என்னை மறந்த லயந்தன்னில் இருந்து விட்டேன். அதனால் தான் காஷ்மீரத்தைப் பற்றி எழுதுவதில் இவ்வளவு தயக்கமும் தாமதமும்.

காஷ்மீர நினைவுகளைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால், காஷ்மீர அமைப்பைப் பற்றிய விசேஷத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காஷ்மீரத்தைச் சிருஷ்டித்தது யார்! மனிதர்களா! இல்லை. மனிதர்களால் சிருஷ்டிக்கும் காரியம் ஒன்றுமே அங்கு இல்லை. எல்லாம் வல்ல இறைவன் தான் காஷ்மீரத்தைச் சிருஷ்டித்ததாகச் சொல்லுகிறார்கள். ஆமாம்; இறைவனைத் தவிர வேறு யாருமே வனப்பு மிக்க இந்தக் காஷ்மீரத்தைச் சிருஷ்டித்திருக்க முடியாது. அதில் ஒன்றும் சந்தேகமில்லை.



இருக்கட்டும், காஷ்மீர அமைப்பில் விசேஷம் என்ன! அது இமய மலையில் உள்ள ஒரு பகுதியாயிருக்கும், எல்லா விதங்களிலும் இமய மலையை மறக்கும்படி செய்து கொண்டிருக்கிறது. பெரிய கிண்ணம் போல் இமய மலையின் மத்தியில் அமைந்திருக்கிறது. காஷ்மீரத்தை யாரும் கவர்ந்து சென்று விடுவார்களோ என்று பயந்து கொண்டு இமயமலை தன்னுடைய பலம் பொருந்திய கைகளால் அந்த அழகு பூமியை, சௌந்தர்ய உலகைக் காதலோடு அணைத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறது. உலகத்தில் எத்தனையோ விதமான நாகரீக வளர்ச்சிகள் ஏற்பட்டிருந்த போதிலும் காஷ்மீரம் மட்டும் இன்னும் இன்றைய நாகரிகத்துக்கு அடிமையாகவில்லை. காரணம், காஷ்மீரத்துக்குள் ரயில் வண்டியே கிடையாது. ரயில் வண்டியைப் பற்றித் தெரியாத மக்கள் காஷ்மீரத்தில் இருக்கிறார்கள். ஆனால் மோட்டார் வாகனங்கள் இருக்கின்றன. அதன் மூலமாகத்தான் காஷ்மீரத்துக்குள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் பிரயாணம் செய்ய வேண்டும்.

காஷ்மீரத்தில் இன்னொரு முக்கிய விசேஷம் அங்குள்ள பூந்தோட்டங்கள். இந்தத் தோட்டங்கள் ஜஹாங்கீர் சக்கரவர்த்தி காலத்திலேயே அமைக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஜஹாங்கீர் தன் காதல் மனைவி நூர்ஜஹானுக்காக அமைத்த பூங்காவனங்கள் பல இருக்கின்றன. இதில் மிகப் பிரசித்திபெற்ற தோட்டங்கள் இரண்டு. ஒன்று 'நிஷாத் தோட்டம்' அதாவது ஆனந்தத் தோட்டம். மற்றொன்று ஷாலிமார் தோட்டம். இந்தத் தோட்டங்களில் காஷ்மீரத்தின் அழகு மிக்க மரங்களும், விதம் விதமான மலர் குலுங்கும் செடிகளும், படிப்படியாக உயர்ந்து உயர்ந்து மேல் நோக்கிச் செல்லும் நீர்ப்பொழிவுகளும், கண்ணையும் கருத்தையும் கவரும் முறையில் காவிய அழகுடன் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன.

இந்தத் தோட்டத்துக்குள் சென்றதும் நாம் நம்மை யறியாமலேயே எங்கோ சென்று விடுகிறோம். பார்க்குமிடமெங்கும் பல வர்ணங்களுடன் ஜாஜ்வல்யமாகப் பிரகாசிக்கும் மலர்கள் கண்களைச் சிமிட்டி நம்மை மயக்குகின்றன. அப்போது மனமகிழ்ச்சியால் உள்ளமெல்லாம் கிடுகிடு என்று இன்ப நடன மிடுகிறது. சராசரங்கள் எல்லாம் சொக்கிச் சுழல்கின்றன. அப்படிப்பட்ட மனப் பிரமை, இன்ப மயக்கம் நமக்கு ஏற்படுகிறது.

அங்குள்ள செனார் மரங்களைப் பார்த்தால் ஒரு சமயம் வயது முதிர்ந்த மரங்களாகக் காட்சி யளிக்கின்றன. இன்னொரு சமயம் இளம் மரங்களாகத் தோன்றுகின்றன. ஆனால் ஐந்நூறு வருஷத்து மரங்கள் என்று சொல்கிறார்கள். ஐந்நூறு வருஷங்களாக இந்த மரங்கள் இருந்திருக்க முடியுமா! அது சாத்தியமான காரியமா! என்று கேட்டுக் காலத்தைக் கடத்த வேண்டியதில்லை. செனார் மரங்களைப் பார்த்தால் ஏதோ இளம் பெண்களைப் பார்ப்பது போலிருக்கிறது. கண்களைக் கசக்கிக் கொண்டு எத்தனை தரம் பார்த்தாலும் அந்தப் பிரமை தீருவதில்லை. பெண்கள் வயது விஷயமாக ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கலாமா! மேலே போகலாம்.

இதுபோல் காஷ்மீரத்தில் பார்க்க வேண்டிய இன்னும் பல இடங்கள் இருக்கின்றன. குல்மார்க், கிலன்மார்க், பகல்காம் முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று அங்குள்ள இயற்கைக் காட்சியை அனுபவித்து மகிழ வேண்டும்.

இந்த இடங்களுக்குச் செல்வதற்குப் பல வசதிகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் விட அங்குள்ள மலைகள்மீது போவதற்குப் பழக்கப்பட்ட குதிரைகள் இருக்கின்றன. அவற்றின்மீது ஏறிக் கொண்டு செல்லலாம். வாழ்நாளில் குதிரை ஏறிப் பழக்கமில்லாதவர்கள் கூடச் சுகமாகக் குதிரை சவாரி செய்யலாம். அடாடா! இமயமலையின்மீது குதிரை சவாரிசெய்து கொண்டு போகும்போது எவ்வளவு ஆனந்தமாக இருக்கும் தெரியுமா!

இதைத் தவிர இன்னும் பல இடங்கள் இருக்கின்றன. எத்தனையோ கலை ஊற்றுக்கள் இருக்கின்றன. வெரிநாக்—ஜீலம் நதி உற்பத்தி ஸ்தானம் பார்க்க வேண்டிய இடம். சின்னஞ் சிறு தாமரைத் தடாகம் போன்ற ஒரு குளத்திலிருந்து ஜீலம் நதி பொங்கி வரும் அழகை எப்படிக் கூறுவேன்! அதில் துள்ளிக் குதிக்கும் மீன்களின் கூட்டத்தைப் பற்றி எவ்வாறு வர்ணிப்பேன்! அந்தத் தண்ணீரைத் தொட்டால், அப்பப்பா! 'சுர்' என்று குளிர் வந்து தாக்குகிறது! ஐஸைவிட அதிகக் குளிர் என்று சொன்னாலும் தவறில்லை. அவ்வளவு அதிகமாகத் தண்ணீர் 'ஜில்'லென்று இருக்கிறது. அந்தத் தாங்க முடியாத குளிர்ந்த நீரைப் பார்ப்பதற்கே உடம்பு நடுங்குகிறது. அப்படிப்பட்ட குளிர். கம்பளிச் சட்டையை இழுத்துக் கழுத்தை ஒரு தரம் மூடிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அது ஒன்றையும் லட்சியம் செய்யாமல் திறந்த உடம்புடன் அந்தக் குளிர் நீரில் ஓடி விளையாடும் மீன்களைப் பார்த்துப் பார்த்துக் களிக்க வேண்டும். இவைகளைப் பற்றி யெல்லாம் ஒரு வரியில், இரண்டு வரிகளில் விவரித்துக் கூற முடியாது. ஏதேனும் கூற ஆரம்பித்தால் மனத்திலே எத்தனை எத்தனையோ எண்ணங்கள், இன்பக் காட்சிகள் வந்து மோதுகின்றன. அதனால் இந்தக் கட்டுரையை முடிக்க முடியாமலே வளர்ந்துகொண்டே போய் விடுமோ என்று பயப்பட வேண்டியிருக்கிறது. ஆகையால் காஷ்மீரக் காட்சிகளைப் பற்றி இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். வாருங்கள், நம்முடைய படகு வீட்டுக்குத் திரும்புவோம்.

படகு வீட்டில் ஒருநாள்

படகு வீட்டில் இரவைக் கழித்த பிறகு உதயத்தையும் பார்த்து அநுபவிப்பதற்காக அதிகாலையிலேயே எழுந்து படகு வீட்டின் மாடிக்குச் சென்று விடவேண்டும். தால் தடாகத்தில் உதயக் காட்சி வர்ணிக்க முடியாத ஒரு அற்புதம். வாருங்கள், அதிகாலையிலேயே படகு வீட்டு மாடிக்குச் செல்வோம். புதிய நாள் விரிந்து வருவதற்கு வேண்டிய அறிகுறிகள் வான வெளியில் தெரிய ஆரம்பித்து விட்டன. நீல வானத்தில் தெரியும் நட்சத்திரங்களின் பிரகாசமான ஒளி மங்குகின்றன. அதோ வானத்தை விட்டு வட்ட வடிவமான நிலா கீழ்நோக்கி இறங்குகிறது. வேகமாக இறங்கித் தால் தடாகத்துக்குள் மூழ்கி விடுகிறது. கீழ் வானம் சிவக்கிறது. அந்தப் பிராந்தியத்தில் இதுவரையில் இல்லாத ஒரு புதிய ஒளி 'பளீர்' என்று வீசுகிறது.

சங்கராச்சாரியார் குன்றின் அடிவாரத்தில் உள்ள போப்ளார் மரங்களின் நீண்ட நிழல்கள் தால் தடாகத்தின் தண்ணீரில் தெரிகின்றன. தண்ணீரில் தெரியும் மரங்களின் நிழல்களும், மலையின் நிழலுமாகத் தால் தடாகத்துக்கு ஒரு புதிய உயிரையே கொடுத்து விடுகின்றன. இதுவரை ஆடாமல் அசையாமல் தெரிந்த நிழல்கள் தூக்கத்தில் இருந்து விழித்து எழுந்து சோம்பல் முறிப்பதுபோல் விசித்திரமாக ஆடி அசைகின்றன.

ஆமாம்; தால் தடாகத்தில் சின்ன அலைகள், தடாகத் தண்ணீரில் ஏதோ மோதுவதால் ஏற்படும் அலைகள் விரிந்து விரிந்து வேகமாகப் பரவுகின்றன. இரவு முடிந்து விட்டது; பகல் ஆரம்பமாகி விட்டது என்பதை இப்பொழுது நன்றாக உணர முடிகிறது!

தால் தடாகத்தில் விழிப்பு ஏற்பட்டு விட்டது. இதோ, நம் படகு வீட்டை நோக்கி ஒரு சிறு மலர்த் தீவே நகர்ந்து வருகிறதே! இல்லை; தீவு இல்லை. சிறிய படகில் விதம் விதமான மலர்களை ஏற்றிக்கொண்டு ஒரு பெண் வருகிறாள். "அருமையான பூக்கள்! கண்ணைக் கவரும் மலர்கள்! பார்த்துப் பார்த்து அநுபவிக்க வேண்டிய புஷ்பங்கள்! வேண்டுமா!" என்று மதுரமான குரலில் கிளி கொஞ்சுவது போலக் கேட்கிறாள். புஷ்பமே வாய் திறந்து பேசுவது போலிருக்கிறது.

காஷ்மீரத்து மக்கள் மலர்கள் மீது தீராக் காதல் கொண்டவர்கள். பூக்கள் என்றால் அவர்களுக்கு உயிர். கையிலே தாமரை மலர்களைச் சாதாரணமாக வைத்துக்கொண்டு தால் தடாகக் கரையில் மாலை வேளைகளில் உலாவுகிறார்கள். எதிரில் யாராவது வந்தால் தங்கள் கையிலுள்ள மலர்களை அவர்களிடம் கொடுத்து மகிழ்கிறார்கள். அவர்கள் அதை மலர்ந்த முகத்துடன் வாங்கிக் கொண்டு தங்கள் கையில் இருக்கும் மலரைக் கொடுக்கிறார்கள். ஏதோ நாடகத்தில் காணும் அபூர்வக் காட்சிகள் போல் ஆனந்தமாக இருக்கின்றன.

காஷ்மீர் மக்கள் பூக்களைக் கொண்டு தங்கள் வீடுகளை அலங்காரம் செய்யும் 'அழகுக் கலை' பார்த்துப் பார்த்து அநுபவிக்க வேண்டிய உயர்ந்த கலையாகும். படகு வீடுகளில் அவர்கள் பூக்களைக் கொண்டு அழகு செய்திருப்பதைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும். புஷ்ப அலங்காரக் கலை நிபுணர்களாக இருக்கிறார்கள் காஷ்மீர் மக்கள்.

சின்னஞ் சிறு படகுகளில் பூக்கள் கொண்டு வந்த பூக்காரி போய் விடுகிறாள். அவளைத் தொடர்ந்து இன்னொரு படகு வருகிறது. "சூடான டீ! குளிருக்கு இதமான டீ! டீ; வேண்டுமா, டீ!" என்று கேட்கிறார் படகில் உள்ள தேநீர் வியாபாரி. டீப்படகைத் தொடர்ந்து இன்னொரு படகு, இல்லை ஒரு கடையே வருகிறது! நமக்கு என்னென்ன வேண்டுமோ அவைகள் எல்லாம் அதில் இருக்கின்றன. சீப்பு, சோப்பு, கண்ணாடி, இவைபோன்ற இன்னும் எத்தனை எத்தனையோ லவாசகிச் சாமான்கள் எல்லாம் அதில் இருக்கின்றன. அதைத் தள்ளிக் கொண்டு இன்னொரு படகு உள்ளே வருகிறது. விதம் விதமான பழங்கள், வேண்டிய காய்கறிகள் எல்லாம் அதில் இருக்கின்றன. இவைகளுக்குப் பின்னால் ஒரு படகு. அதில் சலவைத் தொழிலாளி வருகிறார். நம்முடைய சலவைத் துணிகளை எடுத்துக் கொண்டு அவசரமாக

கஸ்தூரிபா கிராம கட்டிட நிதிக்காக

9-4-56 திங்கள் இரவு 10 மணிக்கு
ஈரோடு ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸில்
டாக்டர் ஸ்ரீ டி. வி. சிவானந்தம், M.B.B.S., M.L.C. அவர்கள் தலைமையில்
டி. கே. எஸ். சகோதரர்களால்

"கல்கி"யின் **கள்வனின் காதலி**


நாடகம் நடைபெறும்

பிரவேசக் கட்டணம்: ரூ. 25/-, 10/- (போஷகர்) டிக்கட்டுகள்: ரூ. 5/-, 3/-, 2/-

---

1856 - நூறு ஆண்டுகள் சேவை - 1956

B. I. S. N. கம்பெனி லிமிடெட்



S. S. ரஜூலா

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதி வாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
1956 ஏப்ரல் 18	1956 ஏப்ரல் 19

பிரயாணத்திற்குரிய தஸ்தாவேஜுகளைக் காண்பித்து வேண்டிய அளவு "பங்க்" வசதியுள்ள டிக்கட்டுகளையும், "பர்த் வசதியற்ற" டிக்கட்டுகளையும், "சாப்பாட்டுடனோ" அல்லது "சாப்பாடின்றியோ" எங்கள் கம்பெனியின் ஏஜெண்டிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

'ரஜூலா' கப்பல் சமீபத்தில் புதுப்பிக்கப் பட்டிருக்கிறது. பங்க் வசதி பெற்றுள்ள பிரயாணிகளும் பெர்த் வசதியற்ற பிரயாணிகளும் இப்பொழுது நிறைய விளக்கு வசதிகளையும், அதிகப்படியான பங்காக்களையும், புதுக் காற்று புளோயர்களையும், ஷவர், வாட்டர்கூலர் ஆகிய வசதிகளையும், சைவ உணவுக்காரர்களுக்குத் தனி வசதிகளுடன் கூடிய ஒரு பெரிய சாப்பாடு அறையும் பெறலாம். எல்லா பிரயாணிகளும் தமிழ் மற்றும் ஹிந்தி சினிமா படங்களையும் பார்க்கலாம்.

பினாங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும் சிங்கப்பூரில் கப்பல் மாற்றி பாங்காக்கிற்கு அனுப்பவும் சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றுமதி விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்	மதுரா கம்பெனி லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்





அகில இந்தியப் பத்திரிகையாளர்கள் காஷ்மீரில் தங்கி யிருந்தபோது பாரத நாட்டின் பாது காப்பு மந்திரி ஸ்ரீ கோவிந்த் வல்லபபந்த் அவர்களும் அங்கு வந்திருந்தார்கள். பாதுகாப்பு மந்திரி பத்திரிகையாளர்களைத் தமது ஜாகைக்கு அழைத்து அவர்களோடு பல விஷயங்களை விவாதித்தார். பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் பதில் அளித்தார். அன்று மாலை காஷ்மீர் மக்கள் பண்டிதபந்த் அவர்களுக்கு வரவேற்பளிக்க ஸ்ரீநகரை அலங் கரித்திருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பண்டித பந்த் அவர்களையும், வட இந்திய யாத்திரையில் கலந்து கொண்ட பத்திரிகையாளர்களையும் மேலே படத்தில் காணலாம்.

வருகிறார். நம்மிடம் துணிகளைக் கொடுத்துவிட்டுக் கூடவே அழுக்குத் துணிகளை எடுத்துக் கொண்டு போகிறார். அவர் சென்றவுடன் தலை யலங்கார நிபுணர் வருகிறார். படகு வீட்டின் மாடியில் அமர்ந்து இமயமலையின் இணையற்ற காட்சிகளைப் பார்த்துக் கொண்டு தலையலங் காரம் செய்து கொண்டதை இப்பொழுது நினைத்தால்கூட எவ்வளவோ இன்பமாக இருக் கிறது! பச்சையும், சிவப்பும், வெள்ளையுமான என்னென்னவோ பல எண்ணெய்களை உடம் பில் தடவிச் சுகமாகப் பிடித்து விடும்போது ஏற்படும் சுகம் இருக்கிறதே, அதுதான் சுகத் துக்கெல்லாம் சுகம் என்று சொல்ல வேண்டும். அதற்கு ஈடாக அந்தத் தலை அலங்கார நிபுணருக்கு எதைக் கொடுத்தாலும் போதாது. காஷ்மீரத்தையே அவருக்குத் தானமாகக் கொடுத்துவிட்டு வந்தேன்! (இந்த விவரம் அறியாத பாகிஸ்தானும் பாரதமும் காஷ் மீரம் யாருக்குச் சொந்தம் என்பதைப்பற்றி இன்னமும் சர்ச்சை செய்துகொண் டிருப்பது வேடிக்கையாக இல்லையா!)

இவருக்குப் பிறகு இன்னும் பல படகுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டே இருக் கின்றன. காஷ்மீரக் கம்பளங்கள், பட்டுகள், மர வேலைச் சாமான்கள், கத்திகள், அழகழ கான கைத்தடிகள்எல்லாம் வருகின்றன. இவை களுக்கு மத்தியிலேயே படகுகளை ஒதுக்கிக் கொண்டு வெகுவேகமாக ஒரு படகுவருகிறது. நமக்கு வந்திருக்கும் தபால்களைக் கொடுக் கிறது. "உங்களுக்கு ஏதாவது கார்டு, கவர், ஸ்டாம்பு வேண்டுமா!" என்று அதில் உள்ள தபால்காரர் நம்மை மிகுந்த அன்புடன் விசா ரிக்கிறார். நமக்கு வேண்டியதை அவருக்காக வாவது நாமும் வாங்கிக் கொள்கிறோம்.

இப்படிப் படகில் வரும் வியாபாரிகள் எல் லாருக்கும் இந்தியும் ஆங்கிலமும் தெரிகின்றன. ஆனால் அவர்களிடம் வியாபாரம் செய்வது தான் மிகவும் தர்மசங்கடமான காரியம். "காஷ்மீர மக்கள் வியாபாரம் ஒன்றைத் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் மிகவும் நாணய மானவர்கள்" என்று நாங்கள் தங்கி இருந்த படகு வீட்டின் சொந்தக்காரர் கூறினார்.

படகு வீட்டின் வாசலில் இருந்து ஒரு நாள் பொழுதைக் கழிப்பதே ஒரு அருமையான அனுபவம். அந்த ஒருநாள் வாழ்க்கையை நினைத்து நினைத்து வாழ்நாள் எல்லாம் மகிழ வேண்டிய மறக்க முடியாத சம்பவங்களாகும்.

தால் தடாகத்தில் போக்குவரத்து குறை கிறது! என்ன போக்கு வரத்துக்கள் குறைந்து விட்டனவே என்று நினைக்கும் போதுதான் நமக்கு ஒரு பகல் பூராவும் ஓடிவிட்டது என்று உணர முடிகிறது! அடுப்பங்கரைப் பகுதி யிலிருந்து சுகமான சமையல் மணம் வீசுகிறது. அதைத் தொடர்ந்து குக்காப் புகையும் வரு கிறது. குக்காவின் நாற்றம் அதிகரிக்க அதி கரிக்கப் பகல் மறைந்து இரவு வந்து விட்டது என்பதை நன்றாக உணர்ந்து கொள்ளலாம். ஆமாம்; படகு வீட்டுச் சிப்பந்திகள் எல்லாம் தால் தடாகச் செயற்கைத் திட்டில் உட் கார்ந்து 'கொட கொட' 'கொட கொட' என்ற சத்தத்துடன் குக்காவைச் சுவாரஸ்ய மாக உறிஞ்ச ஆரம்பித்து விடுகிறார்கள்.

தடாகக் கரையின் சாலை ஓர விளக்குகள் பளீர் என்று ஒளி வீசி எரிய ஆரம்பிக்கின்றன. அதைத் தொடர்ந்து ஏதோ இனம் புரியாத இசை கேட்கிறது! அருமையான மெட்டில் யாரோ பாடுகிறார்கள். பாட்டின் பொருள் விளங்கவில்லை. ஆனாலும் அந்த மெட்டு இருக் கிறதே, அடடா! அது நமது உடலில் உள்ள இன்ப நரம்பை எங்கேயோ தொட்டுவிடுகிறது! நாம் இந்த உலகத்தை மறந்து வான வெளி யிலே மிதக்க ஆரம்பித்து விடுகிறோம்.

மனத்தை மயக்கும் சார் செனர்

காஷ்மீரத்தில் ஜூன் ஜூலை மாதங்களில் பகல் அதிகம். இரவு நேரம் மிகக் குறைவு. சூரியன் அஸ்தமிப்பதற்கு இரவு மணி ஒன்ப தாகிறது. சூரியன் மறைவுக்குப் பின் இருக் கும் மாலை நேரம் மறைவதற்குச் சுமார் இரண்டு மணி நேரத்துக்கு மேல் ஆகிறது. தமிழ் நாட்டில் சூரியன் அஸ்தமித்ததும் இருட்டி விடுகிறதே அது போல் இல்லை. என்னே இயற்கையின் விசித்திர விளையாட்டு!

காஷ்மீரத்தில் படகு வீட்டில், ஒரு பௌர்ணமியைக் கழிக்கும் வாய்ப்பு பத்திரிகையாளர்களுக்குக் கிடைத்தது. பௌர்ணமி யன்று மாலை. தால் தடாகக் கரையோரத்தில் உள்ள சாலை விளக்குகள் எரிய ஆரம்பித்து விட்டன. அதைத் தொடர்ந்து நேரு பூங்காவின் விளக்குகள் நட்சத்திரங்கள் போல் கண்ணைச் சிமிட்டி மின்னத் தொடங்கி விட்டன. காதலர் பூங்காவில் உள்ள கணக்கற்ற விளக்குகள், பலவித வர்ணங்கள் நிறைந்த விளக்குகள் இந்திரஜால மகேந்திர ஜால வித்தைகளைக் காட்டிக் கொண்டு பிரகாசித்தன. இந்த விளக்குகளின் பிரதிபிம்பங்கள் தால்தடாகத்தின் தண்ணீரில் கண்ணின் இன்பமாகக் காட்சி அளித்தன. இப்பிறப்பில் கண் படைத்த பலனைப் பெற முடிந்தது! இந்த அழகிய காட்சியைப் பார்த்துப் பார்த்து அனுபவிக்க முடிந்தது.

காங்கிரிபல் என்ற இடத்தில் இருந்து வெகு தூரத்துக்கு அப்பால் தால் தடாகத்தில் அழகான தீவு ஒன்று இருக்கிறது. இந்தத் தீவுக்குச் 'சார் செனார்' என்று பெயர். அதாவது அந்தச் சின்னஞ் சிறு தீவில் நாலு செனார் மரங்கள் இருக்கின்றன.

செனார் மரம் காஷ்மீரத்தின் அழகுச் செல்வங்களில் ஒன்று. சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னால் பாரசீகத்திலிருந்து ஜஹாங்கீர் சக்கரவர்த்தியால் காஷ்மீரத்துக்குக் கொண்டு வந்து வளர்க்கப்பட்ட மரம்!

அடாடா! அதன் அழகையும் கம்பீரியத்தையும் எப்படி வார்த்தைகளில் வர்ணிக்க முடியும்! அந்த மரத்தின் அமைப்பைப் பற்றிச் சொல்வதா! அதன் குளுமையான இலைகளைப் பற்றிச் சொல்வதா! அந்த இலையின் பசுமையான நிறத்தைப் பற்றிச் சொல்வதா! எல்லாமாகச் சேர்ந்து ஏதோ ஒரு இளம் பெண் நாணத்துடன் நிற்பதுபோல் தோன்றும் மயக்கக் காட்சியைப் பற்றிக் கூறுவதா!

காஷ்மீரத்தில் உள்ள ஒரு சட்டத்தைப் பற்றிக் கூறினாலே செனார் மரத்தின் உயர்வை ஒரு மாதிரி நேயர்கள் உணர்ந்து கொள்ளலாம். "செனார்மரத்தின் இலைகளையோ, கிளைகளையோ ஒடிப்பவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்" என்பது சட்டம் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

செனார் மரத்தின் இலைகள் கோடையிலே பச்சைப் பசேல் என்று மரகதம் போல மின்னுகின்றன. குளிர் காலத்திலே தகதக வென்று தங்க நிறம் பெற்றுத் திகழ்கின்றன. அந்த மரத்துக்கு அடியில் போய் நின்றால் மனம் பேதலிக்கிறது; என்னென்னவோ கற்பனைகளும், இன்ப எண்ணங்களும் எழுகின்றன!

செனார் மரம் பூமியில் வேர் பிடித்துத் தழைத்து மரமாவதற்குக் குறைந்தது ஐம்பது ஆண்டுகளாவது ஆகுமாம்.

இப்படிப்பட்ட செனார் மரங்கள் நாலு வானோங்கி வளர்ந்திருக்கும் தீவுதான் சார் செனார் தீவு! வாருங்கள். இந்தத் தீவுக்குச் செல்லலாம். இதோ சார் செனார் தீவுக்கு வந்து விட்டோம். தீவைச் சுற்றி நாலாபுறமும் கண்ணுக்கு எட்டிய தூரம் தண்ணீர்! தண்ணீர்! தண்ணீர் என்று தால் தடாகம் பரந்து விரிந்து கிடக்கிறது! தால் தடாகத்துக்கு அப்பால் இமயமலையின் இணையற்ற எழில் மிக்க கம்பீரத்தோற்றம். அதன் வெள்ளிப்பனி மூடிய சிகரங்கள் நீல வெளியில் கைலாசம் போல் காட்சி தருகின்றன. அதற்கும் மேலே அற்புதமான எழிலுடன் விளங்கும் நீல வானம். அந்த வானத்தில் கணக்கற்ற நட்சத்திரங்கள் கண் சிமிட்டிக் கட்டியம் கூற, பூர்ண சந்திரன் பிரகாசமான தன் வெண்ணிலவைப் பொழிந்து கொண்டு ஒய்யாரமாகப் பவனி வருகிறான்.

சார்செனார் தீவில் பௌர்ணமி நிலவில் இருக்கும்போது ஏற்படும் மன உணர்ச்சியை எப்படி வர்ணிப்பேன்! நிலவும் நிழலும், இரவும் தண்ணீரும், பனியும் மரமும் எல்லாமுமாகச் சேர்ந்து காஷ்மீரம் ஏதோ ஒரு அதிசய சக்தியைப் பெற்று நம்மை மயக்குவதை நன்றாக உணர முடிகிறது. அப்பொழுது ஏற்படும் உணர்ச்சியைக் காளிதாசன் போன்ற மகா கவிகளால்தான் வர்ணிக்க முடியும்! அப்படிப்பட்ட மன மயக்கம் ஏற்படுகிறது. சிந்தனை சிறகடித்துப் பறந்து இன்பபுரிக்குச் செல்கிறது.

செனார் மரத்தின் இலைகள் காற்றிலே இலேசாக அசைகின்றன. அது ஒரு சமயம் ஏதோ இன்பமான காதல் கீதம் இசைப்பதுபோலிருக்கிறது. மறுகணம் காதலனைப் பிரிந்த காதலியின் மனத் துடிப்புப் போல் சோகத்துடன் படபடக்கிறது. அடுத்த கணம் காதலனும் காதலியும் சேர்ந்து பாடுவது போல மதுரமாக ஆடி அசைகிறது. அவர்கள் இருவரும் சேர்ந்து கலகல வென்று கைகொட்டிச் சிரிப்பது போலச் சலசலக்கிறது. இவ்வாறு செனார் மரத்தின் இலைகள் எத்தனையோ காதல் லீலைகளுடன் இன்ப கீதங்களை இசைக்கின்றன; இசைத்துக்கொண்டே இருக்கின்றன. அதைக் கேட்டுக்கொண்டே சார்செனார் தீவில் வாழ்நாளெல்லாம் கழித்துவிடலாம். அப்படிப்பட்ட கவலையற்ற மன நிலை. ஒரு இணையற்ற இன்ப உணர்ச்சி, இனம் காண முடியாத சுகம் இங்கு பரிபூரணமாக ஏற்படுகின்றன.

** ** **

காஷ்மீரத்தில் உள்ள அழகுக் காட்சிகளை விளக்கி உபமானமாகச் சொல்ல எனக்கு ஒன்றுமே தோன்ற வில்லை. காஷ்மீரத்தில் பூத்துக் குலுங்கும் வண்ண மலர்க்காட்சிகளைத் தான் அதற்கு உபமானமாகச் சொல்லலாம். நமது நாட்டுச் செடிகள் முதலில் பூமியிலிருந்து கிளம்பும்போது குருத்துவிட்டுத் துளிர்விட்டுத் தழைத்துப் பிறகு பூக்கள் மலரும். ஆனால் காஷ்மீரத்திலே உள்ள செடிகளோ, 'பூமியிலிருந்து கிளம்பும்போதே, எடுத்த எடுப்பிலேயே மலராகவே வெளியே வருகிறதோ! பிறகுதான் செடிகளில் இலைகள் துளிர்க்கின்றனவோ' என்று நினைக்கத் தோன்றுகிறது! அப்படி இருக்கின்றன புஷ்பச் செடிகள் இலைகளே தெரியாமல். விதம் விதமான மலர்களுக்குக் காஷ்மீரம் உலகையே தூக்கி எறிந்து விடும் என்பதில் சந்தேகமில்லை. காஷ்மீரத்தில் இருக்கும் மலர்கள் ஏதோ பலப்பல வர்ணங்கள் பூசிய மென்மையான காகிதங்களாலும் வெட்டிகளாலும் செய்தவையோ என்று தோன்றுகிறது, அவை மணம் வீசாமலும் நாட் கணக்கில் வாடாமலும் இருப்பதைப் பார்க்கும்போது. ஆனால் அவைகளைத் தொட்டுப்பார்த்தால்தான் அந்த மிருதுத் தன்மையிலிருந்து உண்மையான மலர்கள், உயிரும் உணர்ச்சியும் நிறைந்த

மலர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடி கிறது. காஷ்மீரத்தின் மலர்கள் தனித்தனியாக வும் அழகாகவும் இருக்கின்றன; வீடுகளிலும் படகுகளிலும் அங்கங்கே அலங்காரமாக வைத்திருப்பதைப் பார்க்கும் போதும் அற் புதமா யிருக்கின்றன. இயற்கையாக மலை களிலும் மலர் வனங்களிலும் தோப்புக்களி லும் பூத்துக் கிடக்கும் போதோ எல்லா வற்றையும்விட இன்பமாக இருக்கிறது.

இத்தனை நாளாகியும் காஷ்மீரத்தின் இணை யற்ற அழகையும், அதன் இனிய நினைவுகளை யும் என்னால் மறக்கவே முடியவில்லை.

நிறைவுரை

என்னுடைய நீண்ட வட இந்திய யாத் திரைக் கட்டுரைகளை ஒருவாறு முடிப்பதற்கு இப்பொழுது நேரம் வந்து விட்டது.

கட்டுரையை முடிப்பதற்கு முன் இந்திய சர்க்கார் செய்தி விளம்பர இலாகாவுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திய சர்க்கார்தான் இந்தப் பிரயாணத்துக்கு ஏற் பாடு செய்திருந்தார்கள். ஆனாலும் இந்தப் பிரயாணத்துக்கு என்னை அனுப்பி வைத்த "கல்கி" ஆசிரியர் திரு சோமு அவர்களை மறக்க முடியுமா! அவர்களுக்கு நேயர்கள் சார்பாக நன்றி கூறிக் கொள்கிறேன்.

வட இந்தியாவில் நான் பார்த்தது, கேட்டது, எல்லாமே ஆனந்தமளிக்கும் விஷயம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. கண்ணை மூடிக் கொண்டு பார்த்தால் ஒரு பக்கம் கங்கை நதியும், கங்கைக் கால்வாயும், சாரதா நதியும், சட்லஜ் நதியும், நங்கல் கால்வாயும், இமய மலையும், காஷ்மீரத்தின் அழகிய இயற்கை காட்சிகளும் ஒன்றன் பின் ஒன்றாக மோதி அடித்துக் கொண்டு என் கண்முன்னே வந்து நிற்கின்றன. மற்றொருபுறத்தில் அங்குள்ள மக்களின் அபார சாதனைகள், அவர்கள் வளர்ந்து வரும் வேகம், அவர்களுக்குள்ளே பொருளாதாரத் துறையில் இருக்கும் அபூர்வ மான ஒற்றுமை உணர்ச்சி, அவர்கள் பழைமை யில் இருக்கும் நல்ல விஷயங்களை நாசுக்காக எடுத்து வைத்துக் கொண்டு புதுமையோடு வேகமாகக் கலந்து முன்னேறும் விந்தை, அவர்களுடைய கம்பீரமான தோற்றம், உடற் கட்டு, நிறம், அழகு எல்லாம் வரிசை வரிசை யாக நினைவுக்கு வருகின்றன.



வட இந்திய மக்களைப் பற்றிச் சொல்லும்போது அவர்களைத் தமிழ் நாட்டு மக்களுடன் ஒப் பிட்டு உயர்த்தக்கூடிய நோக்கம் எனக்குக் கிஞ்சித்தும் கிடை யாது. வட இந்திய யாத்திரை புறப்படுவதற்கு முன்பும் இல்லை; இப்போதும் இல்லை. அவர்க ளிடம் இருந்து தமிழ் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பிரமாதமான விஷயங்கள் ஒன் றும் இல்லை; அப்படிப்பட்ட அவசியமும் இல்லை. ஆனாலும் அவர்கள் உழைக்கிறார்கள். உழைப்பதில் மிகுந்த ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் இருக்கிறார்கள். அதன்மூலம் தங்களையும் தாங்கள் இருக்கும் பிரதேசங்களையும் உயர்த் திக் கொண்டு வருகிறார்கள் என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவில் எந்தப் பகுதி செல்வத்தில் சிறந்து வளர்ந்தாலும் அதில் அவர்களுக்கு எவ்வளவு உரிமையும் பங்கும் உண்டோ அவ் வளவு பங்கும் உரிமையும் நமக்கும் உண்டு.

வட இந்திய மக்களுடன் தமிழர்களை ஒப் பிட்டால் தமிழ்மக்கள் இமயத்தைவிட உயர்ந்த வர்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தமிழர்களிடம் அறிவுக் கூர்மையும், சிறந்த கல்வியும் இருக்கின்றன. உயர்ந்த பண்பாடும் கலைகளும், சங்கீதமும் வளமான முறையில் மண்டிக் கிடக்கின்றன. இதற்கும் மேலே வியாபாரத் திறமையும் வீரவாக ஆற்றலும் நிறைய இருக்கின்றன. நல்ல உழைப்பு இருக் கிறது. இத்தனை சிறந்த குணங்கள் தமிழ் மக்களிடம் நிறைந்து இருந்தும் வட நாட்டைப் போல் தமிழ் நாட்டில் ஏன், நல்ல வளர்ச்சி ஏற்படவில்லை? எல்லாத் துறைகளிலும் இனந் தெரியாத சோர்வு ஏற்படுவானேன்? காரணம், இந்தச் சக்திகள் ஒன்றுடன் ஒன்று சேராமல் தனித்தனியாகச் சிதைந்து கிடக்கின்றன.

தமிழ் மக்கள் பிறருடைய வார்த்தைகளில் சுலபமாக மயங்கி விடுகிறார்கள். தமிழ் மக்க ளிடம் தாராள குணமும், வந்தவர்களை எல் லாம் வரவேற்று உபசரிக்கும் உயர்ந்த பண்பும் இருக்கின்றன. ஆனால் பிறர் ஏமாற்றும்படி வெகுளிகளாக இருக்கிறார்கள். தங்களைப் பற்றி யும் தங்கள் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி யும் சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள். தங்களிடம் உள்ள சிறு பூசல்களில் நிதானம் இழந்து பிறருக்கு அதிக இடம் கொடுத்து விடுகிறார்கள். இந்தச் சின்ன விஷயங்களில் மட்டும் கவனமாக இருந்து செயலாற் றத் தமிழ் மக்கள் முயல வேண்டும். அப்படிச் செய லாற்றும் போது தமிழ் மக்கள் தங்களையும் தங்கள் நாட்டை யும் நினைத்து ஒற்றுமையாக இருக்க வேண்டும். அவ்வாறு தமிழ் மக்கள் இருந்து உற்சா கத்துடன் உழைக்கத் தொடங்கி விட்டார்களானால் அவர்களை இந்த உலகத்தில் யாருமே எதற்குமே அலட்சியம் செய்ய முடியாது. அவர்களுடைய குர லுக்கு யாரா யிருந்தாலும் கட்டாயம் மதிப்புக் கொடுத்துத்தான் தீர வேண்டும்.

இந்த ஒரு விஷயத்தை மட்டும் கூறி விட்டு என்னுடன் வட இந்திய யாத்திரை செய்து வந்த அன்பார்ந்த வாசக நேயர்களிடம் இருந்து விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

பிரேம பாசம்



காந்தன்

இமயத்தில் ஏறி வெற்றிக் கொடி நாட்டி இறவாப் புகழ் பெற்றவன் தமிழன்; பாழாய்க் கிடந்த இடங்களைத் தன் அரு முயற்சியால் பண்படுத்தியவன் தமிழன்; தரிசாய்க் கிடந்த இடங்களைத் தன் உடல் உழைப்பினால் தங்கம் விளையச் செய்தவன் தமிழன்; மேதினியெல்லாம் புகழ மேழிச் செல்வத்தில் மேன்மையடைந்தவன் தமிழன்; இதயத்தில் பொங்கும் உணர்ச்சிகளை இணையற்ற முறையில் இலக்கியச் செல்வங்களாக இயற்றியவன் தமிழன்; இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் ஆகிய மூன்று தமிழிலும், ஒப்பாரும் மிக்காரும் இன்றி ஓங்கி நின்றவன் தமிழன்.

இவ்வளவு அரும் பெரும் சாதனைகளை அநாயாசமாகச் சாதித்த தமிழன் வெள்ளித் திரைக்கு ஏற்ற ஒரு கதையைத் தன் மொழியில் தேர்ந்தெடுக்க வழியின்றி வடநாட்டு எழுத்தாளர்களிடம் ஓடுகிறான் என்றால், எந்தத் தமிழனின் இதயமும் நோகத்தானே செய்யும்! (அதற்கு என்ன செய்யலாம்! அது நம் நாட்டின் தலையில் எழுதப்பட்ட (கிஸ்மத்) விதி!)


படாதிபதிகள் மனம் வைத்துக் கொஞ்சம் தமிழ் உணர்ச்சி, நாட்டுப் பற்று, தமிழகத்தின் தனிப் பண்பு—இவைகளில் உண்மையான ஆர்வம் காட்டுவார்களேயானால், தமிழ் நாட்டின் இலக்கியச் சிறப்பையும், இன்றையத் தமிழ் நாட்டில் புதிது புதிதாகத் தோன்றுகின்ற கற்பனைகளையும் நன்கு பயன்படுத்திக் கொண்ட பெருமை நமது படாதிபதிகளுக்குப் போய்ச் சேரும்.

நாக ஸ்டுடியோஸ் தயாரித்து வெளியிட்டிருக்கும் "பிரேம பாசம்" "கிஸ்மத்" என்னும் ஹிந்திப் படத்தின் தமிழாக்கம் என்று அறிந்ததும் ஏற்பட்ட உணர்ச்சிதான் என்னை மேலே கண்டவாறு எழுதத் தூண்டியது.

பல வருஷங்களுக்கு முன்பு வெளியிடப்பட்ட "கிஸ்மத்" என்னும் ஹிந்திப் படத்தை இன்னும் பலர் நினைவு வைத்துக் கொண்டிருப்பார்கள். அந்தப் படத்தில் பிரசித்தி பெற்ற வடநாட்டு நடிகரான அசோக் குமார் கதாநாயகனாக நடித்துப் படரசிகர்களின் அமோகமான ஆதரவைப் பெற்றார்.

இப்பொழுது கொஞ்சம் திரைக் கதையைத் தெரிந்து கொள்ளுவோம்.

பணக்காரரான நாராயண பிள்ளைக்குப் பிரேமா, தாரா என்று இரண்டு பெண்கள். தாயற்ற தம் குழந்தைகளை அவர் மிகவும் அருமையாக வளர்த்தார். அவரது எஸ்டேட் மானேஜரான நாகபூஷணத்தின் மகன் ராமுவும் பிரேமாவும் பால்ய நண்பர்கள். ஒரு நாள் ராமு ஒரு குறத்தியிடம் தன் பெயரைப் பச்சை



குத்திக் கொன்ன, சிறுமி பிரேமா அதை அவன் தந்தையிடம் சொல்ல, அதுகண்டு வெருண்ட ராமு பிரேமாவை மாடிப் படியிலிருந்து பிடித்துத் தள்ள, அவள் கால் ஊனமாகி விடுகிறது. உடனே நாராயண பிள்ளை ராமுவைத் துரத்திச் சென்று கைத் துப்பாக்கியினால் சுட்டு ஆற்று வெள்ளத்தில் வீழ்த்தி விட்டுப் போலீஸுக்குப் பயந்து தானே சொத்து முழுவதையும் இரண்டு பெண்களையும் நாகபூஷணத்திடம் ஒப்படைத்து விட்டுத் தலைமறைவாகச் செல்கிறார். பிறகு சிறுமிகள் பிரேமாவும் தாராவும் குமாரிகளாகிவிடுகின்றனர். சிறையிலிருந்து விடுதலை பெற்ற கைதி ஒருவன் குமாரி பிரேமாவின் உள்ளத்தில் குடிபுகுந்து விடுகிறான். நாகபூஷணம் அந்த அநாதைப் பெண்களைப் பல கொடுமைக் குள்ளாக்குகிறான். அந்தக் கொடுமைகளுக்கு இடையில் கள்ளனின் காதல் பிரேமாவை ஆட்கொள்ளுகிறது. அவன், முதலில்லாத வியாபாரமாகிய மூடிக்க மாறித் தொழிலில் ஈடுபட்டுப் பிரேமாவுக்கு உதவுகிறான். சின்ன வயதில் பிரேமாவின் காலை ஒடித்த ராமுவே வாலிப வயதில் மீண்டும் வந்து அவள் கரம் பற்றுகிறான்.

பிரேமாவாக நடிக்கும் சாவித்திரிக்கு இந்தப் படத்தில் முதல் ஸ்தானம் அளிக்க வேண்டும். தப்பி வந்த கைதிக்குத் தன் வீட்டில் இடங் கொடுத்தபோதும், கொஞ்சம் கொஞ்சமாகத் தன் நெஞ்சத்தில் கள்ளனுக்கு இடங்கொடுத்த போதும், தங்கை தாரா நாகபூஷணத்தின் மகன் ராதாவிடம் மனம் பறிகொடுத்துத் தவித்ததை யறிந்து அவளைக் கண்டித்துத் திருத்திய போதும், மீண்டும் அவள் அன்பில் நெகிழ்ந்த போதும், தங்கைக்காக நாகபூஷணத்தினிடம் வாதாடிய போதும் சாவித்திரியின் நடிப்பு, பேச்சு, முகபாவம் யாவும் நன்று யிருந்தன.

ஜெமினி கணேசனுக்கு மூடிக்கமாறி வேஷம் பொருந்தியிருந்தது. ஆனால், அவர் நடிப்பில் சில இடங்களில் உற்சாகம் குன்றி யிருந்தது. யாருக்கோ பயந்து தம் நடிப்பைக் குறைத்துக் கொள்ளுவது போல் இருந்தது.

திரைக் கதையின் வேகத்தையும், சுவாரஸ்யத்தையும் குறைப்பதற்கு இப்படத்தின் நடனங்கள் நன்கு உதவி செய்கின்றன. பாடல்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், பாட்டும் சரி, மெட்டும் சரி மனசில் இடம் பெறவில்லை. ஆரம்பம் முதல் இடைவேளை வரையில் படத்தில் நிலவிய நிதானம் இடை வேளைக்குப்

பிறகு கட்டவிழ்த்துக் கொண்டு தலைதெறிக்க ஓடத் தலைப்படுகிறது. அப்பொழுது சம்பவங்களெல்லாம், பெரிய விபத்தில் சிக்கிக் கொண்ட ரயில் பெட்டிகள் ஒன்றோடொன்று மோதிச் செருகிக் கொள்வது போல ஆகி விடுகின்றன.


வேலைக்காரன் ரத்தினமாக நடிக்கும் சாரங்கபாணி தமக்கே உரிய பாணியில் எல்லாரையும் குலுங்கக் குலுங்க நகைக்க வைக்கிறார். சமையலறையில் தங்கத்தோடு உல்லாஸமாகப் பேசும் போது, "இன்ஸ்பெக்டர் ரொம்ப வேண்டியவர். பார்த்தால் விடவே மாட்டார். அதற்காகத்தான் அவர் கண்களில் படாமல் இருக்கேன்" என்று அவர் சொல்லும்போது அதிலுள்ள சிலேடைப் பொருள் எல்லாரையும் 'கொல்'லென்று சிரிக்க வைக்கிறது.

களிப்பூட்டும் வாத்தியமான பியானோவையே விற்றுவிடும் அளவுக்கு வறுமை யடைந்த பிரேமாவின் வாழ்க்கையில், இன்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்று மகிழ்விக்கின்றன.

கதைப் போக்கு பல சம்பவச் சுழல்களில் சிக்கி, மக்களுக்குப் பிடிக்கும் மாதிரியில் நல்ல படியாகவே முடிந்து விடுகிறபடியால் இப்படம் பொது மக்களின் ஆதரவைப் பெறலாம். படப்பிடிப்பு, காட்சி ஜோடனை, ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு முதலியனவெல்லாம் தரங் குறையாமல் இருக்கின்றன. ஆனாலும் இன்னொரு மொழியிலிருந்து கடன் வாங்கித்தான் ஆக வேண்டும் என்ற அளவுக்கு அத்தனை உயர்வு இந்தக் கதையில் என்ன இருக்கிறது என்பது நமக்குப் புரியவில்லை.



தெய்வீக சிருஷ்டி



மாறன்

சிருஷ்டி தேவனாகிய பிரம்மா கலைமகளுடன் தேவலோக நந்தவனத்தில் உல்லாசமாக வார்த்தையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது இந்த மண்ணுலகம் படைக்கப்பட்டிருக்கவில்லை. அதுவரை சிருஷ்டித்துள்ள தமது படைப்பின் பெருமைகளைப் பற்றிக் கலைமகள் ஏதாவது அபிப்பிராயம் கூறுவாள் என்று எதிர்பார்த்தார் நான்முகன். கலைமகள் பிரம்மதேவனிடம் அதுபற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

நான்முகனே பேச்சை ஆரம்பித்தார். "இத்தனை உலகங்களைப் படைத்த என் திறமையை வியந்து நீ ஏன் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை! அதுபற்றி அபிப்பிராயம் சொல்லுவதற்கு உனது நாவன்மை போதாதோ!" என்று குத்தலாகக் கேட்டார் பிரமன்.

கலைமகள் புன்முறுவல் பூத்தாள். "பயனற்ற சிருஷ்டிகளைப் படைத்ததில் தாங்கள் பெருமை கொள்வது பற்றி நான் வியப்படைகிறேன். இத்தனை லோகங்களைப் படைத்ததனால் நமது தேவலோகத்துக்கு என்ன பயன் ஏற்பட்டது என்று எண்ணிப் பாருங்கள். தங்கள் சிருஷ்டிகளின் பயனற்ற தன்மை நன்றாக விளங்கும்" என்று பதிலளித்தாள்.

பிரம்மதேவனுக்கு ஆத்திரம் வந்தது. ஆனால் நாவரசி சொன்னதில் உண்மை இருந்தது என்பதையும் உணர்ந்தார். நான்முகனின் நான்கு தலைகளிலும் அறிவு சுடர் விட்டது. "ஆம், தேவி! எண்ணிப் பார்த்தால் அண்டமுகட்டில் உருளும் இந்த உருண்டைகளால் எதுவும் பயனில்லைதான். ஆனால் நமது தேவலோகம் பயன் எதையும் நாடி நிற்பதல்லவே! குறை இருந்தாலல்லவா அதற்கு நிறைவு தேட வேண்டும்!" என்றார்.

"அலுத்துச் சலித்துப் போன தேவலோகத்துக்கு இன்னும் புதிய தேவர்களைச் சிருஷ்டித்துக் கொடுத்துப் புதுமை இன்பம் உண்டாக்கலாமே!"

"புதிய தேவர்களா!"

"ஆமாம். அது தங்கள் சக்திக்கு அப்பாற்பட்டது என்று நினைக்கிறேன். வெறும் நெருப்புக் கோளங்களைக் கணக்கின்றி வானில் உருட்டி விடுவதற்கு அப்பால் இயங்கவில்லையே தங்களுடைய சிருஷ்டித் திறமை." சிருஷ்டி தேவனுக்கு ஊக்கமூட்ட வேண்டுமென்றே தேவி இவ்வாறு சொன்னாள்.

"இல்லை, தேவி. விநோதப் பொழுது போக்கில் எனது மனம் லயித்து விட்டதன் பலனாக ஏற்பட்ட வீண் சிருஷ்டிகள் இவை! நீ சொல்வது போல சிருஷ்டித் திறமையில் முன்னேற்றத்தைக் காண இப்போதே முயற்சி செய்வேன். எத்தனை விபரீதங்கள் நேரிடினும் எனது லட்சியத்தைக் கண்டே தீருவேன்" என்று எல்லையற்ற பாழ் வெளியை நோக்கி விரைந்தார் பிரம்மதேவன். அவரது வேகத்தைக் கண்டு பஞ்சபூதங்களும் நிலைகலங்கின. பாழ்வெளியை ஆவேசத்துடன் உற்று நோக்கினார்.

கலைமகள் வெகு தொலைவில் அமர்ந்து, அவருடைய திகைப்பைக்கண்டு வருந்தினாள்.

ஆத்திரம் பீறிட, எதிரே பாழ்வெளியில் நின்ற சூரிய கோளத்தின்மீது ஓங்கி அறைந்தார் பிரம்மதேவன். அதன் ஒரு பாகம் சிதறி ஓடித் தனியாக உருண்டது பாழ்வெளியில். "இதில் சிருஷ்டிப்பேன் தேவனை" என்றார். பஞ்சபூதங்களும் அடங்கி ஒடுங்கி ஒன்றுடன் ஒன்று ஐக்கியமாகி நின்றன. அவருடைய புத்தம் புதிய சிருஷ்டியான இந்த மண்ணுலகில் இனி என்ன செய்வது என்ற திகைப்பில் ஏற்பட்ட கோபத்தினால் வியர்வை கடலாகப் பெருகி நின்றது.

ஐம்பெரும் பூதங்களின் நுட்பக் கலவையைக் காலமெனும் கலுவத்திலிட்டு யுக யுகாந்திரமாக மேன்மைப் படுத்தினார் சிருஷ்டி கர்த்தா. நீர், நெருப்பு, விண், மண், காற்று ஆகிய ஐந்து பூதங்களும் காலமெனும் கலுவத்தில் பஞ்சுபடாத பாடுபட்டன.

அணுச் சேர்க்கைகள் பல பல வகைகளில் ஐக்கியப்பட்டு நிற்கவே அவற்றில் உயிர்த் தத்துவத்தை ஏற்றினார் பிரம்மன். உயிர்த் தத்துவம் கண்ட அணுச் சேர்க்கைகள் காலப்போக்கில் பற்பல வகைகளில் வளர்ச்சியடைந்து அமோகமாகப் பெருகித் தழைத்தன. அந்த ஆரம்ப அணுச் சேர்க்கைகள் தாங்கள் உயிர்பெற்ற இடத்திலேயே வளர்ந்து வளர்ந்து மரம், செடி, கொடி வகைகளாக நின்று துடி துடித்தன. தத்தம் இன அணுச் சேர்க்கைகளை நூறு, ஆயிரம், லட்சமாகப் பெருக்கியது தாவர இனம். பூ, பிஞ்சு, காய், கனி என்று பரிணமித்து உலகமெங்கும் வியாபித்தது.

பிரம்மன் பிரமித்து நின்றார். தாவர வர்க்கம் உயிர்த் துடிப்பின் இயக்கத்தால் பெருகி வரும் வேகத்தைக் கண்டார். நின்ற இடத்தை விட்டு நகராமல் பஞ்சபூத அணுக்களில் தனக்கு வேண்டியவற்றைக் கலந்தெடுத்துப் பெருகிக் கொண்டிருக்கும் இந்தத் தாவர வர்க்கத்திலிருந்து, தேவன் ஒருவன் பரிணமிப்பது எப்படி என்று புரியாமல் ஒரு யுகம்

கலங்கி நின்றார் பிரம்மன். நாயகனின் நிலைப் பைக் கண்டு நாமடந்தை நகைத்தாள்.

மண்ணையும், விண்ணையும், காற்றையும் பற்பல வர்ண விநோதங்களாக்கிப் பற்பல உருவங்களாக்கித் திருக்கலைப் பொருள்க ளாக்கி உலகமெங்கும் கொம்மாளம் அடித்துக் கொண்டிருந்தது தாவர வர்க்கம்.

தாவர வர்க்கத்திலிருந்து வேறொரு சிருஷ்டி! தாவர வர்க்கத்தினிடமிருந்த உயிராசை, நின்று நின்று சலித்து விட்டது. நகரும் உருவாகப் பரிணமிக்க வேண்டுமென்று துடிதுடித்தது. தாவர வர்க்கங்களின் நெடுங்காலப் பரிணாம வளர்ச்சியிலிருந்து நகருகின்ற ஜீவ வர்க்கம் ஜனித்தது.

மண்ணுலகில் ஜீவராசிகள் அங்குமிங்கும் ஓடி ஆடின! தங்களுக்கு மூலாதார வர்க்க மாக இருந்த தாவர வர்க்கத்தின் உயிராசைத் துடிப்பு பிராணி வர்க்கத்தினிடம் இன்னும் பல மடங்கு வேகத்துடன் ஓங்கி நின்றது. உயிருடன் என்னாளும் சிரஞ்சீவியாக வாழ வேண்டுமென்ற ஆசை மிகவும் வலுத்து நின்றது.

பிராணி இனம் தன் உயிராசை காரண மாகப் பைத்தியம் பிடித்து அழித்தல் வேலை ஒன்றிலேயே ஈடுபட்டிருப்பதைக் கண்டு பிரம்மன் ஒரு யுகம் சிரித்தார். கலைமகள் அவ ருடைய வீண் சிரிப்பைக் கண்டு கைகொட்டிச் சிரித்தாள். பிரம்மனின் நான்கு தலைகளும் இன்னும் தீவிரமாக ஆலோசனையில் ஈடுபட் டன, பல யுகங்களாக.

பிராணி வர்க்கம் பெருகிப் பெருகி அமைப் பில் பல முன்னேற்றங்களுடன் பரிணமித்தது. அவற்றின் மேல் தோல் சற்று மென்மை யடைந்திருந்தது. உணர்ச்சி நரம்புகள் பண் பட்டுப் பண்பட்டுத் தீவிரமான சக்திகளைப் பெற்று வந்தன. பார்க்கும் விழிகள், கேட் கும் செவிகள், வாசனையை நுகரும் நாசிகள் முதலிய புலன்கள் அவ்வவற்றின் வாழ்க் கைக் கேற்றபடி வெகு நுட்பமாக இடங்க வேண்டிய அவசியம் ஏற் பட்டது.

புதிய பரம்பரைகளில் மூளையின் நரம்பு அம்சம் நுட்ப சக்திகளோடு வளர்ந்து வந்தன. பிரம்மன் நான்கு முகங்களிலும் புன்னகை அரும்பியது. நம்பிக்கையின் ரேகை படர்ந்தது அவ ரது கண்களில். யுகத்துக்கு லட்சக் கணக்கான பரம்பரை எடுத்து வரும் பிராணி வர்க்கத்தை ஆவலோடு கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார் சிருஷ்டி கர்த்தா.

அதோ ஒரு பிராணி தனது முன் னிரண்டு கால்களைப் பூமியில் அதிகமா கப் பதிக்கவில்லை. அதனுடைய மேல் நோக்கு, அதன் தலையை நிமிர்த்தியது. பின் கால்களை மட்டுமே தனது நடைக்கு அதிகமாக உபயோகித்தது அந்தப் பிராணி. அதன் முன்னிரண்டு கால்களும் பூமியை விட்டு விலகி எழுந்தன. பிரம்மன் குதூகலித்தார். தன் இரையை மரக் கிளைகளில் எதிப் பறித்து, எடுத்துப் பார்த்துத் தின் பதற்கே தனது முன்கால்கள் இரண் டையும் மிகவும் லாகவமாக உபயோகிக்க ஆரம்பித்தது அந்தக் குரங்கு இனம்.


மண்ணிலிருந்து இரு கால்களை எடுத்து விட்ட குரங்கு விண்ணை நோக்கும் திறம் பெறவில்லை.

பிரம்மனின் நம்பிக்கை தளர்ந்தது. ஒரு யுக காலம் மண்ணுலகில் இன்னுமொரு பிராணி யினம் தோன்றியது. அது முன் கால்கள் இரண்டையும் நிரந்தரமாகவே மண்ணிலிருந்து இழுத்துக் கொண்டது.

மண்ணின் வாசனை பாதியளவுக்கு இந்த இனத்தை விட்டு நீங்கி விட்டதென்று கண் டான் பிரம்ம தேவன். அதன் உடம்பிலும் புதியதொரு மென்மை தோன்றியது. நரம்புக ளெல்லாம் வெகு நுணுக்கமாகப் பண்பட்டுப் பரிணமித்து அதன் தலையினுள் மிருதுவான மூளையாக அமைந்திருந்தது. பிரம்மன் தன்னைச் சற்று ஆசுவாசப் படுத்திக் கொண்டார். தன்னை யறியாமலே கலைமகளைப் பார்த்துப் புன்னகை பூத்தது, அவருடைய திவ்யத் திருமுகங்களில் ஒன்று.

மனிதன் சுயமாக எண்ணிப் பார்த்தான். ஆம்! எப்படித் தின்று கொழுத்து என்னாளும் சிரஞ்சீவியாக உயிர் வாழ்வது என்றுதான் எண்ணிப் பார்த்தான். தன் பிறவிக்கு ஆதார மாக இருந்த தாவர வர்க்கம் தன்னுடன் பரிண மித்திருக்கும் சகோதரப் பிராணி வர்க்கம் இரண்டையும் பட்சிப்பதற்குத் தீவிரமாகத் தன் மூளையைப் பயன்படுத்தினான் மனிதன்.

தனது கடைசி முயற்சியான மனித இனமும் இவ்வாறு சுய சேவைக்காகவே மூளையைப் பயன்படுத்திக் கொண்டு மண்ணுலக ஆசையில் மூழ்கி வாழ்வதைப் பார்த்துப் பார்த்து பிரம் மன் தவித்தான், தோல்வியைக் கண்டுவிடு வோமா என்று. நாமடந்தை பிரம்மனிருக்கு மிடத்துக்கு விரைந்தோடி வந்தாள். கணவ னுடைய பரிதவிப்பைக் கண்டு தேவி மனம் இரங்கினாள். முற்றி நின்ற பஞ்சபூதப் பரிணாம





எல்லையில் அறிவுச் சுடரை ஏற்றி வைத்தாள் தேவி! மனித மூளையில் அறிவுச் சுடர் ஒளிக்து வளர ஆரம்பித்தது.

இறந்தகால அனுபவங்கள் அவனுக்கு எதிர் காலத்தைப் பற்றிய யூகங்களைத் தந்தன. அழிந்த இடத்தில் ஆக்கம் காண விழைந்தான் அவன். மற்றப் பிராணிகளின் வலுவையும் தக்க ஆக்க வேலைக்குப் பயன்படுத்த எண்ணி மாடுகளை வசக்கினான். அறிவின் ஒளி மேன் மேலும் சுடர்விட ஆரம்பித்தது.

நான்முகன் களிப்புக் கடலில் மூழ்கினான் ஒரு யுகம். அடுத்த யுகத்தில் கலைமகளின் ஏளனச் சிரிப்பொலி கேட்டு விழித்தெழுந்து பார்த்தான் மண்ணுலகை!

மண்ணுலகில் வாழ என்னென்ன சுக வசதிகள் வேண்டுமோ அத்தனையையும் அமைத்துக் கொள்வதிலேயே வெகு தீவிர மாக மூழ்கியிருந்தது மனித குலம்.

"அடடா! உலகத்திலுள்ள மனிதர்கள் யாவரும் நம் இனம்; எல்லோரும் வாழ வேண்டும் என்ற எண்ணம்கூட இந்த மனித ஜென்மத்திடம் இல்லையே! தான் பெற்ற புனித ஜென்மத்தை வீண் ஜென்மமாக்கு கிறானே இந்த மனிதன்" என்று பிரம்மன் அங்கலாய்த்தார். சரஸ்வதி தேவி சிரித்தாள். "அறிவுபடுத்தும் பாடு அது!" என்று உணர்த் தினாள் தன் கணவனுக்கு.

"ஆமாம்! நீ அருளிய அறிவுதானே அது!" என்று ஏக்காளமாக இடித்துரைத்தார் வேதன்.

"என்னைக் குறை கூறுகிறீர்கள். மண்ணின் வாசனை நீங்கவில்லை, தாங்கள் இத்தனை காலம் பாடுபட்டுப் படைத்த மனித ஜென்மங்களுக்கு. இவர்களால் பூர்வாசிரமத்தில் பெற்ற மிருகத் தன்மையை விட்டு வெளிவர முடியவில்லை. நான் தந்த அறிவை, அந்தப் பூர்வாசிரம மிருகத் தன்மையை வளர்க்கவே அல்லும் பகலும் பாடுபடுகிறார்கள், தாங்கள் படைத்த மனிதர்கள். அதற்கு நானா பழி!" என்றாள் கலைத் தேவி.


"தேவி, சற்றுப் பொறு. பஞ்ச பூதங்களில் கலந்து நிற்கும் தெய்விகப் பண்பு நீ தந் தருளிய அறிவின் துணையாலும் வெளிப் பட வில்லையானால் அது உனக்கல்லவா இழுக்கு!" என்றார் நான்முகன்.

சரஸ்வதி தேவி மண் ணுலகை உற்று நோக்கி னாள். "இல்லை, இல்லை. தங்கள் படைப்பில் தான் விபரீதம் ஏற்பட்டிருக்க வேண்டும்...... அதோ பாருங்கள் தேவா! இப் பொழுதுதான் ஒரு மனி தன்–அதோ அந்த நதிக் கரையில்! மண்ணுலக வாசனையை விட்டு உயர் நோக்குடன் போதி மரத் தடியில் வீற்றிருக்கிறான். உலகத்து மக்கள் யாவ ரையும் ஒரு நோக்குடன் காண்கிறான். மக்கள் யாவரும் நல்வாழ்வு வாழ் வதற்கு ஒரு வழி காணத் தன் சிந்தனையை—நான் தந்த அறிவின் ஒளியைப் பயன் படுத்து கிறான். அறிவின் ஒளி தெய்விகப் பாதையில் அவனுக்கு வழி காட்டும், தாங்கள் கவலையை விடுங்கள். தங்கள் சிருஷ்டி வீணாகி விடவில்லை. புத்ததேவன் வந்தான் நமது வானுலகுக்கு! நாம் நந்தவனத்துக்குச் செல்வோம். வாருங் கள்" என்று களிப்புடன் கூறினாள்.

சிருஷ்டி கர்த்தா உள்ளம் புளகாங்கித மடைந் தான்! ஆனால் அவனுடைய பார்வை மண் ணுலகை விட்டு அப்பால் செல்லவில்லை. திரும் பவும் அவருடைய மனம் கலங்கியது. "தேவி! தேவி, அதோ பார் மறுபடியும் உலகம் பாழ்படுகிறது பார். மிருகவெறி இன்னும் தலைதூக்கி ஆட்சி புரிகிறது. அசுரத் தன்மை நீங்கவில்லை. உன் அறிவு தந்த பரிசு களாக எத்தனை எத்தனை நாசக் கருவிகளை உற்பத்தி செய்கிறார்களென்று பார். ஏன் படைத்தேன், மண்ணுலகையும் இந்த மனித இனத்தையும்!" என்று கதறினார் பிரம்மதேவன்.

"தங்கள் படைப்பின் விபரீதத்தைக் கண்டு நிதானத்தை இழந்ததால்தான் இன்னும் என்மீது குறை கூறுகிறீர்கள். பூர்வ இன வாசனை அந்த அளவுக்குப் பற்றிப் பிடித்திருக் கிறது. தாங்கள் படைத்து விட்ட மனித இனத்தில். இதற்கு நான் பொறுப்பாளி யல்லவே! இதோ பாருங்கள்! நான் பெற்ற அறிவின் ஒளியினால் தெய்வ மனம் பெறுகிறார், இன்னொரு மனிதன்! ஹிம்சைக் கும்பலின் நடுவே, அஹிம்சைத் தத்துவத்தைப் பரப்பி ஹிம்சைக்குப் பலியாகித் தேவனாகிறார். சென்ற யுகத்தில் அசுர குணத்தை அசுர குணத் தால் அடக்க வேண்டுமென்று கண்ணதேவன் இறங்கி வந்தான். இந்த யுகத்தில் இந்த மனிதன் அசுர குணத்தைத் தெய்விகக் குணத் தினால் வென்று உயர்ந்து விட்டான். காந்தி யுகம் இது! தாங்கள் இந்தப் புதிய படைப் பில் வெற்றி கண்டு விட்டீர்கள் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆயினும் ராட்சச வாசனை தெய்விக குணத்தை மிஞ்சி நிற்கிறது, தாங்கள் படைத்த படைப்பில். அதன் விபரீத விளைவுகளையும் தாங்கள் அனுபவித் துத்தானே ஆகவேண்டும்" என்று முடிவாகக் கூறினாள் தேவி! பிரம்மதேவனுக்குத் தம் முடைய நான்கு தலைகளும் 'கிறு கிறு' வென்று சுழல்வது போலிருந்தது.


இப்புது வத்னி
உங்களுக்கு
மகிழ்ச்சியளிக்கும்
தரமான சோப்புத் தயாரிப்பில் முதல்வரான கோத்ரெஜ் தயாரிக்கும் இந்த தூய்மையான சோப் உங்களுக்கு புத்துணர்வும் அதிக வசீகரமும் அளிக்கும். எங்கும் மக்களுக்கு உற்சாக மளித்ததைப்போலவே அது உங்களுக்கும் உற்சாகமளிக்கும்.
வத்னி*
கடைசி சொட்டு வரை புதுமையும் நறுமணமும் வாய்ந்தது.
VATNI
INDIA'S POPULAR SOAP
வத்னி VATNI
மற்றும் வத்னி பேபி 2 அணா
ஆரோக்கியத்திற்கும் வசீகரத்திற்கும் திறவு கோல்
'சாவி' மார்க்
* 'தாய்நாடு' என்று அர்த்தம் கொண்ட 'வதன்' என்ற வார்த்தையிலிருந்து திரிபு பெற்றது.
ஸ்வதேசி நிர்வாகம் மூலதனம்
Godrej கோத்ரெஜ்
சலவை சோப்புத் தூள்கள்
ஷேவிங் ஸ்டிக் • ஹேர் டானிக்
டாய்லெட் பவுடர்



நல்ல சிநேகிதம்

ஜீகோணல்

நடராஜன் லீலாவைக் காதலித்தான். பாஸ்கரனும் அவளையே காதலித்தான். ஆனால் லீலா இவ்விருவரையும் காதலிக்க வில்லை. எப்பொழுதாவது தப்பித் தவறி நடராஜனையோ பாஸ்கரனையோ பார்த்து விட்டால் புலியைக் கண்ட மான் போலத் துள்ளிக் குதித்து வீட்டுக்குள்ளே ஓடி மறைந்து விடுவாள். தங்களைக் கண்டதும் அவள் பயந்து ஓடுகிறாள் என்று பாஸ்கரனும் நடராஜனும் நினைக்கவே இல்லை. தங்களைக் கண்டதும் ஒரு விதமான வெட்கமும் கூச்சமும்தான் ஏற்பட்டு அவள் மறைந்து விடுகிறாள் என்று மனத்தைச் சாந்தி செய்து கொண்டனர். முகத்தைக் கண்டவுடனேயே வீட்டுக்குள் ஓடி ஒளிந்து கொள்கிறவளை அவர்களால் எப்படித் தடுத்து நிறுத்த முடியும்? எல்லாம் ஒரு காலத்தில் தெளிந்து விடும் என்று அவர்கள் தங்கள் உள்ளத்தில் எழுந்த காதலைச் சிதற விடாமல் பாதுகாத்து வளர்த்து வந்தனர்.

லீலா தங்களைக் காதலிக்கிறாளா இல்லையா என்பதைப் பற்றி நடராஜனோ பாஸ்கரனோ கவலையே கொள்ள வில்லை. தனக்கு எதிராகப் பாஸ்கரன் முளைத்து விட்டானே என்றுதான் நடராஜனின் மன எரிச்சல். தனக்கு எதிராக நடராஜன் தோன்றி விட்டானே என்றுதான் பாஸ்கரனின் மனப் புகைச்சல். லீலாவின் மேல் கொண்ட காதல் எப்படி அவர்கள் இருவர் மனத்திலும் நாளுக்கு நாள் அடர்ந்து படர்ந்ததோ அப்படியேதான் அவர்களுக்குள் பகை உணர்ச்சியும் நாளுக்கு நாள் மண்டிப் பரவியது. நடராஜன் எங்காவது தனிமையாக இருட்டில் வரும் போது நான்கு போக்கிரிகளை விட்டு நன்றாக அடிக்கச் சொல்லிக் குறைந்தது மூன்று நான்கு மாதங்களாவது அவனைப் படுக்கையில் கிடத்திவிட வேண்டும் என்பது பாஸ்கரனின் ஆவல். அப்படிச் செய்து விட்டால் வளரும் காதலுக்கு இடையூறு இருக்காதல்லவா என்று பாஸ்கரன் நினைத்தான். ஊரில் அடியாளுக்கா 'பஞ்சம்? அம்மன் கோயில் தெரு வட்டாரத்திலும் நல்ல முரடர்களாகப் பார்த்து நாலு பேரைச் சிநேகிதம் செய்து கொண்டான்.

அங்கும் இங்கும்!



அவன் ஆசை!



"என்னிடம் மாத்திரம் பணம் இருந்தால் என் சொந்தத்திலே ஆனந்தமா ஒரு ஜெயிலைக் கட்டிக்கொண்டு நினைச்சபோது வெளியே போயிட்டுத் திரும்பி வருவேன்!"

நடராஜன் இதற்கெல்லாம் சளைத்தவனா? அவன் சின்னக் காளைப் பேட்டைத் தெருவிலுள்ள முரடர்கள் நாலு பேரைப் பாதுகாப்புக்காகச் சிநேகிதம் செய்து வைத்துக் கொண்டான். நடராஜனும் பாஸ்கரனும் வீட்டை விட்டுக் கிளம்பும்போதெல்லாம் நான்கு பாதுகாப்புக் காவலர்கள் இல்லாமல் வெளியே கிளம்புவதே இல்லை.

அவர்களுக்கு என்ன குறைச்சல்? மூத்தோர்கள் முன் ஜாக்கிரதையாகக் கொஞ்சம் ஐவேஜி வைத்திருந்தனர். தன் பாதுகாப்பாளர்களுக்காகத் தினமும் கொஞ்சம் பணம் செலவு செய்வதில் அவர்களுக்கு ஒன்றும் குறைந்து விடாது. நடராஜனுக்கும் பாஸ்கரனுக்கும் பகையே ஒழிய, அவர்களுக்குப் பக்க பலமாக வரும் ஆட்களுக்குள் பகையே கிடையாது. அவர்களெல்லாம் மிகவும் அந்தரங்கமான சினேகிதர்கள். அவர்களுக்குள் ஒரு கட்டுப்பாடு இருந்தது. அம்மன் கோயில் தெருவான்மேல் சின்னக்காளைப் பேட்டையான் கை வைக்கக் கூடாது. சின்னக்காளைப் பேட்டையான் மேல் அம்மன் கோயில் தெருவான் கை வைக்கக் கூடாது. இப்படி நெடுநாட்களாக ஒரு ஒப்பந்தம். தொழில் முறைக்காக அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் வாயால் மிரட்டிக் கொள்ளலாம். கையை மாத்திரம் ஓங்கிவிடக் கூடாது. தெருக் கட்டுப்பாட்டை மீறி அவர்கள் இந்த ஒப்பந்தத்தைச் சிதைப்பார்களா?

பாஸ்கரனை எங்கேயாவது நடராஜன் பார்த்தால் அவனைக் கண்டதுண்டமாக வெட்டி விடுவது போல் முறைத்துப் பார்ப்பான், தன் பின்னால் நாலு பேர்கள் வருகிறார்கள் என்ற தைரியத்தில். பாஸ்கரன் இதற்கெல்லாம் சளைத்தவனா? அவன் விழி கொட்டைப் பாக்கு விழி. அப்படியே நடராஜனைக் கசக்கிப் பிழிந்து விடுவது போல் விழிகளை உருட்டிப் பார்ப்பான். அவன் பக்கத்திலும்தான் நான்கு பலசாலிகள் நிற்கிறார்களே? எதற்காகப் பயப்பட வேண்டும்?

நடராஜனுக்குப் பக்கத்தில் நிற்கும் கதிரன் "எசமான்! பயப்படாதிங்க. நானும் எங்க ஆளும் இருக்கும் வரையில் உங்களை யாரும் எதுவும் செய்துக்க முடியாது" என்பான்.

பாஸ்கரனுக்குப் பக்கத்தில் நிற்கும் மருதை மீசையை முறுக்கிக் கொண்டே, "முதலாளி! அஞ்சாதிங்க. நான் இருக்கும் வரையில் எவனும் உங்களை அசைக்க முடியாது" என்பான்.

"எங்க எசமான் மேலே எவன் கை வைத்தாலும் முதுகுத் தோலை உரிச்சுடுவேன்" என்பான் கதிரன்.

"எங்க முதலாளி மேலே மூச்சுக் காத்துப் பட்டாப் போதும். எலும்பை நொறுக்கிடுவேன்" என்பான் மருதை. இதற்கிடையே, பாதுகாப்பாக வந்த இரு கட்சி அடியாள்களும் தங்களுக்குள் வெற்றிலை பாக்கு பரிமாறிக் கொள்வார்கள்!

நடராஜனும் பாஸ்கரனும் நான்கைந்து முரட்டு ஆசாமிகளுடன் சதா சுற்றுவதைப் பார்த்த லீலா இன்னும் கொஞ்சம் பயந்தாள். எப்பொழுதாவது வீட்டு வாசலிலே வந்து நிற்கும் பழக்கத்தைக் கூட நிறுத்திக் கொண்டு வீட்டுக்குள்ளேயே இருக்கத் தலைப்பட்டாள். அவள் வீட்டுக்குள்ளேயே இருந்து விட்டாலும் பாஸ்கரன் மனத்திலும் நடராஜனின் உள்ளத்திலும் புகைந்து எழும்பி மண்டியிருந்த காதல் தீ அவிந்து விடுமா? அவர்கள் மனசு அந்தத் தீயிலேயே விழுந்த புழுவாகத்தான் துடித்து ஏங்கியது, என்று மறுபடியும் லீலாவின் முக தரிசனம் காண்போமென்று.

ஒரு நாள் லீலாவின் வீட்டுவாசலில் அழகாகப் பந்தல் ஒன்று போடப்பட்டிருந்தது. நடராஜனும் பாஸ்கரனும் அதைப் பார்த்ததும் சந்தேகமும் குழப்பமும் ஏற்பட்டது. எதற்காக அந்தப் பந்தல் போடப்பட்டிருக்கிறது என்று தெரியாதவரையில் அவர்கள் மனத்தில் நிம்மதி ஏற்படுமா? யாரையோ விசாரித்தபோது மறுநாள் ஏதோ கல்யாணம் நடக்கப் போவதாகத் தெரிந்தது. யாருக்குக் கல்யாணம் என்று

கேட்டபோது லீலாவுக்கு என்று பதில் வந்தது. இதை அறிந்ததும் நடராஜனின் உள்ளமும் பாஸ்கரனின் மனமும் எவ்வளவு முறிந்து போயிருக்கும் என்று சொல்லவா வேண்டும்? போட்டி இல்லாமலும் போக்கிரிகளின் உதவி இல்லாமலும் லீலாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகும் பாக்கியசாலியை எண்ணி வயிறு எரிந்து வைதார்கள், மன ஆறுதலுக்காக. காரியம் மிஞ்சி விட்டது. மறுநாள் லீலாவுக்குக் கல்யாணமும் நடந்து விட்டது. இனிமேல் என்ன செய்ய முடியும்? காதலை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டியதுதானே?

இவ்வளவு நடந்த பின்பும் அவர்களுக்குப் போக்கிரிகளின் உறவும் உதவியும் வேண்டுமா? அதை விட்டு விட வேண்டியதுதானே? ஆனால் அவ்வளவு எளிதாக விட்டு விட முடியுமா அந்த நட்பை? அவன் தெரு நண்பர்கள் நடராஜனிடம் 'எசமான் எசமான்' என்று உயிரை விட்டனர். ஆனால் பாஸ்கரனிடம் அவன் அன்பர்கள் 'முதலாளி முதலாளி' என்று உயிரை விட்டனர். இப்படிப் பட்ட அன்பையும், நட்பையும் எப்படித் துறக்க முடியும்? இந்த நட்பை நடராஜனும், பாஸ்கரனும் துண்டித்துக் கொள்ள நினைத்தாலும் அம்மன் கோயில் தெரு அன்பர்களும், சின்னக்காளைப்பேட்டை நண்பர்களும் விடாத வண்ணம் காப்பாற்றிக் கொள்ளத்தான் நினைத்தனர்.


சின்னக் காளைப் பேட்டை அன்பர்களும் அம்மன் கோயில் தெரு நண்பர்களும் தங்கள் தொழில் முறை விரோதத்தைச் சில மணி நேரங்களுக்குத் தாற்காலிகமாக நிறுத்தி விட்டுப் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

மறு நாள் சின்னக் காளைப் பேட்டை அன்பர்கள் நடராஜனை அழைத்துக் கொண்டு அடுத்த தெரு வழியாக நடந்து போன போது ஒரு வீட்டு வாசலில் புஷ்பா நின்று கொண்டிருந்தாள். புஷ்பா குடும்பம் அந்த ஊருக்குப் புதுக் குடி. அன்பர்கள் நடராஜனுக்கு அந்தப் பெண்ணைக் காட்டிக் கலியாணமாகாதவள் என்று சொல்லி வைத்தனர். நடராஜனின் மனம் புஷ்பாவினிடம் லயித்தது.

அம்மன் கோயில் தெரு நண்பர்கள் பாஸ்கரனுடன் அதே தெருப் பக்கம் நடந்தார்கள். பாஸ்கரன் இதயம் புஷ்பாவிடம் ஈடுபட்டது. அவ்வளவுதான்.

பழையபடி நடராஜனுக்கும் பாஸ்கரனுக்குமிடையே மீண்டும் போட்டி ஏற்பட்டது.

புஷ்பா வீட்டு வாசலில் பந்தல் போடுகிறவரை இரு அன்பர்கள் கூட்டத்துக்கும் தங்கள் பிழைப்பைப் பற்றிக் கவலையில்லை யல்லவா?

ரகுபதி  ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரகரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

21

சத்திய மார்க்கம் எவ்வாறு கத்தி முனை போன்றதோ, அவ்வாறே அகிம்சா மார்க்கமும். இழுத்துக் கட்டிய கயிற்றின் மேல் ஆட்டக்காரன் சாமர்த்தியமாக நடக்கிறான். அப்பியாஸத்தினால் இந்தக் கஷ்டமான காரியத்தைச் செய்யப் பயில்கிறான். சத்தியமும் அகிம்சையும் கூடிய மார்க்கத்தில் வழி பிசகாமல் நடப்பதற்கு அதைவிட அதிகமான பயிற்சி வேண்டும். இடைவிடாத கவனம் வேண்டும். அகிம்சை என்றால் பிறரை அடிக்கலாகாது, குத்தலாகாது என்றுமட்டும் அல்ல. அது சாமானியம். 'இன்னா செய்யாமை' என்றால் எந்த விதத்திலும் புண்படுத்தலாகாது என்பது வெறுப்பும் தூஷணையும் தேகத்திலே உண்டாக்கிய புண்ணைப் போலவே ஆகும். பொய்யும், அடக்கம் அற்ற காரியமும், பகை யெண்ணமும், அசூயையும், பொருள் நசையும், எல்லாமுமே இன்னா செய்ததாகும். இவை அனைத்தையும் தவிர்க்க வேண்டும். இவ்வாறு எந்த உயிருக்கும் எந்த நோவும் உண்டாக்காமல் பிழைக்க இயலுமா? இயலாது.

நாம் உண்ணும் உணவுங்கூடப் பிற உயிர்களுக்கு ஆகவேண்டியதை நாம் எடுத்துக் கொண்டதாகும். நாம் நடக்கும் பாதையில் கண்ணுக்குக்காணப் படாத அநேக இருமிகளை நாசம் செய்கிறோம். உயிரை விட்டு விட்டாலே தான் இந்த ஹிம்சைகளைச் செய்யாமல் தவிர்க்க முடியும். உயிரை விட்டாலுமே என்ன? உயிரை நாம் அழிக்க முடியாது. அது வேறு உடலைத் தேடிச் செல்லும். உடலை நீப்பது தற்கொலையால் முடியாது. வேறு உடல் அந்த உயிருக்குக் காத்திருக்கிறது. உடலின் மேல் உள்ள பற்றுக்களை நீக்குவதே தான் உடலை நீத்ததாகும். பற்றுக்களை அறவே நீப்பது கடவுளைக் காண்பதே ஆகும். இது அவசரத்தில் முடியுமா? முடியாது. இந்த உடல் நமது என்று எண்ணுவது பிரமை. அது நமதல்ல. அது நம்மிடம் இருக்கும் அளவு அதைச் சரியாகப் பரிபாலிக்க வேண்டியது. அவ்வளவே. உடலையும் உடலுக்கு வேண்டிய எல்லாவற்றையுமே இந்த முறையில் பரிபாலித்து வந்தால் உடலின் பாரம் ஒருகாலம் நீங்கும். நமக்குள்ள சக்தியைக் கொண்டு உடலுக்கு ஏற்பட்டிருக்கும் வரம்புகளை உணர்ந்து, இடையறாத முயற்சி செய்ய வேண்டும்.

அகிம்சையும் சத்தியமும் பின்னிப் பிணைந்து நிற்கிறபடியால் அவற்றை வேறு படுத்த முடியாது. தட்டிப் பார்க்கும் ஒரு ரூபாயின் முன்புறம் பின்புறம்போல், இரண்டும் சேர்ந்ததே ஒரு பொருள். எது முன்புறம் எது பின்புறம் என்று கூடச் சொல்ல முடியாது. அகிம்சை முக்கியமா, சத்தியம் முக்கியமா என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது. சத்தியமே முடிவு. அகிம்சையே மார்க்கம். ஒரு முடிவை அடைவதற்கு ஒரு சாதனம் கண்டால் அந்தச் சாதனம் இடைவிடாத அப்பியாசத்தில் இருக்க வேண்டும். ஆனபடியால் அகிம்சையே வாழ்க்கையின் பிரதான கடமையாகி விடுகிறது. சாதனத்தைக் கவனித்தோமானால் முடிவை அடைவது நிச்சயம். என்ன இடையூறு நேர்ந்தாலும், என்ன கஷ்டங்களைக் கண்டாலும்,

ராஜாஜி

தோல்விகளை அனுபவித்தாலும் முறையைக் கைவிடலாகாது.

[எரவாடா சிறையில் எழுதியது]

இன்னா செய்யாமை என்பது பெருஞ் சக்தியாகும். எதிர்மறை மொழியாயினும், அது ஒரு சக்தியின் கருவாகும். நமக்குள் மறைந்து நிற்கும் பரம்பொருளின் சக்தியாகும். உயிருக்குள்ள ஆத்ம சக்தியாகும். அந்த சக்தியின் முழு வடிவத்தை நாம் காணப்பெறவில்லை. கண்டால் அதன் ஜோதி - வேகத்தைத் தாங்க மாட்டோம். ஒரு சிறிதளவேனும் அது நம்முள்ளிருந்து வேலை செய்ய ஆரம்பித்தால் வியப்புக்கு உரிய காரியங்கள் நடைபெறும். ஆகாயத்தில் நிற்கும் சூரியனுடைய ஒளி உலகம் முழுதும் பரவி உயிர் கொடுப்பது போல், பராசக்தியில் ஒரு சிறு பாகமான நம்முடைய அகிம்சை, வியப்புக்குரிய வேலை செய்யும். சூரியனண்டை நெருங்கினால் எரிந்து போவோம். அதுபோல் நாமும் அகிம்சையைப் பூரணமாக அடைய முடியாது. பராசக்தியாக நாம் ஆகிவிட முடியாது. ஓரளவு நெருங்கலாம். அவ்வளவே. ஒரு துகள் ரேடியம் என்கிற தாதுப் பொருள் புற்று நோயில் உண்டாகும் விஷச் சதையைத் தீர்ப்பதுபோல், ஓரளவு அகிம்சையும் சமுதாயத்திலுள்ள புற்று நோயை யாரும் காணாமல் வேலை செய்து தீர்க்கும்.

[ஹரிஜன் 12—11—38]

படித்துப் பாருங்கள்

மகேந்திர வர்மன்

ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சீரும் சிறப்பும் பெற்று, பெரும் புகழும் அடைந்து செங்கோல் செலுத்தி வந்த மகேந்திர பல்லவன் சாம்ராஜ்யத்தை ஆண்ட மன்னனாக மட்டும் வாழவில்லை; காவியம், ஓவியம், சிற்பம், சங்கீதம் முதலிய பல கலைகளிலும் விற்பன்னனாகவும் விளங்கினான். அருங்கலை விநோதனாகிய இவ்வரசர் பெருமான் குன்றைக் குடைந்து பல குகைக் கோயில்களை அமைத்தான்; சிலைகள் பல செதுக்கிச் சிற்ப சித்திரங்களை வளர்த்தான். அத்தகைய மன்னர் மன்னன் காலத்தில் நிலவியிருந்த மதங்களும், பக்தி இயக்கமும் ஓவியங்களும், இசைக் கலையும், ஆலயங்களும் இந்நூலில் கல்வெட்டு ஆதாரங்களுடன் விரித்துரைக்கப் பட்டிருக்கின்றன. பல்லவ காலத்தவரான நாவுக்கரசர் பெருமானின் தேவாரப் பாக்கள் சரித்திரச் சான்றுகளுக்கு மெருகு தீட்டுகின்றன. ஆராய்ச்சித் துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு இந் நூல் கருவூலமாக விளங்கும். ஆசிரியர் வேங்கடசாமி அவர்கள் எத்தனையோ கல் வெட்டுக்களையும் சான்றுகளையும் நுட்பமாக ஆராய்ந்து அருமையான முறையிலே இந்த நூலை எழுதி யிருக்கிறார். தமிழ் நாட்டுச் சரித்திரத்தை ஆதார பூர்வமாகக் கூறும் சிறந்த நூல் இது. மாணவர்கள் மாத்திரம் அல்லாமல் எல்லாருமே படித்துப் பயன்பெறவேண்டிய அரிய புத்தகம் இது.

ஆசிரியர் : மயிலை, சீனி வேங்கடசாமி; பிரசுரம் : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1/140, பிராட்வே, சென்னை — 1; விலை : ரூ. 2—8—0.


நடுநிசிக் கனவு


ஒருவர் தாம் பல ஊர்களில் சுற்றுப் பிரயாணம் செய்து நேரில் கண்டறிந்த சம்பவங்களைச் சொன்னாலே கேட்கச் சுவாரஸ்யமாயிருக்கும். அப்படி யிருக்கும்போது அர தேசப் பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து, சுவை மிகுந்த தம் அநுபவங்களையெல்லாம் ருசியூட்டும் கதைகளாக ஒருவர் ஆக்கித் தந்தால் அவற்றின் சுவாரஸ்யத்தைப் பற்றிக் கேட்கவா வேண்டும்!

ஹைபிர்டீஷ் தீவுகள், ஸ்பெயின் தேசத்துக் காடுகள், ஜப்பானியப் படையெடுப்புக்குள்ளான பர்மா நாட்டு எல்லை ஆகிய இடங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சி அநுபவங்களை ஆதாரமாகக் கொண்டு நல்ல நல்ல கதைகளாக இந்நூலாசிரியர் புனைந்திருக்கிறார். படிப்பவர் உள்ளங்களில் புது உணர்ச்சியையும், புது வேகத்தையும், புதுச் சூழ்நிலையையும் சிருஷ்டித்து விடும் சக்திவாய்ந்த இச் சிறு கதைகள் பல முறையும் படித்துப் பார்க்க வேண்டியவை.

இந் நூலாசிரியர் காதலை அடிப்படையாகக் கொண்ட பல நிறுகைக் கதைகளைச் சிருஷ்டித்திருக்கிறார். காதலித்த உள்ளம் அந்தக் காதல் நினைவிலேயே காலமெல்லாம் கழித்து விடுகிறது. காலம் போய் விட்டது தெரியாமல் அவ் வுள்ளம் புதுமையைக் கண்டு குமுறுகிறது. குல தர்ம விதிப்படி காதலியின் உள்ளங்கையில் ரத்தக் கறை ஏற்படுத்தின பிறகு மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஏற்படுகிறது. காதலிக்குக் காயம் ஏற்படுத்த விரும்பாத காதலன் திருமணம் வேண்டா மென்று தீர்மானிக்கிறான். இவ்வாறு ஒரு கதையில் காதலில் ஏமாற்றம் ஏற்படுகிறது. இன்னொரு கதையில் ஒரு வாலிபன் ஒரு நாடகக்காரியைக் காதலிக்கிறான். அந்தக் கதையில் ததும்பும் சோக ரஸம் தாங்க முடியாதது. இவ்வாறு, இந்நூலாசிரியர் பலவிதக் காதல் கதைகளை வங்காளி மொழியில் சித்திரித்திருக்கிறார். அவற்றின் தமிழ் மொழி பெயர்ப்பே இந்நூல். மொழிபெயர்ப்பு தங்கு தடங்கல் இல்லாமல் செல்லுகிறது.

ஆசிரியர் : திபேந்தாஸ் ஐ. ஸி. எஸ்., பிரசுரம் : நாதன்ஸ், 24, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை 2; விலை : ரூ. 2-0-0 —விஜயம்






அத்தியாயம் 7

மனத்தில் எரிச்சல்

இந்துமதியைப் பற்றிப் பத்மநாபன் இந்த விவரங்களைக் கூறிய பிறகு என் மனம் மிகவும் நொந்து போயிற்று. பாவம்! ஒரு பேதைப் பெண். சின்னஞ் சிறு வயதில் எத்தனை கஷ்டங்களுக்கு ஆளாகி விட்டாள். தாயை இழந்து, தந்தையை இழந்து, இன்னொருவர் வீட்டில் வந்திருந்து விட்டு, அங்கிருந்தும் ஓடிப் போய் விடும்படி நேர்ந்து விட்டதே! என்ன பரிதாபமான விஷயம்? அவளுடைய குழந்தை உள்ளம் எப்படியெல்லாம் தவித்திருக்கும்? எத்தனை வேதனை அடைந்திருக்கும்?

'என்னுடைய கடிதங்கள் எல்லாம் என்ன ஆகியிருக்கும்?' என்ற கேள்விக்கு என்னால் பதில் கண்டு பிடிக்கவே முடியவில்லை. எப்படியோ அவை இந்துமதிக்குக் கிடைக்காமல் போயிருக்க வேண்டும். அது நிச்சயமாகத் தெரிந்தது. இந்து எனக்குக் கடிதம் எழுதாமல் இருந்ததற்குக்கூட அதுதான் காரணமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இத்தனை துன்பங்களுக்கு நடுவே எனக்குத் தெரிவிக்காமல் இருந்திருப்பாளா?

இந்துவின் படத்தை எடுத்துப் பார்த்தேன். அவள் அதில் உல்லாசமாக ஆகாயத்தில் பறக்கும் கவலையற்ற வானம்பாடியைப் போலிருந்தாள். அவளுடைய கனி சொட்டும் வதனத்தில் புன்சிரிப்புத் தவழ்ந்தது. அதைப் பார்த்த போது எனக்கு இன்னும் கஷ்டமாக இருந்தது. அவள் இப்படியே எப்போதும் கவலையில்லாமல் ஆனந்தமாக இருக்கச் செய்திருக்க வேண்டியது என் கடமை யல்லவா? அன்னை சந்திரமணிக்கு நான் சத்தியம் செய்து கொடுத்தேனே. அதில் தவறி விட்டேனே. அவளுடைய குழந்தை தன்னந் தனியாக அலைவது தெரிந்தால் என்னைச் சபிக்கமாட்டாளா? ஐயோ, கடவுளே! நான் எதற்காகச் சிறைக்குப் போனேன்? பேசாமல் அப்போதே இந்துவைக் கல்யாணம் செய்து கொண்டு ஒரு சிறிய வேலை பார்த்துக் கொண்டிருந்திருக்கக் கூடாதா? என்னுடைய பேராசையால் அல்லவா இப்படி ஆகிவிட்டது?



திடீரென்று நான் சிறையிலிருந்த போது பத்திரிகையில் பார்த்த இந்துவின் படத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆவல் தோன்றியது. என்னுடைய பழைய பெட்டியைத் திறந்து அதில் கிடந்த சாமான்களை யெல்லாம் வெளியில் எடுத்துப் போட்டேன். அதைக் கத்திரித்து வைத்தது மட்டும் எனக்கு ஞாபகம் இருந்தது. எங்கே வைத்தேன் என்று தெரியவில்லை. என்னுடைய அஜாக்கிரதைக்காக என்னையே நான் நொந்து கொண்டேன்.

இன்னொரு விஷயத்தை ஊர்ஜிதம் செய்து கொள்ள விரும்பினேன். மகாபலிபுரத்தில் எடுத்த படத்தில் இந்துவுடன் நிற்பது சுலோசனாவாகத்தான் இருக்க வேண்டுமென்று பத்மநாபன் கூறிய விஷயங்களுக்குப் பிறகு நினைத்தேன். அது வரையில் எனக்கு அப்படி ஒரு எண்ணம் தோன்றவே இல்லை.

அந்தப் படத்தைப் பார்த்த போது நான் இந்துவையே அதிகம் கவனித்த படியால் அந்த இன்னொரு பெண்ணைக் கவனிக்கவில்லை. மேலும் சின்னஞ்சிறிய படத்தில் பார்த்து விட்டு அதை நினைவு வைத்துக் கொள்வது முடிகிற விஷயமா? அந்தப் படத்தில் இந்துவின் முகம் ரொம்பச் சிறியதாக இருந்த போதிலும், என் நெஞ்சில் அவளுடைய உருவம்தான் அப்படியே கல்லில் செதுக்கின மாதிரி பதிந்து போயிருக்கிறதே. அதனால் உடனே தெரிந்து போய் விட்டது.

இப்போது இந்துவுடன் நிற்பது சுலோசனாதானா என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் மிக அதிகமாகி விட்டது. ஆகவே என்னுடைய பெட்டிகள், கோட்டுகள் சகலத்தையும் தேடினேன். ஒவ்வொரு புத்தகமாக எடுத்துப் பக்கம் பக்கமாகப் புரட்டிப் பார்த்தேன்.

நான் இப்படிக் குப்பைக் கூளங்களுக்கு மத்தியில் தலை கலைந்து, அழுக்கான துணிமணிகளுடன் உட்கார்ந்திருக்கும் போது, சுலோசனாவும் ரமேஷும் வந்து சேர்ந்தார்கள்.

எனக்கு அவர்களைப் பார்த்ததும் முதல் தடவையாக எரிச்சல் உண்டாயிற்று. ஒரு மனிதனைச் சற்று நிம்மதியாக இருக்க விடக் கூடாதா? இவர்களுடைய மனப்பான்மைக்கு ஏற்றவாறு நான் என்னைச் சரிப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டுமென்றும் இவர்கள் எதிர்பார்க்கிறார்களே என்று அவர்கள் மீது அளவற்ற கோபம் வந்தது.

சுலோசனா கூறியதைக் கேட்டதும் என் எரிச்சல் அதிகமாயிற்று.

"ஏன் மிஸ்டர் ராய்! இப்படி எதற்காக எல்லாவற்றையும் எடுத்து வெளியே போட்டிருக்கிறீர்கள்? உங்களை அழைத்துக் கொண்டு 'ஹூக்ளி' நதிக்குச் சென்று, படகில் கொஞ்ச நேரம் உல்லாசமாகப் போய் விட்டு வரலாம் என்று வந்தோம். நீங்களானால் இப்படிக் குப்பைக்கு மத்தியில் உட்கார்ந்திருக்கிறீர்களே?" என்றாள்.

"உங்களுக்குப் பிடித்த தெல்லாம் எனக்கும் பிடிக்க வேண்டுமாக்கும்?" என்றேன் வெறுப்போடு.

சுலோசனாவின் முகம் சுருங்கிற்று. "இதில் என்ன தவறு இருக்கிறது?" என்று கேட்டாள்.

"தவறு ஒன்றுமில்லை, லீலா! நாளைக்கு எப்படிப் பிகு பண்ணிக் கொள்வாரென்று இப்போதே அவர் காட்டுகிறார்" என்றார் ரமேஷ் நகைத்தபடியே.

சம்பாஷணை வேறு திசையில் போவதைக் கண்ட நான், "இன்று எனக்கு வேலையிருக்கிறது. நான் எங்கும் வரவில்லை" என்றேன்.

"ஆமாம்! இப்படிக் குப்பையைக் கிளறுவது ஒரு வேலையாக்கும்? எல்லாவற்றையும் சுத்தம் செய்ய வேண்டுமென்றால் ஆளை விட்டுச் செய்யச் சொல்லக் கூடாதா? நீங்கள் ஏன் இப்படிப் புழுதியில் உட்கார்ந்து உடம்பைக் கெடுத்துக் கொள்ள வேண்டும்?" என்றாள் சுலோசனா.

"என் வேலையை நான் செய்து கொள்கிறேன். இதனால் ஒன்றும் எனக்கு உடம்பு கெட்டுப் போய்விடாது. கிளப்புகளுக்குப் போய்ச் சிகரெட் புகையில் உட்கார்ந்திருப்பதைவிட இது எவ்வளவோ மேல்" என்றேன்.



"நீங்கள் சீமைக்குப் போய் வந்தவராக இருந்தும் இப்படி இருக்க வேண்டாம்" என்றான் ரமேஷ்.

"உங்களை நான் இன்று எந்தக் கிளப்புக்கும் கூப்பிடவில்லையே? காற்று வாங்கி விட்டு வரலாமென்றுதானே அழைக்கிறேன்!"

"இல்லை சுலோசனா! இன்று நான் வரவில்லை. என்னை மன்னித்துவிடுங்கள். எனக்கு மனம் சரியாகவே இல்லை."

சுலோசனாவின் முகம் மாறிற்று. "நானும் போகவில்லை. ரமேஷ் நீயும் இங்கேயே இரு. சற்று நேரம் இவரிடம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போகலாம்" என்றாள்.

"நீ இருப்பதாக இருந்தால் பேஷாக இரு. எனக்கு அவசியம் போயாக வேண்டும். நான் என் நண்பர்களிடம் கட்டாயம் வருவதாகச் சொல்லியிருக்கிறேன். திரும்பி வீட்டுக்குப் போகும்போது உன்னை வந்து அழைத்துப்



போகிறேன். அப்படி நான் வராவிட்டாலும்தான் என்ன? மிஸ்டர் ராய் உன்னை வீட்டில் கொண்டு வந்து விட்டு விடுகிறார்" என்று கூறி என்னைப் புன்னகையுடன் பார்த்தான் ரமேஷ்.

நான் என்னத்தைச் சொல்வது? இவளையும் அழைத்துக் கொண்டு போய் விடு என்று சொன்னால் நன்றாக இருக்குமா? படத்தைத் தேடி எடுக்க வேண்டுமென்று வேறு ஆத்திரமாக இருந்தது. சுலோ இருந்தால் தேட முடியாது.

"ரமேஷ்! நான் வேலையாக இருக்கிறேனே. சுலோவை என்னால் வீட்டில் கொண்டுவிட முடியுமென்று தோன்றவில்லை" என்றேன் தயக்கத்துடன்.

"அப்படியானால் நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் இங்கேயே வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டுப் போய் விட்டான் ரமேஷ்.

"ஏன் ரமேஷிடம் என்னைக் கொண்டு விட முடியாதென்று கூறினீர்கள்? நான் இங்கே இருக்கக் கூடாதென்றுதானே?" என்று கேட்டாள் சுலோ.

"ஆமாம்."

"ஏன் நான் இங்கிருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லை?"

"எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லவில்லையே. உங்களுக்குப் புழுதி ஒத்துக் கொள்ளாதென்றுதான் சொன்னேன். எனக்கு இதெல்லாம் பழக்கம்."

சுலோசனா என்னை ஏறிட்டுப் பார்த்தாள். பிறகு புன்னகையுடன், "நான் எனக்காகச் சொல்லவில்லை. உங்களுக்கு உடம்புக்கு ஆகாதே என்றுதான் சொன்னேன்" என்றாள்.

"காப்பி சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டேன்.

"சாப்பிடுகிறேன்" என்றாள் சுலோ.

நான் எழுந்து உள்ளே சென்றேன். சுலோவும் கூடவே வந்தாள். கைகளைக் கழுவிக் கொண்டு, மின்சார அடுப்பை எரிய வைத்தேன். சுலோசனா வியப்புடன் என்னைப் பார்த்தாள்.

"நீங்களா காப்பி தயாரிக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஆமாம்! சமையல்காரனுக்கு இன்று விடுமுறை!"

"எனக்குத் தெரியாதே. தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். காப்பி போட வேண்டாம். வாசலில் உட்காரலாம் வாருங்கள்."

"இது என்ன பிரமாதம்? ஐந்து நிமிஷ வேலை. உங்களுக்கு வேண்டாமென்றாலும், எனக்குக் கட்டாயம் காப்பி வேண்டும்."

"அப்படியானால் எங்காவது ஹோட்டலில் போய்ச் சாப்பிடுவோமே? நீங்கள் சிரமப்படாதீர்கள்."

நான் கொல்லென்று சிரித்தேன்.

"உங்களைக் கல்யாணம் செய்து கொள்கிறவர், ஒன்று சமைக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும்; அல்லது ஹோட்டலுக்குப் போகத் தயாராக இருக்க வேண்டும், இல்லையா? அப்படித்தானே?" என்று கேட்டேன்.

சுலோசனாவின் முகம் சிவந்து போய் விட்டது. "உண்மைதான், மிஸ்டர் ராய்! அதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். சமையலறைக்கு வந்து சமைப்பதென்றால் எனக்குப் பிடிப்பதே இல்லை" என்று கூறினாள்.

அவள் அப்படி வெளிப்படையாக ஒப்புக் கொண்டதும் எனக்குப் பரிதாபமாக இருந்தது.



அதிகப்படி போஷாக்கு பெற தன்
குழந்தைகளுக்கு அவள்
ஓவல்டின் கொடுக்கிறாள்

போதுமான போஷாக்கு இருந்தால் நல்ல ஆரோக்யம் ஏற்படும் என்று அறிந்துள்ள உலகெங்குமுள்ள தாய்மார்கள், தங்கள் குழந்தைகளுக்கு ருசி மிகுந்த ஓவல்டின் கொடுக்கிறார்கள்! குழந்தைகள் தங்கள் உடலிலுள்ள சக்தியை வெகு சீக்கிரத்தில் செலவழித்து விடுகிறார்கள். இழந்துவிட்ட தங்கள் சக்தியைத் திரும்பப் பெற வேண்டியதோடு மட்டுமின்றி, எதிர்கால வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் போதுமான சக்தியையும் உடலில் அவர்கள் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த விஷயத்தில் ஓவல்டின் 'இன்றியமையாதது; இயற்கை உணவுச் சத்துக்களிலிருந்து அது தயாரிக்கப்படுகிறது. இன்னும் B & D வைட்டமின்களுடன் சேர்த்துத் தயாரிக்கப்படுகிறது. இந்த ருசி மிகுந்த புஷ்டியளிக்கும் பானம், சிறுவர்களின் புத்தியையும், உடலையும் நாள் பூராவும் சுறுசுறுப்பாக வைத்திருக்கிறது. நித்திரை காலத்தில் ஆரோக்கிய சுகமுள்ள நித்திரையை அளிக்கிறது. உடனே உங்கள் குழந்தைகளுக்கு ஓவல்டின் கொடுக்க ஆரம்பியுங்கள்.



ஓவல்டின்

எதிர்கால ஆரோக்கியத்திற்கு
உறுதியான அஸ்திவாரம்

விநியோகஸ்தர்கள்: இரதாராம்ஸ் ட்ரேடிங் கோ.
(இந்தியா) லி-ட்

சனிக்கிழமைகளில் இரவு 8 முதல் 8-30 மணி வரை ரேடியோ சிலோனில் (அலைநீ-41.72 மீட்டர்கள்) ஓவல்டின் அமெச்சூர் நேரத்தைக் கேளுங்கள்

TV 443

சற்றுத் தயங்கிவிட்டுச் சுலோ, "என்னுடைய புடவை நன்றாக இருக்கிறதா?" என்று கேட்டாள்.

நான் காப்பிப் பொடியை எடுத்துப் போட்டுக் கொண்டே, "நன்றாக இருக்கிறதே" என்றேன்.

"பார்க்காமலேயே சொல்கிறீர்களே? அதை எப்படி நான் நம்புவது?"

"பார்த்தேனே" என்றேன்.

"இதில் என்ன விசேஷம் என்று கண்டு பிடியுங்கள், பார்க்கலாம்."

நான் கூச்சத்துடன், "எனக்கு ஒன்றும் தெரியவில்லையே?" என்றேன்.

இவள் எதற்காக இப்படியெல்லாம் கேட்டு என்னைத் தொளைக்கிறாள் என்று கஷ்டமாக இருந்தது.

"நான் ஒரு மாதத்துக்கு முன்பு உங்களிடம் இரண்டு புடவைகளைக் காட்டினேனே, அது ஞாபகமிருக்கிறதா?"

"இல்லையே."

"நிஜமாகவா? அன்று நான் இரண்டு புடவைகளை உங்களிடம் காட்டி எது ரொம்ப நன்றாக இருக்கிறது என்று கேட்டேன். நீங்கள் 'இந்தப் புடவையின் கரை அந்தப் புடவைக்கு இருந்திருந்தால் ரொம்ப அழகாக இருக்கும்' என்றீர்கள். உடனே அதே மாதிரி நெய்யச் சொன்னேன். இன்றுதான் அந்தப் புடவை வந்தது."

எனக்கு இப்போது எல்லாம் ஞாபகம் வந்தது. அவர்கள் எல்லோரும் புடவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சுலோசனா என்னைப் பார்த்து, 'எது நன்றாயிருக்கிறது?' என்று கேட்டாள். நான் வேடிக்கையாக, ஏதோ பதில் கூறி வைத்தேன். அதைச் சுலோசனா கவனிப்பாளென்றோ, அந்த மாதிரி வாங்கி உடுத்திக் கொள்வாள் என்றோ நான் நினைக்கவே இல்லை.

"ரொம்ப சந்தோஷம்" என்றேன்.

"உங்கள் குரலில் கொஞ்சம் கூட சந்தோஷத்தைக் காணோமே?"

"இதோ காப்பி கலந்தாகி விட்டது. இதைக் குடித்த பிறகு குரலும் நன்றாக ஆகிவிடும். பிறகு குரலில் சந்தோஷம் தெரியும். இப்போது தொண்டை வறண்டிருக்கிறது. நீங்களும் சாப்பிடுங்கள்" என்று கூறி ஒரு கப் காப்பியைச் சுலோசனாவிடம் கொடுத்தேன்.

இந்துவைப் பற்றிச் சுலோசனாவிடம் கேட்க வேண்டுமென்ற எண்ணம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆனால் அவளிடம் கேட்டால் பத்மநாபனைப் போலவே கூறுவாள். 'ஐயோ! மறுபடியும் இந்துவைப்பற்றி அந்த நாராசமான வார்த்தைகளை எப்படிக் கேட்பது? அதுவும் ஒரு பெண் இன்னொரு பெண்ணைப் பற்றிச் சரியான அபிப்பிராயம் சொல்லி விடுவாளா? பொறாமை வந்து உள்ளத்தை மூடிக்கொண்டு விடாதா?' என்று நினைத்தேன்.

நாம்தான் பிறரை எவ்வளவு சுலபமாகத் தவறாக எண்ணி விடுகிறோம்? பிறரைப்பற்றி மதிப்பிட நாம் சிறிதளவு கூட கூச்சமோ, தயக்கமோ கொள்வதில்லை. ஆனால் நம்மைப் பற்றி மட்டும் நாம் மிகவும் உயர்வாக எண்ணிக் கொள்கிறோம்.

இறைவன் மனித குலத்துக்கு அளித்திருக்கும் சக்திகளில், தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் சக்திக்கு ஈடு இணையே கிடையாது. சுலோசனாவிடம் நான் இந்துவைப் பற்றி அன்று கூறியிருந்தேனானால் எத்தனையோ தொந்தரவுகள் குறைந்திருக்கும்.

அத்தியாயம் 8
கண்ணீர் முத்துக்கள்

சுலோசனாவும் அதன் பிறகு வெகு நேரம் இருக்கவில்லை.

காப்பி சாப்பிட்ட பிறகு, "உங்களுக்கு இவ்வளவு நன்றாகக் காரியம் செய்யத் தெரியும் என்று எனக்குத் தெரியாது" என்று பாராட்டினாள்.

"உங்களைப் போன்றவர்கள் இதெல்லாம் செய்யாமல் விலகிக் கொண்டால் என்னைப்போலச் சிலர் செய்யத் தெரிந்து கொள்ள வேண்டியதுதானே?" என்றேன் கேலியாக.

"ரொம்பப் பரிகாசம் செய்கிறீர்களே, மிஸ்டர் ராய்! சமைக்கத் தெரிந்துகொள்ளாமல் இருந்து விட்டோமே என்று எனக்கு உண்மையாகவே இப்பொழுது வருத்தமாக இருக்கிறது." அவளுடைய குரலில் ஒரு ஏக்கம் தொனித்தது. எப்போதும் குதூகலமாக ஒலிக்கும் அவள் குரலுக்கு அந்த ஏக்கத்தின் சாயை எப்படி வந்தது என்று எண்ணினேன்.

அவளுடைய மனத்தில் என்னதான் இருக்கிறது என்று என்னால் கண்டு பிடிக்கவும் முடியவில்லை. அவளாகக் கூறினால் பிறகு என்னுடைய மனத்திலிருப்பதைக் கூறி விடலாம். நானாக எப்படி ஒரு பெண்மணியிடம் போய், "நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்களா?"

என்று கேட்பது? அப்படிக் கேட்டால் அது எவ்வளவு விரசமாக இருக்கும்?

சுலோசனா நேரில் என்னைக் கேட்டு விட்டால் தேவலை போலிருந்தது எனக்கு. சந்தேகத்திலேயே காலங் கழிப்பது என்பது என்னால் இயலாத காரியம். ஒரு வேளை அவள் எல்லோருடனும் சுதந்திரமாகப் பழகுவது போலத்தான் என்னிடமும் பழகுகிறாளோ என்னவோ? பத்மநாபன் அவள் திருமணத்தைப் பற்றிக் கூறியதால் என் மனத்தில் இப்படியெல்லாம் தோன்றுகிறதோ?

ஆனால் நான் விளையாட்டாகச் சொன்ன விஷயங்களைக்கூட அவள் கவனித்து வைத்துக் கொள்வானேன்? நான் சொன்ன மாதிரி புடவை உடுத்திக் கொள்வானேன்? சமைக்கத் தெரியாதென்று கேலி செய்வதற்காக வருத்தப் படுவானேன்? ஒருவர் சொன்னதற்காக எதையும் செய்யும் குணம் அவளிடம் அடியோடு கிடையாதே! அதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? அட, கடவுளே! இது என்ன சோதனை?

"என்ன இப்படிப் பலத்த யோசனையில் ஆழ்ந்து விட்டீர்கள்?" என்று கேட்டாள் சுலோசனா.

"ஒன்றுமில்லை! ஏன் இன்னும் ரமேஷ் வரவில்லை? என்று நினைத்தேன். அவ்வளவுதான்."

"நான் இங்கே இருப்பது உங்களுக்கு உறுத்துகிறதாக்கும்?" என்று கூறி விட்டு எழுந்து வேகமாக வாசல் பக்கம் சென்றாள் சுலோ.

அவளுக்கு அப்படிக் கோபம் வந்ததைக் கண்டு சற்றுத் திகைத்தேன். பிறகு நானும் எழுந்து அவளைத் தொடர்ந்து சென்று, "நீங்கள் ஏதோ அனாவசியமாகத் தவறாக எண்ணுகிறீர்கள், சுலோ!" என்றேன்.

அதே சமயத்தில் ரமேஷ் காரில் வந்து உள்ளே நுழைந்தான். கதவின் ஜன்னல் வழியாகத் தலையை நீட்டி, "என்ன சுலோ? என்னுடன் வருகிறாயா? இல்லாவிட்டால் மிஸ்டர் ராய் பிறகு உன்னைக் கொண்டு வந்து விடுகிறாரா?" என்று கேட்டான்.


"இல்லை. இப்போதே வந்து விடுகிறேன். இத்தனை நாழியாக நீ வரவில்லையே என்று அவர் தவித்துப் போய் விட்டார்" என்று சொல்லிக் கொண்டே சுலோசனா 'விர்' என்று காரில் போய் ஏறிக் கொண்டாள்.

கார் பறந்து போய்விட்டது. நான் வீட்டுக்குள் சென்றபோது இந்தச் சிக்கலை எப்படிச் சரியாக்குவது என்று யோசனை செய்து கொண்டிருந்தேன்.

அதன் பிறகு மறுபடியும் இந்துவின் படத்தைத் தேடும் காரியத்தில் ஈடுபட்டேன். கடைசியில் அந்தப் படம் ஒரு புத்தகத்திலிருந்து கிடைத்தது. அதை நன்றாகக் கவனித்துப் பார்த்ததும், இந்துவின் அருகில் நிற்பது சுலோசனா

தான் என்று நிச்சயமாகத் தெரிந்தது. 'அதை நான் கண்டு பிடித்து என்ன பயன்?' என்ற பிசாசும் கூடவே எழுந்தது.

தோல் பெட்டியைத் திறந்தேன். அதில் இந்துவின் படங்களும், அவளுக்காக நான் சீமையிலிருந்து வாங்கிக் கொண்டு வந்த சில துணிகளும், ஒரு அழகான பையும், கழுத்தில் அணிந்து கொள்வதற்காகப் பச்சை நிறப் போலிக் கற்களால் செய்யப்பட்டிருந்த மாலையும் இருந்தன. அவற்றை ஒவ்வொன்றாக



எடுத்துப் பார்த்தேன். அவைகளை வாங்கியபோது நான் கற்பனை செய்து கொண்டதெல்லாம் ஞாபகம் வந்தது. இந்து பரிசுத்தமான வெண்பட்டுச் சேலை உடுத்திக் கொண்டிருப்பாள். அவளுடைய கழுத்தில் இந்தப் பச்சைக் கல் மாலையை நானே அணிவிப்பேன். மெல்லியதாகப் பின்னப்பட்ட சங்கிலிகளில் தொங்கும் இந்தக் கற்கள் இந்துவின் கழுத்தில் விளையாடும் அழகைக் கண்டு ஆனந்தப்படுவேன். "இந்து! உன்னைப் பார்த்தால் நிஜமாகவே பூரண சந்திரன் மாதிரிதான் இருக்கிறது. என்னுடைய இதய வானத்துக்கு நீதானே சந்திரன்?" என்பேன். இந்து மலர்ந்த முகத்துடன், "அப்படியானால் சூரியன் யார்?" என்பாள். நான், "சூரியன் இனிமேல்தான் உதிக்க வேண்டும்!" என்பேன். இந்துவின் முகம் அப்படியே சிவந்து போய்விடும். அப்போது எவ்வளவு அழகாக இருக்கும்?

இதை நான் நினைத்துக் கொண்டபோது என்னால் தாங்கவே முடியவில்லை. என்னையுமறியாமல் பொங்கி வந்த சூடான கண்ணீர், மாலைப் பெட்டியில் விழுந்து அதன் வழுவழுப்பான துணியின் மீது முத்தைப்போல் ஜொலித்தது. அதைத் துடைத்துவிட்டு நான் பச்சைக் கல் மாலைப் பெட்டியைத் தோல் பெட்டிக்குள் வைத்து மூடினேன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு நான் ரமேஷ் வீட்டுக்குச் சென்றேன். சுலோசனா கோபத்தை மறந்து விட்டாள் போலிருக்கிறது. மலர்ந்த முகத்துடன் என்னை வரவேற்றாள்.

எல்லோரும் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தார்கள். நானும் அவர்களோடு சேர்ந்து கொண்டேன். நானாவிதமான புஷ்பங்களின் நறுமணம் காற்றில் தவழ்ந்து வந்தது. ஒரு பக்கத்தில் 'டேக்லின்' பூத்துக் கொட்டியிருந்தது. அதன் சுகந்தம் சற்றுத் தலையைக் கிறு கிறுக்கச் செய்தது.

நான் ரமேஷிடம் "இந்தத் தோட்டத்தில் உட்காரும்போதெல்லாம் எனக்குப் பேராசிரியர் ஆண்ட்ரூஸின் வீட்டின் ஞாபகம் வருகிறது. இப்படித்தான் அவர்கள் வீட்டு வாசலில், நாங்கள் எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம். இதேமாதிரி அந்த இடமும் அமைதியாக இருக்கும். அவர்களும் என்ன அன்பான மனிதர்கள் தெரியுமா?" என்றேன்.

"அவருக்கு ஒரு பெண் இருந்ததாகச் சொன்னீர்கள் அல்லவா?" என்று கேட்டாள் சுலோசனா.

"ஆமாம். அவருக்கு ஒரு பிள்ளையும் இருந்தான். அவன் பாவம், யுத்தத்தில் இறந்து விட்டானாம். அதை நினைத்தாலே வேதனையாக இருக்கிறது."

முதல் நாள்தான் ஜான் இறந்துபோய் விட்டதாகப் பேராசிரியர் ஆண்ட்ரூஸ் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதைப் படித்தது முதல் எனக்கு அவர்களுடைய ஞாபகமாகவே இருந்தது.

"ஐயோ, பாவம்! அவர்களுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும்? ஏன் அவனை யுத்தத்துக்குப் போகக் கூடாதென்று உங்கள் பேராசிரியர் தடுத்து நிறுத்தவில்லை?"

"அதுதான் அவர்களிடமுள்ள ஒரு அருங்குணம். என்ன பொறுமையாக இருக்கிறார்கள் தெரியுமா? தங்கள் நாட்டுக்காக என்ன வேண்டுமானாலும் செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார்கள். எனக்குக் கூட இந்தப் போலியான வாழ்க்கை பிடிக்கவே இல்லை. நம்முடைய தேசத்துக்காக நான் என்ன செய்திருக்கிறேன் என்று எண்ணிப் பார்த்தால் அவமானமாக இருக்கிறது."

பத்மநாபன் என் பேச்சில் குறுக்கிட்டு, "என்ன மிஸ்டர் ராய்? உங்களுக்குக் கூட இப்படி யெல்லாம் தோன்ற ஆரம்பித்து விட்டதா? நீங்கள் நீதிபதி வேலை பார்க்கிறவர். மனம் சஞ்சலப்பட இடம் கொடுக்கவே கூடாது. நீங்கள் செய்யும் உத்தியோகம் நாட்டுக்கு நன்மை செய்ய வில்லையா? இதைவிடச் சிறந்த வேலையே ஒன்றும் கிடையாது. குற்றவாளியைத் தண்டித்து, நீதியை நிலை நாட்டுவதை விடத் தேசத்துக்குச் செய்யக்கூடிய சிறந்த தொண்டு வேறு என்ன இருக்கிறது?" என்று கூறினார்.

நான் பேச்சை மாற்ற விரும்பினேன். பத்மநாபனுடன் தர்க்கம் செய்ய ஆரம்பித்து விட்டால் அது ஓயவே ஓயாது. எனக்கும் உற்சாகமாக இருக்கும் சில வேளைகளில் அவருடன் தர்க்கம் செய்யப் பிடிக்கும். ஆனால் இன்று எனக்கு மனம் ரொம்பச் சோர்ந்திருந்தது.

ஆகவே தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு, "என்ன அழகான தோட்டம்? இதைப் பார்த்து ரஸிப்பதை விட்டு விட்டு வேறு ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறோமே!" என்றேன்.

"உங்கள் ஆசிரியரின் வீட்டுத் தோட்டத்தை விட அழகாக இருக்கிறதா?" என்று கேட்டாள் சுலோசனா.

"அவருடைய வீட்டில் ரொம்ப அழகாக இருப்பது பட்டு ரோஜாக்கள் தான். அவை யெல்லாம் பூத்துக் குலுங்கியிருக்கும்போது தோட்டத்தில் உட்கார்ந்து 'டீ' சாப்பிடுவதே ஒரு அலாதியான அனுபவம்" என்றேன்.

"பட்டு ரோஜா உங்களுக்குப் பிடிக்குமா?" என்று கேட்டாள் சுலோ.

சுலோசனாவின் கேள்வி எனக்கு வியப்பை யளித்தது. யாருக்குத்தான் இயற்கையின் வனப்பை அள்ளிச் சொரியும் அற்புதமான ரோஜா மலர் பிடிக்காது?

"ரொம்பப் பிடிக்கும்" என்றேன்.

சுலோசனா கையில் ஏதோ ஒரு சினிமாப் பத்திரிகை இருந்தது. அவர்கள் வீட்டில் சினிமாப் போவதும் அதிகம். அதைவிடச் சினிமாப் பத்திரிகை படிக்கும் வழக்கம் அதிகம்.

அதைப் புரட்டிக் கொண்டே இருந்த சுலோசனா ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தாள். பிறகு தன் தந்தை பக்கம் திரும்பிப் பார்த்து, "அப்பா! இந்த அமர தாராவைப் பாருங்கள். அப்படியே இந்த மாதிரி இல்லையா?" என்று கேட்டாள்.

அதைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. (தொடரும்)


கலைநகரிலே! சுப்புடு

இன்னிசைக் கச்சேரி

ஸ்ரீமதி சுந்தராம்பாளின் சுந்தர கானம் தில்லிவாசிகளின் காதில் வெகு நாட்கள் வரை ஒலித்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. முக்கியமாக அவர்கள் தமிழ் சாகித்தியங்களைப் பாடும் பொழுது சபையோர் பரவசமடைந்து விடுகின்றனர். "முருகா, முருகா" என்று அவர் நாதத்தோடு இசைக்கும் போது மனமுருகாதவர் இருக்க முடியாது. கர்நாடக சங்கீத சபையில் அவர் செய்த கச்சேரி பாவபூர்வமானதாக இருந்தது. ராக மாலிகைகளை அவர் கையாளும் முறை பிரத்தியேகமானது. சில வித்வான்களைப் போல் வசனத்தை விசனத்துடன் கொட்டி விட்டு ராகத்தில் புகுந்து விளையாடாமல், சாகித்யமும் சங்கீதமும் கலந்தே பாடுவது ரம்மியமாயிருக்கிறது. "ஞானப் பழத்தைப் பிழிந்து" ரஸத்தை அள்ளி அள்ளிப் பருகச் சபையோருக்கு ஈந்தார் அன்னார். பக்க வாத்தியம் வாசித்தவர்களில், வயலின் வாசித்த திரு எம். என். கணேச பிள்ளையவர்களைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன். கர கரப்பே இல்லாத வாசிப்பு; நாத அலைகளை மோதவிடுகிறார்; ராக பாவம் பரிபூர்ணம்; மேற்கொண்டு வார்த்தைகள் இல்லை.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

என்ன விசேஷம்?



"என்னங்க இது. வடக்கே போயிட்டு இப்படி ரத்தவிளாரியா வருகிறீங்க? அங்கே மறுபடியும் ஏதாவது கலாட்டாவா?"

"கலாட்டா ஒண்ணுமில்லீங்க. ஹோலிப் பண்டிகைதான்!"

திரு பட்டாபிராமன்

கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கர்நாடக சங்கீத சபைக்கும், தக்ஷிண பாரத சமாஜத்திற்கும் தலைவராயிருந்து, அரும் சேவை புரிந்த மேல் சபை அங்கத்தினர் திரு டி. எஸ். பட்டாபிராமன் அவர்கள் தமிழ்நாடு திரும்பிச் செல்லுகிறார். திருச்செங்கோடு தாலூகாவைச் சேர்ந்த இவர் வெகு நாளைய காங்கிரஸ் ஊழியர். அகில இந்திய ரேடியோ, திருச்சிராப்பள்ளி ஆலோசனை அங்கத்தினர். பல சங்கீதக் கச்சேரிகளும், நாட்டியக் கச்சேரிகளும், ஏற்பாடு செய்து தில்லி வாசிகளை மகிழ்வித்த இவர், எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல், சென்னையிலிருந்து ஒரு பெரிய நாடக கோஷ்டியைத் தருவித்து ஒரு விழாவுக்கே ஏற்பாடு செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது. இதில் முக்கியமான அம்சம் என்னவெனில், இதுவரை தெற்கு மேற்காய்ப் பார்த்து வந்த இரண்டு நிர்வாகங்களை-கர்நாடக சங்கீத சபை, தக்ஷிண பாரத சமாஜம்-ஒன்று கூட்டி ஒரு குடையின் கீழ் இவ்விழாவை ஏற்பாடு செய்திருப்பது. தில்லி வாசிகளின் வெகு நாளையக் கனவு கூடிய சீக்கிரம் நனவாகும் என்பதில் ஐயமில்லை.

மீட்டர் கோளாறு

சங்கீதத்துக்குச் சென்னையையே நம்பி வாழும் எங்களுக்குச் சென்னை வானொலி நிலையத்தார் வழக்கமாய் ஒலிபரப்பும் 60 மீட்டர் அலையை மாற்றி 49 ஏற்படுத்தியுள்ளார்கள். பலன் பகவானுக்குத்தான் தெரியும். கொஞ்சம் நஞ்சம் இருந்த கர்நாடக சங்கீத ஆசையும் போகும்படி பலப்பல சப்தங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றன. இதை எழுதும் போது நான் வட இந்தியாவில் வாழும் பல ஆயிரம் ரஸிகர்களின் உள்ளக் கிளர்ச்சியைப் பிரதிபலிக்கிறேன் என்றால் அது மிகையாகாது. "சுப்புடு சார்! 49 மீட்டரே! 'சற்றே விலகி யிரும் பிள்ளாய்' என்று எழுதுங்கள்" என்று பல நண்பர்கள் என்னிடம் முறையிட்டுள்ளார்கள். அதை அப்படியே சமர்ப்பிக்கிறேன், அகில இந்திய ரேடியோவின் பாதார விந்தங்களில்.
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

இப்போது இந்தியாவில் உங்களுக்கு கிடைக்கிறது

பாமாலிவ்

டால்கம் டீ-லக்ஸ்



நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த டால்கம் பவுடர்! உண்மையிலேயே நேர்த்தியான டால்கின் சகலகுணங்களுடன், ஒரு புதியரம்மிய வாசனையும்சேர்ந்தது! வெறியூட்டும் 17 ஸெண்டுகளின் அற்புதக்கலவைசேர்ந்த பாமாலிவ் டால்கம் டீ-லக்ஸின் நறுமணம் உங்களை மகிழ்வித்து புளகாங்கிதம் அடையச் செய்யும் ... மணிக் கணக்காக உங்களுக்குக் குளுமை யும் புத்துணர்ச்சியும் அளிக்கும்!



அன்னையின் சுத்தமும் சௌகர்யமும்



குழந்தைக்கு இதம் அளிக்க அதைத் தாராளமாகப் பூசுங்கள்



எரிச்சலைத்தடுக்க மேலெங்கும் அதை உபயோகியுங்கள்



சோர்ந்த பாதங்களுக்கு இதமும் புத்துணர்ச் சியும் அளிக்க



PTD/G/1

பாமாலிவ்

டால்கம் டீ—லக்ஸ்

போட்டிக் கதை

வண்டும் மொட்டும்

~ ஆ. ஜெபரத்தினம் ~

கிழக்கே ஊற்று மலை, மேற்கே கருவர் தாப்பறம்பு, தெற்கே வீராணம் பொத்தை—இந்த மூன்றுக்கும் நடுவே சுமார் இருபது மைல் சவுக்கத்திலே ஒரு தாழ்வான பூமி அது. வளம் செறிந்த இந்தத் தாழ்விலே, மறவர் இனத்து மக்கள் காடு வெட்டி வீடு கட்டிக் கிணறுகளும் வெட்டி, ஊர் அமைத்து வாழ்ந்து வந்தார்கள். வேலை கொஞ்சம், விளைவு அதிகம் ஆகையால், அவர்கள் வேட்டையாடி, விளையாடி, பாட்டுப் பாடி உல்லாசமாக உண்டு களித்திருந்தார்கள்.

வீரமும் விளையாட்டுமாக வாழ்ந்து வந்த இந்த மக்கள்தான், நாயக்கர்கள் காலத்திலே வலியொடுங்கித் தெற்கே ஒதுங்கிய பாண்டியர் மீது படை யெடுத்து, கிழக்கு முகமாகப் பாண்டி நாட்டில் பரவிய வீர கேரள சேரனது படையைத் தடுத்து, சித்திரா நதியும் அநுமன் நதியும் சந்திக்கிற மேலை முக்கூடலண்டையில் வாகை சூடிய மறக்குலத் தமிழர்.

அப்போது அவர்களுக்குத் தலைமை தாங்கிப் போரை நடத்திய வீரன் மருதப்பத் தேவன். சேர வீரகேரளன் புறம்காட்டி ஓடிய பின், மருதப்பனே அந்த வட்டகையில் வரித்தண்டும் மன்னனாக முடிசூடிக் கொண்டான்.

வீர மருதப்பன் தன் வெற்றிக்கறிகுறியாக 'வீரகேரளன்புதூர்' என்னும் புது நகரைக் கட்டினான். அதுவே அவன் தலைநகருமாயிற்று.

வீரசிங்க மருதப்பத் தேவர் தெய்வமான பிறகு, அவருடைய குமாரர் மூத்து மருதப்பத் தேவர் பட்டத்துக்கு வந்தார். பட்டத்துக்கு வரும்போது அவருக்கு வயது பதினேழுக்கு அதிகமிராது. அவர் இளைஞராதலால், அவருடைய தாயார் பார்வதி நாச்சியாரும், தாளுகி மருதய்யாத் தேவரும் ஆட்சிக் காரியங்களைப் பொறுப்பாகக் கவனித்துக் கொண்டார்கள். மூத்துமருதப்பத் துரை, யானை ஏற்றம், குதிரை ஏற்றம், புலி வேட்டை, மான் வேட்டை—முதலியவற்றில் விருப்பம் உடையவராய் விளையாட்டுப் பிள்ளையாகவே இருந்தார்.

பார்வதி நாச்சியார் மருமகள் வந்து விளக்கேற்றி வைத்து, நீப நாச்சியாரைக் கும்பிடும்நாளை ஆவலுடன் எதிர்பார்த்தாள். சொக்கம்பட்டி, சுரண்டை, மணியாச்சி முதலிய ஜமீன்களிலிருந்து கலியாணத் தூதர்கள் வீரகேரளன் புதூருக்கு நடந்து கொண்டிருந்தார்கள். ஜமீனும் பெரியது, மாப்பிள்ளையும் மன்மத ரூபன் என்றால் கேட்க வேண்டுமா!

தாளுகித் தேவர்க்கு, சுரண்டை ஜமீனில் வேறு வாரிசு இல்லாததால், அங்கே சம்பந்தம் செய்து கொண்டால் சொத்து சேருமென்ற எண்ணம். பெரிய துரைச்சி பார்வதி நாச்சியார், சொக்கம்பட்டி ஜமீன்தார் மகள். அவளுக்குத் தன் தம்பி இளவரசுப் பாண்டியன் மகள் மீனாட்சித் தாயின்மேல் ஆசை. ஜமீன்தாருடைய தோழன் சிவலத் தேவனுக்கு, மணியாச்சி சம்பந்தம் ஏற்பட்டால், பல்லிக் கோட்டைப் பறம்பில் புல்வாய் வேட்டை யாடலாமென்று விருப்பம்.

மூத்து மருதப்பத் தேவர் தமது அரண்மனைத் தோப்பில் தனியாகநின்ற ஆண் மானுக்கு ஒரு பெண் மான் ஜோடி சேர்த்து விடுவதில் கருத்தாய் இருந்தார்.

★

அன்று வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்துக்கு முந்தின நாள். திருச்செந்தூர் முருகனுக்கு அபிஷேக அர்ச்சனைக்கு வேண்டிய பண்டங்களை யெல்லாம் தானே நின்று சரிபார்த்து அனுப்பி விட்டு, மூத்து மருதப்பத் துரை தம் பட்டத்துப் பரியிலே ஏறியமர்ந்தார். சிவலத் தேவன் மணியாச்சிப் போர்க் குதிரையிலே ஏறிக் கொண்டான்.

வீரகேரளன்புதூருக்குக் கிழக்கே ஏழு நாழிகை தூரத்திலிருந்த ஊற்றுமலை அடிவாரத்தில் அன்று இரவு விடிந்து மான் வேட்டைக்கு ஏற்பாடாகியிருந்தது. அதன் பொருட்டு அன்று காலையிலேயேவேட்டை நாய்கள் சகிதம் மற்ற வேட்டைக்காரர்களும், சமையல்காரர்களும் முன்கூட்டிச் சென்று



விட்டனர். ஜமீன்தார் குதிரையை மெல்ல நடத்தி, வழி நெடுகிலும் குடிபடைகளுடைய தோட்டத் துரவுகளைப் பார்த்துக் கொண்டும், க்ஷேமலாபங்களை விசாரித்துக் கொண்டும் வேட்டைக் கூடாரத்தை அடைந்தார்.

சுவாதி நிலவு பாலாகப் பொழிந்து கொண்டிருந்தது. இரவு நெடுநேரம் வரை யாரும் தூங்க வில்லை. நாய்கள் வாலைக் குழைத்து உறுமிக் கொண்டும் காலால் மண்ணைப் பிறுண்டிக் கொண்டும், காட்டில் கிடந்து திமிறிய வண்ணம் இருந்தன. வேட்டை வீரர்கள் சிலர் கம்புமுறைகள் போட்டு விளையாடினர்.

மூன்றும் சாமத்தில் சிறிது கண்ணயர்ந்து விட்டு, அதிகாலையில் எழுந்து கால்களில் வார்ச் செருப்பைத் தொடுத்துக் கொண்டு ஆயுதங்கள் சகிதம் வேட்டைக்குப் புறப்பட்டார்கள். கண்ணிகள் அறுந்து விடும்படி பிடித்திருந்தவர்களையும் இழுத்துக் கொண்டு நாய்கள் முந்தின. ஜமீன்தார் போர்த்துக்கேசியருடைய பழைய துப்பாக்கி ஒன்று வைத்திருந்தார். பழையதானாலும் நல்ல கருவி அது. ஆனால் அவர் அதை எடுத்துக் கொள்ளவில்லை. ஏதேனும் வலையில் ஒரு பெண் மான் விழ வேண்டும் என்பதுதான் அவருடைய ஆசை.

காலையில் சூரியோதயமாகி, ஆறு ஏழு நாழிகை வரையும் வேட்டை நடந்தது. வேட்டைக்காரர் மலை உச்சிக்கு ஏறினால், மான்கள் மலைச் சரிவுக்கு இறங்கி விடும். அந்தச் சரிவில் தங்கி நிற்பவர்கள் மறித்தால் அடுத்த சரிவுக்கு ஓடிவிடும். உயிரோடு ஒன்றும் அகப்படாததால் ஜமீன்தாருக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது.

★

ஜமீன்தாரும் சலிப்புற்று, சூரியன் மலைவாயில் விழுந்து கொண்டிருக்கும் நேரம் குதிரையில் ஏறினார். அது, குறிப்பை அறிந்து அரண்மனையை நோக்கிப் பறந்தது. மலையடிவாரத்திலிருந்து ஒரு நாழிகை வழி வந்திருக்கும். ஜமீன்தார் சடக்கென்று அதனை இழுத்துப் பிடித்தார்.

அங்கிருந்து கூப்பிடு தூரத்துக் கப்பால் ஒரு தோட்டத்து வேலி ஓரம் ஒரு பெண்மான். குதிரையின் காலடிச் சத்தத்தைக் கேட்டுக் கலைந்து, தலையை நிமிர்த்திப் பார்த்து விட்டுக் காலடிச் சத்தம் அமர்ந்ததும், மீண்டும் புல்லைக் கடிக்க ஆரம்பித்தது. ஜமீன்தார் அதைக் கண்டு ஆசைப் பட்டார்.

தோட்டத்தின் நாற்புறத்திலும் கனத்த மண் சுவர்மீது கள்ளியும் சுள்ளியுமாகப் புதர் அடர்ந்திருந்த உயர்ந்த வேலி. அதன் மேற்புறத்தில் மட்டும் ஒரு தொண்டு. அது திறந்தபடி கிடந்தது. அந்தத் தொண்டின் வழியே தோட்டத்துக்குள் ஓடும்படி மானைத் துரத்தி விட்டுத் தொண்டை அடைத்துக் கொண்டால்.........அதற்கு மேல் தாமதித்து நின்று ஜமீன்தார் நினைக்கவில்லை. கையிலிருந்த வாரை நெகிழ விட்டார். குதிரை மான் குட்டி நின்ற திசையை நோக்கித் தாவியது. திறந்த காட்டு வெளியில் ஓடுவதற்கு அஞ்சிய மான் கன்று தோட்டத்துத் தொண்டின் வழியாகப் புகுந்தது. பருத்திச்செடிகளுக்குள் பதுங்கி நின்று பின்னால் திரும்பிப் பார்ப்பதற்குள் தொண்டு வாசல்படலென்று சாத்தப்பட்டது.



குதிரையிலிருந்து குதித்த மூத்து மருதப்பர் திகைத்துப் போனார். தம் குறிப்பை அறிந்து தமக்குத் தெரியாமலே அவ்வாறு தமக்கு உதவியது யார்! சாத்தப்பட்ட படலடியில் வந்து நின்று, அதன் ஓட்டைகளின் வழியே உள்ளே உற்றுப் பார்த்தவர் பிரமித்துப் போனார். தம் கண் காண உள்ளே ஓடிவந்த மான் ஓர் மடமங்கையாக மாறி விட்டதா!

"ஹா, யார் நீ! இங்கே வந்த ...மா...ன்! பூமி வெடித்துப் பூத்த பொற் கொடியா!"

அவளும் மருண்டு நின்றாள். சிறிதும் எதிர்பாராத நிலைமை. வாய் திறந்து பேச முடியவில்லை.

"இந்தச் சுந்தர இளைஞர் யார்! என்னைப் பார்த்து, ஏன் அவ்வாறு திகைத்து நிற்கிறார்!" என்று அம் மங்கை திகைத்தாள்.

தம்மைப் போலவே அவளும் தடுமாற்றமுறுவதைக் கண்டு கொள்ள முத்து மருதப்பருக்கு நெடு நேரம் ஆகவில்லை. மேலும், அவள் செந்தளிர் விரல்களில் சுருண்டு கிடந்த கயிற்றின் மற்றொரு நுனியில் கறவைப் பசு ஒன்று தன் கன்றுடன் மேய்ந்து கொண்டிருந்தது. ஆகையால் அவள் மங்கையாக மாறிய மாய மான் அல்லவென்று நிச்சயமாயிற்று.

★

குருந்தமொழிக் கிராமத்திலே சிதம்பரத் தேவர் காட்டாண்மைக்காரர். ஏக தேசம் பூஸ்திதி உடையவர். நாலு ஏர் சமுசாரி. அவருக்குத் தொழு நிறைய மாட்டுச் சொத்தும் உண்டு. எருமைக் கன்றுகளும் பசுங் கன்றுகளுமாக எட்டுப் பத்து ஏககாலத்தில் பாலைக் குடித்து விட்டுத் தொழுவுக்குள் குதிபோட்டுக் கொண்டு திரியும். எது எது கறக்கிறது என்று கூட வீட்டுக்காரர் கவனிக்கிறதில்லை.

சித்தாமணிக்குப் பசுவும் கன்றும் மிகவும் பிடிக்கும். துள்ளி விளையாடும் இளங் கன்றுகளிடம் அலாதி ஆசை யுடையவள். இளமை துள்ளி மிளிரும் வாட்டசாட்டமான அவற்றின் அங்கங்கள் அவள் மனத்தைப் பெரிதும் கவரும். அவை துள்ளி விளையாடும்போது, அவளும் இவற்றோடு ஓடித் துள்ளுவாள். அவற்றைப் பிடித்துக் கழுத்தைத் தழுவிக் கொண்டு முகத்தோடு முகம் வைத்து முத்தமிடுவாள்.

வயது வந்த பெண் பகல் முழுவதும் வீட்டோடு அடைந்துக் கொண்டிருப்பவள், சாயங் கால வேளைகளிலே, சற்றுக் காலாரக் காற்றில் உலாவும் பொருட்டுப் பருத்தித் தோட்டத்துப் பக்கமாக வருவாள். வரும் போது 'பேச்சுத் துணைக்கு'த் தன்னோடு ஒரு பசுவையும் கொண்டு வருவாள்.

இன்றும் அப்படித்தான் அங்கு வந்திருந்தாள். தோட்டத்தில் நின்று பார்க்கும் போது காட்டு வழியே குதிரை ஒன்று வருவதைப் பார்த்தாள். அது இடையில் சட்டென்று நின்று, மீண்டும் ஓட ஆரம்பித்துத் தோட்டத்துத் தொண்டை நோக்கி வருவதையும் கண்டாள். உடனே பாதுகாப்புக்காகப் படலைச் சாத்தினாள். அதற்குள் மான் குட்டி உள்ளே பாய்ந்து விட்டது.

அங்கு வந்து அந்த மானைப் பற்றி விசாரிப்பவர் யாரோ ஒரு பெரிய மனிதர்! ஆனால் அவள் நெஞ்சு இப்போது அதற்காக அப்படித் திக்கென்று அடித்துக் கொள்ள வில்லை. அந்த ஆண் சிங்கம் மானை மறந்து விட்டு, தன்னை அள்ளி எடுத்து விழுங்கி விடுவது போலப் பார்க்கிறார். நாணத்தால் முகம் சிவந்து அவள் தரையை நோக்கித் தலை கவிழ்ந்து கொண்டாள். அவள் பூ நெற்றியில் புல்லிய வியர்வைத் துளிகள் தோன்றின. அவ்விடத்திலிருந்து அகன்று ஓடிவிட வேண்டுமென்று நினைத்தாள். ஆனால் என்ன மாயமோ அதை விட்டு நகர்வதற்கும் சக்தியற்றுப் போனாள்.

காந்தத்தை அணுக வரும் இரும்பு போல், முத்து மருதப்பதுரை சித்தாமணியிடம் வரும்படி தமது இடது கையால் படலை விலக்கினார். இரண்டு கைகளாலுமே அதைத் தள்ளிப் பார்த்தார். அப்போதும் அது திறக்கவில்லை. ஓரத்தில் நட்டிருந்த கம்புக் கவணியில் படலின் கயிற்றுக் கொக்கி மாட்டப்பட்டிருந்தது. உள்ளே இருப்பவர் கொக்கியை எடுத்து விட்டால்தான் திறக்க முடியும். இந்தச் சில வினாடி நேரத்தில், தன் உடல், ஆவி எல்லாவற்றையும் அந்த மன்மதன் காலடியில் படைத்துவிடச் சித்தமாக மனம் மாறிப்போன மடமான், ஏனோ அந்தப் படலின் கண்ணியைக் கையால் நெகிழ்த்து விட விரும்பவில்லை.

★

ஜமீன்தார் அதைப் புரிந்து கொண்டு படலைப் பிடித்திருந்த கைகளை எடுத்துக் கொண்டு, படலுக்கு வெளியே நின்று கொண்டார். அந்தச் சுந்தர புருஷர் ஒரு வேளை கோபித்துக் கொண்டு, தன்னோடு ஒன்றுமே பேசாமல் போய்விடுவாரோ என்று சித்தாமணி உள்ளூரப் பயந்தாள். நல்ல வேளை! அவள் பயந்தபடி நடக்கவில்லை. ஜமீன்தார் பேச்சைத் தொடங்கினார்:

"இந்த ஊர்தானா உனக்கு, அல்லது இங்கே விருந்துக்கு வந்திருக்கிறாயா!"

"..............."

"மலையிலே இருக்கிற மான் மரை எல்லாம் யாருக்குச் சொந்தம், தெரியுமா!"

"ஜமீன்தாருக்கு."

"அப்படியானால் என் மானை உங்கள் தோட்டத்துக்குள்ளே விட்டுப் பூட்டிக் கொண்டாயே!"

"அப்போ எங்க தோட்டத்திலே இருக்கிற மானை நீங்க பிடிக்க விடுவோமா!"

"ஜமீன்தாரே வந்தாலு!"

"வந்தா வேலிக்கு வெளியே நிற்பாரு. எங்க தோட்டத்திலே நாங்கதான் ஜமீன்தாரு."

"அம்மா பெரிய மனுஷி! முதல்லே தயவு பண்ணி உன் பேரைக் கொஞ்சம் சொல்ல மாட்டியா! நம்ம ஜமீன் வட்டகையிலே ஒரு வீரப் பெண் இருக்கிறதைப் பத்தி ஜமீன்தாருக்குச் சொல்லி வைக்கணும்."

"என்பேர் சித்தாமணி. ஐயாபேர் சிதம்பரத் தேவர். எங்க ஊர் இந்தக் குருந்தமொழிதான். போய்ச் சொல்லுங்க."

அவள் முகம் குங்குமமாய்ச் சிவந்தது. ஒரு கணத்துக்கு முன் வீரமாய்ப் பேசின தைரியம் இப்போது எங்கேயோ ஒளிந்துக் கொண்டது.

அவளைப் போலவே ஜமீன்தாரும் பாகாய் இளகினார். "சித்தாமணி.......ஆகா எவ்வளவு பொருத்தமான பேர் உனக்கு! நான்தான் ஜமீன்தார் முத்துமருது. நீ யார் தெரியுமா உனக்கு!......என் துரைச்சி, ரங்கவிலாசத்து மகாராணி."

சித்தாமணிக்கு மார்பு விம்மி, மூச்சு வெப்புக் காற்றாய் வெளி வந்தது. அவள் மலர்விழிகளை முத்துத் துளிகள் இரண்டு திரையிட்டன. அவள் தன் தாமரை முகத்தை நிமிர்த்தி மருதுவை இணக்கமாகப் பார்த்தாள். "சுதா..." ...அவள் உள்ளத்தின் ஆழத்தில் இக் குரல் கேட்டது.

"சித்தாமணி......சித்தாமணி" என்று தூரத்திலே அவள் தாயார் கூப்பிடும் குரல் கேட்டது. சித்தாமணி களவும் கையுமாகப் பிடிபட்டவளைப் போலத் திடுக்கிட்டாள். ஜமீன்


ஓ! எவ்வளவு விசனமடைந்த தாயாராயிருந்தாள் அவள்! அவளுடைய குழந்தை ஏன் வெளுத்துப் போய் பார்க்க நோயுற்றும் சதா அழுகையுமாயிருக்கிறதென்பதை அவள் தெரிந்து கொள்ளவில்லை.
அவள் சகோதரிக்கு அதன் காரணம் புரிந்தது அவள் சொன்னாள் "நீ தவறான முறையில்" ஆகாரம் கொடுத்தாய். விரைவில் அவனுக்கு 'க்ளாக்ஸோ' கொடுக்க ஆரம்பிக்கவும். எவ்வளவு விரைவில் அவன் குணமடைகிறானென்பதைக் கண்டு நீயே ஆச்சரியப்படுவாய்!
"லக்ஷக்கணக்கான தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளின் திடமான வளர்ச்சிக்கு நம்பியிருப்பது புஷ்டியுள்ள பால் - உணவு, 'க்ளாக்ஸோ'. உறுதியான எலும்பும் பற்களும் வளருவதற்காக 'க்ளாக்ஸோ'வில் விடமின் 'டி'யும் ரத்தத்தை வளம் செய்ய இரும்பு சத்தும் சேர்க்கப்பட்டுள்ளன."
SUNSHINE
Glaxo
உண்மையில் ஒரு சில வாரங்களிலேயே அவன் ஒரு முற்றிலும் மாறிய குழந்தையாய் தோன்றினான். இதற்கு முன் என்றுமேயில்லாத ஆனந்தம்! அயர்ந்து தூங்கினான்! பின் வெகு விரைவில் குழந்தை வளர ஆரம்பித்து எடையும் அதிகரித்தது 'க்ளாக்ஸோ'வுக்கு நன்றி
Glaxo
'க்ளாக்ஸோ' குழந்தைகளின் மிகச் சத்தமான பால் உணவு
D-35

தாரும் அதற்குமேல் அங்கு நிற்பதற்கு விரும்பவில்லை.

மீண்டும் "சிந்தாமணி! சிந்தாமணி!" என்ற குரல் கேட்டது.

சிந்தாமணி அவரிடமிருந்து கைக் கம்பை வாங்கத் தயங்கினாள். 'இவர்தான் ஜமீன்தாராய் இருப்பாரோ! யாராய் இருந்தாலும் அவர்தான்...அவரேதான்.' அவளுடைய வலது கரம் தானாகவே முன்னோக்கி நீண்டு கைக் கம்பை வாங்கிக் கொண்டது. அந்தக் கம்பை மார்போடும் முகத்தோடும் அணைத்துக் கொள்ள வேண்டும் என்று இருந்தது அவளுக்கு.

குதிரைமேல் ஏறி அமர்ந்த முத்து மருதப்பர் தம் இதய நாயகியைத் திரும்பிப் பார்த்துப் புன்னகை செய்தார். குதிரை நடை கட்டியது.

"என்னம்மா, இது கைக் கம்பு, யார் அது குதிரைமேலே!" தாயார் தன் பக்கத்தில் வந்து குரல் கொடுத்தபோதுதான் சிந்தாமணி தன் வசமானாள்.

"யாரோ தெரியவில்லை அம்மா. இங்கே ஒரு மான் பின்னாலே துரத்திகிட்டு வந்தாரு. மான், தொண்டு வழியே நம்ம தோட்டத்துக் குள்ளே வந்துட்டுது. திரும்பிப் போகிற அவசரத்திலே கைக் கம்பைப் போட்டுப்போனாரு."

வடிவு ஆத்தாள் தன் மகள் சொல்லியதற்கு அதிகமாக ஒன்றும் நினைக்கவில்லை.

★

ஜமீன்தார் அந்தப் பக்கமாகக் குதிரையில் வந்த செய்தி சிதம்பரத்தேவர்க்குத் தெரியும். கைக் கம்பும் அரண்மனைக் கம்பு என்பதில் சந்தேகம் இல்லை. அந்த விஷயம் அவருக்குப் பெரிய மர்மமாக இருந்தது. 'அப்படி இருக்க முடியுமா! சிந்தாமணி ராஜவசீகரம் உள்ளவள் தான். ஆனாலும்...' அவர் மனம் ஒன்றும் துணியக் கூடவில்லை.

எனவே, அதை மறைவாகப் பத்திரமாய் வைக்கும்படி வடிவு ஆத்தாளிடம் சொன்னார். அதைப் பற்றி வேறு யாருக்கும் சொல்ல வேண்டாமென்றும் கட்டளை யிட்டார். மறவர் குலத்திலே மாப்பிள்ளைக்குப் பதில் அவருடைய கைக் கம்பை வைத்துத்தான் கலியாணம் செய்து விடுவார்கள். குழந்தையிடம் விஷயத்தை வற்புறுத்திக் கேட்கவும் விரும்பவில்லை அவர்.

இரவில் நிலா வெளிச்சத்திலேயே ஊர் சத்தம் காட்டி, பருத்தி விளையில் புகுந்த மானைப் பிடித்து அரண்மனைக்கு அனுப்பி வைத்தார்கள். இந்த மான் போவதற்கு முன்பே, சிவலத் தேவன் மலையில் ஒரு பெண்மானைப் பிடித்துக் கொண்டு வந்திருந்தான். ஒரு மான் வேண்டுமென்று ஆசைப்பட்ட ஜமீன்தாருக்கு இரண்டு மான்கள் கிடைத்து விட்டன.

ஆனால் இப்போது இரண்டு நாட்களாக நடந்த சம்பவங்கள் அவரை முற்றிலும் மாற்றி விட்டன. அவர் இனிமேல் விளையாட்டுப் பிள்ளை யல்ல.

நேற்று முன் தினம் அவர் ஊற்று மலைக்கு வேட்டைக்குப் போனபின், சொக்கம்பட்டி அரண்மனையிலிருந்து ஆட்கள் வந்திருந்தார்கள். பார்வதி நாச்சியாரும் தாணுத்தேவரும் ஒத்துக் கொண்டு, அவருடைய கைக் கம்பு ஒன்றைச் சொக்கம்பட்டிக்கு அனுப்பிவிட்டார்கள். முன் ஏற்பாடாக இருந்த சொக்கம்பட்டியார், நேற்றுக் காலை சூர்யோதயத்துக்கே மீனாட்சித் தாயை அவருக்குத் திருமணம் செய்து விட்டார்கள். இந்த விஷயம் வேட்டையிலிருந்து திரும்பி வந்த பிறகுதான் அவருக்குத் தெரியும். அதைக் கேள்விப் பட்டபோது, தலையிலே கருங்கல் விழுந்து விட்டது போல் நைந்தார். சிந்தாமணிக்குத் துரோகம் சேர்ந்து விட்டது!

ஒரு பாவமும் அறியாத மீனாட்சியின் வாழ்வைப் பாழாக்குவதா! சிந்தாமணியை மறந்து உயிர் வாழ முடியுமா! ஒரு ஆண் மானுக்கு இரண்டு பெண் மானா!


குருந்தமொழி விஷயமும் தெரிந்துகொண்ட பார்வதி நாச்சியார், 'இரண்டு பேரும் வள்ளியும் தேவயானையுமாக இருந்து விட்டுப் போகட்டும்' என்றாள். அரண்மனை அந்தப்புரத்தில் இரண்டு பேர் என்ன, இருபது பேர் இருநூறு பேரும் இருக்கலாமே!

★

ஜமீன்தார் சிந்தாமணியைச் சந்தித்த மறு நாளே அரண்மனைச் சிப்பந்திகள் பெட்டிகளையும் கூடைகளையும் சுமந்து கொண்டு, குருந்தமொழிக்கு வந்தார்கள்.

இவர்களெல்லாம் வந்து சேர்வதற்கு முன்னரே, சொக்கம்பட்டித் தகவல் ஊரெல்லாம் பரவிக் கிடந்தது. முன்வாசல் வழியாக அரண்மனைச் சம்பந்தம் காலெடுத்து வைக்கும் முன்பே, பின் வாசல் வழியாக அந்தப் புயல் அந்தச் சிறிய வீட்டிலிருந்த கிராம மக்களின் சாந்தம் நிலவிய உள்ளங்களைத் தாக்கத் தொடங்கிற்று. சொக்கம்பட்டி—ஒரு ஜமீன். அவர் பகையைக் குடித்தனக்காரனாகிய சிதம்பரத் தேவர் சமாளிக்க முடியுமா! பட்டத்து அரசியாக வரும் ஜமீன்தார் வம்சத்துப் பெண் முன்னே இந்த நாட்டாண்மைக்காரரின் மகள் எம்மாத்திரம்! சந்தோஷப் படவோ துக்கப்படவோ முடியாமல் திணறினார்கள்.

சிந்தாமணி ஜமீன்தார் செய்த மோசத்தை நினைத்துப் புழுவாகத் துடித்தாள். ஜமீன்தார் அனுப்பியிருந்த பொருள்களும், ஜமீன்தாருமே அவளுக்குத் துச்சமாகப் பட்டனர். துரோகம் மோசடி யல்லவா நடந்து விட்டது!



பால் பசுக்களுக்கும் பசுங் கன்றுகளுக்கு மிடையே பயின்று, கள்ள மறியாது வளர்ந்த சிறுமியின் தூய்மையான உள்ளம் அரண்மனைத் துரோகங்களுக்கும் ஆடம்பரங்களுக்கும் ஈடு கொடுக்க முடியாமல் அதிர்ச்சியுண்டது.

குருந்தமொழி மக்கள் தங்கள் ஊருக்கே ஜமீன் திரும்பி விட்டது போல அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள்.

ஜுரம்குறைந்து சிந்தாமணி தெளிந்தபோது, தாதிப் பெண் செல்லஆத்தாள் அவளுக்கு மெல்ல மெல்ல விஷயத்தை விளக்கி ஆறுதல் படுத்த முயன்றாள். "துரைச்சி, சொக்கம்பட்டி விஷயம், துரை ஊற்றுமலைக்கு வேட்டைக்குப் போயிருக்கிறபோது, அவர்களுக்குத் தெரியாமலே பெரிய துரைச்சி நடத்தி விட்டார்கள். மீனாட்சித் தாய் பட்டத்து ராணியானாலும் துரைக்கு இஷ்டத்து ராணி நீங்கதான். உங்க மேலேதான் துரைக்கு உயிர். மீனாட்சித் தாயைப் பத்தி எல்லாரும் நல்லவங்கன்னு சொல்றாங்க. ரொம்பத் தங்கமாம். புல் லோகச் சம்மதிக்க மாட்டாங்களாம்..." என்று பலபடியாகத் தினமும் பக்கத்திலிருந்து சொல்லி வந்தாள். நாளுக்கு நாள் புதிது புதிதான பண்டங்கள் அரண்மனையிலிருந்து வந்து குவிந்தன. அவை என்ன, வெறும் பண்டங்களா — துரையவர்களுடைய அன்புச் சின்னங்கள் அல்லவா! அவருக்குப் பாதப் பணிவிடை செய்யும் பாக்கியம் கிடைத்தாலே போதும். அந்தச் சக்கரவர்த்தியை மனத்தில் வைத்துப் பூஜித்துக் கொண்டே சந்தோஷமாக உயிர் வாழலாம், சாகவும் செய்யலாம். சிந்தாமணி இவ்வாறு எண்ணிக் கொஞ்சம் மன ஆறுதல் பெற்றாள்.

★

குருந்தமொழிச் செய்தி கேட்டு மீனாட்சித் தாய் திடுக்கிட்டாள். உள்ளம் ஒருவர்க்கு, உடல் ஒருவருக்கா! அவளால் அதைத் தாங்கவே முடியவில்லை.

இங்கே, வீரகேரளன்புதூர் அரண்மனைத் தோப்பிலே ஆண் மானுக்கு ஜோடியாகச் சிவலத் தேவன் கொண்டுவந்து விட்ட பெண் மான் அன்று இரவு இறந்து கிடந்தது. அதை விஷம் தீண்டி யிருக்கலா மென்று சிலர் சந்தேகித்தார்கள்.

மூத்து மருதப்பத்தேவர் மான் இறந்த செய்தி கேட்டு மனம் இடிந்தார். அவர் பயந்த படியே ஆயிற்று. சொக்கம்பட்டியி லிருந்து துக்கச் செய்தி வந்தது. மீனாட்சித்தாய் தெய்வமாகி விட்டாள். தம்பி மகள் மேலிருந்த பாசத்தில் பெரிய துரைச்சி "குடியானவன் மகள் வயத்திலே பிள்ளை பிறந்து என் சீமையை ஆளவா?" என்று பிரலாபித்தாள்.

மீனாட்சியின் மறைவால் சிந்தாமணியின் வாழ்க்கைப் பாதையில் கிடந்த கல் விலகி விட்டது என்று மற்றவர்கள் நினைத்தார்கள். சிந்தாமணியின் உள்ளம் அதற்கு வேறு விதமாக அர்த்தம் கண்டது. 'அவள் விஷம் குடித்துச் செத்ததற்கு யார் காரணம்! அந்தப் பழி யார்மீது சுமரும்! தான் அந்தப் பழிக்கு ஒருகாலும் ஆளாகக் கூடாது' என்று எண்ணி ஒரு தீர்மானத்துக்கு வந்தாள் அவள். அவள் மனம் வைராக்கியம் கொண்டது.

★


தங்கள் சாதி வழக்கத்துக்கு விரோதமாய், மாப்பிள்ளை வீட்டில் வைத்தே சிந்தாமணிக்குத் திருமாங்கிலியம் பூட்டுவதாக ஜமீன்தார் தீர்மானம் செய்தார். அவர் களிப்பில் மூழ்கித் திக்கு முக்காடும்படி பெரிய ஆடம்பரத்துடன் கலியாணத்தை நடத்த வேண்டுமென்று ஆசைப் பட்டார். பந்தல் அலங்காரத்துக்கு மட்டும் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் அவர் செலவு செய்தார்.

அரண்மனை முத்துப் பல்லக்கு குருந்த மொழிக்குப் போய்ப் பெண்ணை அழைத்து வரச் சென்றது. சிந்தாமணி மங்கள ஸ்நானம் செய்து, ஆடை அணிகள் பூண்டு பல்லக்கில் ஏறி அமர்ந்தாள்.

மகளை வழியனுப்பிக் கொடுக்கும்போது சிதம்பரத்தேவரின் குரல் தழுதழுத்தது. சிந்தாமணியின் கைகளைப் பிடித்துக் கொண்டு பக்கத்தில் நின்ற வடிவு ஆத்தாள் கன்னத்தில் மாலை மாலையாய்க் கண்ணீர் வடிந்தோடியது. "துரைவாள் இஷ்டம்போல நடந்துக்கோ அம்மா. என்ன காரியமானாலும் அரண்மனைப் படிக் கல்லைத் தாண்டி வெளியே வராதே......" அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. மகளுடைய பிடியிலிருந்து தன் கரங்களை விடுவித்துக் கொண்டாள்.

பலவகை உணர்ச்சி ஓட்டங்களில் சிக்கித் தவித்த சிந்தாமணியின் பளிங்குக் கன்னத்தில் கண்ணீர் முத்துக்கள் உருண்டு ஓடின. ஆத்தாளையும், ஐயாவையும் பல்லக்கைச் சூழ்ந்து நின்ற உற்றார் உறவினர் ஊரார் அனைவரையும் கை எடுத்துக் கும்பிட்டாள். உணர்ச்சியலைகள் மோதியடித்த உள்ளத்தைச் சுமந்துகொண்டு, அலங்காரப் பல்லக்கு அசைந்து அசைந்து அரண்மனையை நோக்கி விரைந்தது.

சிங்கம்பட்டி, செவிலி, ஊர்க்காடு, சேத்தூர் ஜமீன்தார்க ளெல்லோரும் திருமணத்துக்கு வந்திருந்தனர். திருமணம் சிறப்பாக நடந்தது. சமஸ்தான வித்வான்களுடைய கச்சேரிகள் அமர்க்களமாக நடந்தேறின. ஆயிரம் நிலவட்டிகள் ஜொலிக்க யானை மேல் வைத்த அம்பாரியிலமர்ந்து மூத்து மருதப்பத்தேவரும், சிந்தாமணியும் ஊர்வலம் வந்தார்கள். வாண வேடிக்கைகள் வானைப் பிளந்தன. குடி ஜனங்கள் தினம் இரு வேளையாக ஏழு நாட்கள் அரண்மனை போஜனம் சாப்பிட்டார்கள்.





துறையூர் ஜமீன்தார் உயர்நிலைப் பள்ளி நிர்வாகிகள் கெட்டிக்காரர்கள். சேர சோழ பாண்டிய மன்னர்களின் சரித்திர ஆதாரங்களுள்ள இடங்களை நேரிலேயே சென்று ஆராய்ந்து வருவதற்காகச் சென்றிருந்த 'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்களை அழைத்துத் தங்கள் இலக்கிய விழாவில் கலந்து கொள்ளும்படி செய்து விட்டனர். அந்தப் பள்ளிக்கூடத்தின் பதினைந்தாவது இலக்கிய விழாவுக்குப் புதுக்கோட்டை சப் ஜட்ஜ் திரு எஸ். மகராஜன் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். 'கம்பனின் கவிநயம்' பற்றித் தொண்டி சப்ரிஜிஸ்தரார் திரு ஆர். கோபிநாத் அழகாகச் சொற்பொழிவாற்றினார். இந்தப் படத்தில் தலைவர் திரு எஸ். மகராஜன் சொற்பொழிவாற்றுவதையும், 'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

பள்ளியறை அலங்காரம் ஜமீன்தாருடைய தனிப்பட்ட மேற்பார்வையில் செய்திருந்தது.

அன்று, பருத்தி விளையிலே கூவாத புறுவாய் ஆடாத மயிலாய் அடக்கமுடன் நின்றுகொண்டிருந்த சித்தாமணி— இப்போது தன்னிடம் வரும்போதே வசந்தம் கண்ட குயிற் பேடை போல் கூவுவாள், தென்றல் தீண்டிய தேமா போலத் தளிர்ப்பாள், மரத்தை அடுத்த கொடி போலத் தன் மார்பிலே முகம் குனித்துப் பின்னிக் கொள்வாள் என்று அவர் எதிர்பார்த்தார்.

★

அவளோ அவரைக் கண்டு, காகத்தை இனமறிந்து கொண்ட குயிற்குஞ்சு போல, பின் வாங்கினாள்.

மருதுதுரை மஞ்சத்திலிருந்து எழுந்து வந்து அவள் மலர்க் கரங்களைப் பிடித்தார். அவை வெம்மையற்றுச் சில்லென்றிருந்தன. சித்தாமணி தன் கரங்களை இழுத்துக்கொண்டு "என்னைத் தீண்டாதீர்கள். கிருஷ்ணன் மேல் ஆணை. மீனாட்சித்தாயின் உரிமை எனக்கு வேண்டாம்" என்று கூறினாள்.

"..............."

"அவர் உயிரோடு இருந்திருந்தால் அவர் மனதாரப் பிச்சை அளிக்கும் எச்சிலையாவது சாப்பிடச் சம்மதித்திருப்பேன். அந்த உரிமையை இனி யார் எனக்குத் தரக்கூடும்! தங்களிடம் நான் வேண்டிக் கொள்ளும் வரம் இது தான். என் உயிருள்ள வரையும் நான் தங்களுக்கு வேலைக்காரியாக இருந்து பாதசேவைகள் செய்து வரவேண்டும்."

இவ்வாறு சொல்லி முடிக்கும் முன்னமே அவர் காலடிகளில் அடியற்ற மரம்போல் விழுந்து விட்டாள். மயங்கிக்கிடந்த அவளை எடுத்து மடியிலே கிடத்தி அவளுக்கு விசிறினார் மூத்து மருதப்பர்.

★

ஜமீன்தார் தம் ஆயுள் காலம் வரை படலுக்கு வெளியே நின்றார். பார்வதி நாச்சியார் தம் உயிருள்ளவரை மகனுக்கும் மருமகளுக்கும் சகல மருந்துகளும் மந்திரங்களும் செய்து பார்த்துச் சலித்து, சித்தாமணிக்கு மலட்டு நாச்சியார் என்ற பட்டத்தைச் சூட்டித் தன் மனத்துக்கு ஆறுதல் தேடிக் கொண்டாள்.

ஆண்சிங்கம் மூத்து மருது, அன்று வைகாசி மாதம்சுவாதிநாளின்மாலை வேளையிலே, பருத்தி விளை வெளி ஓரத்திலே, தமது உள்ளத்தில் கொழுந்து விடத் தொடங்கிய அக்கினியை அவிப்பதற்கு வேறு உபாயம் தேடிக் கொள்ளாமல், அதற்கே இரையானார். அகாலமாய் அவர் மரணமடைந்த பின், அவருடைய தலையணைக்குக் கீழிருந்த ஓலை நறுக்கிலே, அவர்கைப்பட எழுதிய விடுகதை ஒன்று, இக்றும் வீர கேரளன் புதூர் ஜமீன் வட்டகையிலே வழங்கி வருகிறது.

" காம்பு ஒன்றில் இரண்டு மொட்டு,
விரியுமுன் கரிந்தது ஒன்று,
விரிந்தபின் உதிர்ந்தது மற்றொன்று,
வண்டுக்குத் தேன் ஏது !"

சித்தாமணி அரண்மனையிலே இருப்பதற்கேற்ற அழகுடையவள், அறிவும் ஆசாரமும் உடையவள். விதியும் உடையவள்தான். ஆனால், அந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணுக்கு அரசபோகமே யானாலும், அது மற்றவர்களுடைய உரிமையாக இருந்ததால், அதைத் தான் அனுபவிக்கும் கோழைத்தனம் இல்லாமற் போயிற்று ; அதைக் காலால் உதைத்து எறியும் வீரமே இருந்தது.

அரண்மனையின் ஆடம்பரங்களும், மன்மத ரூபனான மன்னனிடம் கொண்ட ஆன்ம பூர்வமான காதலும் கூட அவளுடைய உறுதியைக் குலைக்க முடியவில்லை.

ரின்ஸோ வெள்ளைத் துணிகளை
— வெள்ள வெளேரென்று வெளுக்கிறது
— அழுத்தித் தேய்க்கவே வேண்டியதில்லை!

ரின்ஸோவினால் வெளுத்த எந்த வெண்மை ஆடையையும், பழைய வழியில் அலைத்த ஒன்றோடு ஒப்பிட்டுப் பாருங்கள். ரின்ஸோ மிகையான வெண்மையாக வெளுப்பது பளிச்சென்று புலப்படும்! அற்புத சோப் பவுடராகிய ரின்ஸோ சலவையில் புரட்சி செய்துள்ளது! ரின்ஸோவின் வியக்கத் தக்க விறு விறுப்பு வாய்ந்த நுரை, 'உங்கள் கண்களுக்குத் தென்படாத் அழுக்கையும் விரட்டிவிடும். அழுத்தித் தேய்க்க வேண்டாம்! அடிக்க வேண்டாம்! பிரகாசமான அதிகப்படி வெண்மைக்கு நீங்கள் வேறொன்றும் சேர்க்க வேண்டியதில்லை. வெள்ளைத் துணிகளாகட்டும், நிறமுள்ள துணிகளாகட்டும்—குடும்பத்தின் சலவை எல்லாவற்றிற்கும் ரின்ஸோ உபயோகியுங்கள்!





ரின்ஸோ அதிக வெண்மையாக வெளுக்கிறது!

R. 5-50 TM

இந்தியாவில் தயாரித்தது



தேவியின் அருள்

பார்வதி

"அம்மா, கண்ணில்லாத கபோதி அம்மா! பிச்சை போடுங்கள். கோடிப் புண்ணியம் உண்டு."

வாசல் தாழ்வாரத்தில் அப்பொழுது தான் காலைப் பத்திரிகையை வாசிக்க வந்து உட்கார்ந்தார் சுந்தரம்.

"யாரது, வாசலிலே? டேய் முருகா! விரட்டு அவனை. எப்பொழுது பார்த்தாலும் நச்சு நச்சென்று வந்து தொந்தரவு செய்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் இடமே கொடுக்கக் கூடாது!"—காலையில் எழுந்ததும் முதல் காரியமாகப் பிச்சை கேட்க வந்தவன் மேல் அவருக்குக் கோபம் கோபமாய் வந்தது. முருகன் பிச்சைக்காரனை விரட்டியடித்தான். அவனும் முணுமுணு வென்று முனகிக் கொண்டே போய் விட்டான்.

"எதற்காக இப்படிக் கோபிக்கிறீர்கள்? பாவம், கண்ணில்லாதவன். ஒரு காலணா கொடுத்தால் என்ன?" என்று கேட்டுக் கொண்டே அவர் மனைவி அங்கே வந்தாள். உள்ளே இருந்தவளுக்கு இரைச்சல் காதில் விழுந்து, குழந்தையை அழைத்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள்.

"பிச்சைக்காரர்களுக்குக் கொடுத்தால் இந்தத் தொல்லை அதிகமாகி விடும். இவர்களுக்கெல்லாம் விடுதி கட்டி யிருக்கிறார்கள். அங்கே போய் இருக்க இஷ்டமில்லாமல் இப்படித் திரிகிறார்கள். நாம் இதைக் குறைக்க வேண்டும்" என்றார் சுந்தரம், பத்திரிகையைப் புரட்டிக் கொண்டே.

"அம்மா, அவனுக்குக் கண்ணில்லையே, எங்கே தான் போவான்? எப்படிப் போவான்? யார் சாதம் போடுவா?" என்று தாயாரைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டே போனாள் ஆறு வயதுச் சிறுமி ராதா.

"உன் கேள்விகளுக்கு எல்லாம் என்னால் இப்பொழுது பதில் சொல்ல முடியாது. காரியம் இருக்கிறது. வா, உள்ளே போகலாம்" என்று குழந்தையை அழைத்துக் கொண்டு உள்ளே போனாள் ஜானகி. அவளுக்கு அந்தக் குருடனைத் துரத்தி விட்டது சங்கடமாக இருந்தது. தவிரவும் அன்று சனிக்கிழமை. அவள் சனிக்கிழமை தோறும் பிச்சைக்காரர்களுக்குப் பிச்சை போடுவது வழக்கம்.

அன்று பகல் சுமார் பன்னிரண்டு மணி இருக்கும். ஒரு பையன் ஒரு கடிதம் எடுத்துக் கொண்டு வந்தான். "மாமாவைப் பார்க்கலாமா?" என்று கேட்டுக் கொண்டே வந்தான்.

"நீ யாரப்பா, என்ன வேண்டும்?" என்று கேட்டாள் ஜானகி.

"நான் கோயம்புத்தூரிலிருந்து வந்திருக்கிறேன். என் பெற்றோர்கள் இறந்து



விட்டார்கள். இங்கு ஒரு தெரிந்தவர் வீட்டுக்கு வந்தேன். எனக்குக் கொஞ்சம் பணம் வேண்டும். அந்த மாமா இந்த வீட்டு விலாசத்தைக் கொடுத்து இங்கே வாங்கிக் கொள்ளச் சொன்னார். ரொம்பக் கஷ்டப்படுகிறேன். பள்ளிக்கூடச் சம்பளம் கட்ட முடியவில்லை. நீங்கள்தான் தயவு பண்ண வேண்டும்'' என்றான். சுந்தரத்தின் பெயருக்கு அவன் ஒரு கடிதமும் கொண்டு வந்திருந்தான்.

ஜானகி அந்தக் கடிதத்தைக் கொண்டு போய் அவள் கணவரிடம் கொடுத்தாள். வாசித்துப் பார்த்தார் அவர். சொல்லவும் முடியவில்லை. மெல்லவும் முடியவில்லை. அவருக்கு என்னவோ அன்றையதினம் தர்மம் செய்ய வேண்டும் என்ற எண்ணமே இல்லை. பணமுடை அதிகமாக இருந்தது. ஆனால் நண்பரின் கடிதம் தட்டிக் கழிக்கக் கூடியதாயில்லை.

'அன்புடைய சுந்தரம்,

இக் கடிதம் கொண்டு வரும் பையனுக்கு உன்னால் இயன்றது ஐந்து அல்லது பத்து ரூபாய் கொடுத்து உதவு. இவன் கதை மிகவும் பரிதவிக்கத்தக்க கதை. அநாதைச் சிறுவன். நான் அவனை அடுத்த வாரம் ஏதாவது ஒரு விடுதியில் சேர்க்க ஏற்பாடு செய்கிறேன். பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டும்.

உன் ஆப்த நண்பன்,
கோபாலன்'

சுந்தரத்துக்குக் கோபாலன் நெருங்கிய நண்பர். எவ்வளவோ சமயங்களில் அவர் சுந்தரத்துக்கு உதவி செய்திருக்கிறார். ஆதலால் அரை மனத்தோடு பெட்டியைத் திறந்து இரண்டு ரூபாயை எடுத்துக் கொடுத்து, ''பையா, இப்பொழுது என்னால் இது தான் கொடுக்க முடியும். பிறகு பார்த்துக் கொள்ளலாம். நீ சென்று வா'' என்றார். அதைப் பெற்றுக் கொண்டு அந்தப் பையன் போய் விட்டான்.

மாலை வெய்யில் கடுமையாக இருந்த படியால் சற்றுக் கண்ணயர்ந்து விட்டார். அவர் விழித்துக் கொண்டு உள்ளே வந்த பொழுது யாரோ ஒரு புதிய சுமங்கலியம்மாளுடன் மனைவி பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. சற்றுப் பொறுத்து அவள் போன பிறகு, ''யாரது புதிதாக இருந்தது?'' என்று கேட்டார்.

''அதுவா, அவள் மாங்கல்யப் பிச்சை யென்று வந்தாள். சனிக்கிழமையும் அதுவுமாக ஸ்ரீ வேங்கட்ரமண ஸ்வாமியின் பெயர் சொல்லித் திருப்பதிக்குப் போகப் போவதாகச் சொன்னாள்.''

''சரி, சரி. நீ என்ன செய்தாய்?''

''ஏன். ஒரு ரூபாய் கொடுத்தேன்.''

''ரூபாய் கொடுத்தாயா? உன்னைப் போல ஏமாந்தவர்கள் இருப்பதனால்தான் கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டு சோம்பேறிகள் பிழைக்கிறார்கள். அவள் ஒரு நாளும் திருப்பதிக்குப் போக மாட்டாள்'' என்றார்.

''போகா விட்டால் போகிறாள். அந்தப் பாவம் அவளைச் சேருகிறது'' என்று சொன்னாள் ஜானகி.

அன்று சாயங்காலம் ஐந்து மணிக்கு வெளியே உலாவப் புறப்பட்டுக் கொண்டிருந்தார் சுந்தரம். அப்பொழுது ஒரு பெரிய காரில் நாலைந்து பெண்கள், கமகமவென்று பௌடர் வாசனை வீச, இறங்கி வந்தார்கள். அவர்கள் கையில் ஜம்பப் பையும் சில சிறு புத்தகங்களும் இருந்தன. ''மாமா, மாமா!'' என்று மிக உரிமையாகக் கூப்பிட்டுக் கொண்டு வந்தார்கள். சுந்தரம் அவர்களை வரவேற்று, ''என்ன சமாசாரம்?'' என்று கேட்டார்.

''நாங்கள் எங்கள் கல்லூரியில் ஒரு நாடகம் போட்டுப் பணம் சேர்க்கப் போகிறோம். கல்லூரி மாணவிகளுக்கு நாட்டிய மண்டபம் ஒன்று கட்டப் போகிறோம். அதற்கு நிதி திரட்டி வருகிறோம். இந்தாருங்கள், இரண்டு பத்து ரூபாய் டிக்கட்டுகள். அவசியம் மாமியை அழைத்துக் கொண்டு வாருங்கள். இதோ இங்கே கையெழுத்துப் போடுங்கள்'' என்று பதிலுக்குக் காத்திராமல் இரண்டு டிக்கட்டுகளைக் கிழித்துப் புத்தகத்தையும் நீட்டினார்கள். என்ன செய்வார் அவர்?



முடியாது என்று கண்டிப்பாய்ச் சொல்ல வேண்டும் போல் தோன்றிய போதிலும் நா எழவில்லை. நாகரிகச் சிறுமிகளை வெறுங் கையாக அனுப்ப மனம் வரவில்லை. சரி யென்று உள்ளே சென்று இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளைக் கொண்டு வந்து கொடுத்தார்.

"மாமா! ரொம்ப வந்தனம். நீங்கள் நிச்சயம் கொடுப்பீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். வருகிறோம்" என்று சொல்லி விட்டு அம்மாணவிகள் குதூகலமாய்ப் போய் விட்டார்கள். இதையெல்லாம் ஜானகி கவனித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் அவரிடம் ஒன்றும் பேசவில்லை.

சுந்தரம் வீட்டுக்குத் திரும்பி வரும் பொழுது இரவு மணி எட்டு இருக்கும். வந்ததும் கைகால்களைக் கழுவிக் கொண்டு சுவாமி படத்துக்கு நமஸ்காரம் செய்து விட்டு, குழந்தைகளுடன் உட்கார்ந்து ஒன்றும் பேசாமல் சாப்பிட்டார். சாப்பிட்ட பிறகு வாசல் தாழ்வாரத்துக்குப் போய் நாற்காலியில் சாய்ந்து கொண்டார்.

சனிக்கிழமை தினம் உண்மை ஏழைகளுக்குப் பிச்சை கொடுக்காமல் வெறும்

தாட்சிண்யத்துக்காகப் பணம் விரயம் செய்தாரே கணவர் என்று உள்ளே ஜானகி அம்மாள் துக்கப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்பொழுது "அம்மா! தாயே, கொஞ்சம் சோறு போடம்மா!" என்று கத்தினன் எலும்பும் தோலுமாய் வந்த இராப் பிச்சைக்காரன்.


சுந்தரம் சாந்தமாக, "ஜானகி!" என்று கூப்பிட்டார்.

"என்ன?" என்றது அவள் குரல்.

"சாப்பாடு பாக்கி யிருக்கிறதா? இருந்தால் இந்தப் பிச்சைக்காரனுக்குக் கொஞ்சம் முருகனிடம் கொடுத்தனுப்பு" என்றார்.

ஜானகிக்கு மிகவும் சந்தோஷமாகி விட்டது. குழம்பும் சாதமுமாகக் கலந்து ஒரு பாத்திரம் நிறைய முருகனிடம் கொடுத்து அனுப்பினள்.

பூஜை அறைக்குச் சென்று அம்பிகையின் படத்துக்கு நமஸ்காரம் செய்தாள். "தாயே, இன்று மத்தியானம் முழு மனத்துடன் நான் சுமங்கலிக்குப் பணம் கொடுத்ததற்குக் கைமேல் பலனாக என் கணவர் மனம் மாறியதென்றே நினைக்கிறேன். என்றென்றும் எங்கள் இருவருக்கும் தர்ம சிந்தனை குறையாமல் இருக்கும்படி அருள் புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.



பரிசுப் புடவை

ரா. பாலகிருஷ்ணன்

அன்று மாலை காரியாலயத்திலிருந்து நான் வீடு திரும்பியபோது வாசல் கதவு பூட்டியிருந்ததைக் கண்டு திகைத்து நின்றேன். 'எங்கே போயிருப்பாள் ஞானம்! அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்மணிகளுடன் சினிமா, நாடகம் என்று எங்கேயாவது போவதாயிருந்தாலும் காலையிலேயே என்னிடம் சொல்லியிருப்பாளே! அப்படி என்ன அவசர வேலை அவளுக்கு!' என்று யோசித்தவாறு சிறிது நேரம் நின்றேன்.

தோட்டத்தின் பின்புறமிருந்த குடிசையில் நல்லகண்ணு இருக்கிறானா, என்று எட்டிப் பார்த்தேன். குடிசைக் கதவு சாத்தியிருந்தது. ஒருகால் பக்கத்து வீட்டில் சாவியைக் கொடுத்துவிட்டுப் போயிருப்பாளோ என்ற யோசனையுடன் அடுத்த வீட்டுக்குள் நுழைந்தேன்.

"வாங்கோ, சார்! உங்க சம்சாரம் புடவை வாங்குவதற்காகச் சைனாபஜாருக்குப் போயிருக்கிறாளாம். வேலைக்காரன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு துணைக்குப் போயிருக்கிறானாம். கவலைப்படாதீர்கள். வரட்டும், உட்காருங்கள்!" என்று வரவேற்றார், அடுத்த வீட்டுக்காரர்.

"என்ன! புடவை வாங்கவா! இந்தப் பெண் ஜன்மங்களுக்கு என்னதான் புடவை மோகமோ! வீட்டில் எவ்வளவு புடவைகள் இருக்கின்றன, தெரியுமோ!" என்று அலுத்துக் கொண்டேன்.

அவர் சிரித்தார். அவர் மனைவி அப்போது ஒரு டம்ளர் காப்பியையும் என் வீட்டுச் சாவியையும் எதிரில் வைத்து விட்டு, "புடவை ஞானத்துக்கு இல்லையாம்" என்று சொல்லி விட்டுத் திரும்பினாள்.

பெண்ணினத்தைப் பொதுப்படையாக நான் தாக்கிய குற்றத்துக்காக, என் மனைவிக்குப் பரிந்து கொண்டு அடுத்த வீட்டுப் பெண்புலி என்பேரில் மறைமுகமாகப் பாய்ந்து தாக்கியது போலிருந்தது, அந்தப் பதில்!

"காப்பி ஆறிப்போகிறதே, சாப்பிடுங்கள்!" என்றார் நண்பர்.

"புடவை ஞானத்துக்கு இல்லை". யென்றதும் எனக்குச் சற்று நிம்மதியாகத்தான் இருந்தது. 'வேறு யாருக்காக இவள் புடவை வாங்கப் போயிருப்பாள்' என்ற நினைவுடன் காப்பியைக் குடித்தேன்.

"இப்போதான் வந்தேளா!" என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். கையில் ஒரு பெரிய காகிதப் பொட்டணத்துடன் என் மனைவி உள்ளே நுழைந்தாள்.

"உம்...இனிமேல் இவர்கள் வீட்டில் சாவியைக் கொடுத்துவிட்டுப் போகாதே, ஞானம்! சாவியை வைத்துக் கொள்ளுவதுடன் எனக்குக் காப்பி கொடுக்கும் செலவு வேறு ஏற்படுகிறது இவர்களுக்கு!" என்று சிரித்த வண்ணம் கூறிவிட்டு எழுந்தேன்.

என் வீட்டுக்குள் நுழைந்ததும், "புடவை யாருக்கு, ஞானம்!" என்று விசாரித்தேன். குழந்தையைக் கீழே விட்டு விட்டு, நல்லகண்ணு ஒதுங்கி நின்றான். அவன் முகத்தில் ஒரு விதக் கலவரம் தோன்றியதைக் கவனித்தேன்.

"என்ன, ஞானு! கேட்டேனே, காதில் விழவில்லை! புடவை உனக்காக இல்லை என்று பக்கத்து வீட்டு அம்மாள் சொன்னாள். பின் யாருக்காக வாங்கி வந்தாயாம்!" என்றேன்.

"அது......எனக்காகத்தான், சாமி!" என்றான் நல்லகண்ணு தடுமாற்றத்துடன்.

"ஆமாம்; நல்லகண்ணுதான் ஒரு புடவை வாங்கித் தரச் சொன்னான். அவனுக்கு நல்லதாய்ப் பார்த்து வாங்கத் தெரியாதென்றுதான் என்னை வாங்கிக் கொடுக்கும்படி சொன்னான். எப்படியிருக்கிறதென்று பாருங்கள்!"— புடவைப் பொட்டணத்தை என் எதிரில் வைத்து விட்டு ஞானம் சமையலறைக்குள் மறைந்து விட்டாள் குழந்தையுடன்.

* * *

பீதி நிறைந்த முகத்துடன் நல்லகண்ணு நின்று கொண்டிருந்தான். அவன் கைவிரல்கள்

ஏனோ பதறின. முகத்தில் முத்து, முத்தாய் வியர்வைத் துளிகள் அரும்பியிருந்தன.

புடவை நல்லகண்ணுவுக்கா! அவனுக்கு எதற்கு? அவன் ஒண்டிக் கட்டையாயிற்றே! உற்றார், உறவினர் என்று அவனுக்கு யாருமே இல்லை யென்றும் சொல்லி யிருக்கிறானே! புடவையை வாங்கி அவன் யாருக்குக் கொடுக்கப் போகிறான், என்பது எனக்குப் பெரும் புதிராகவே யிருந்தது.

நல்லகண்ணு என் வீட்டில் வேலைக்கு வந்து மூன்று மாதங்கள் தாம் ஆகியிருந்தன. முப்பது வருடங்கள் வீட்டோடு பழகியவன் போல விசுவாசத்துடன் நடந்து கொண்டான். அவன் எந்த ஊர்க்காரன், அதற்கு முன்பு எங்கே, என்ன வேலை செய்து கொண்டிருந்தான் என்ற விவரமெல்லாம் எனக்குத் தெரியாது. விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் இருக்கவில்லை.

'பசி' என்று சொல்லிக் கொண்டு ஒரு நாள் வந்தான். ஜானகி சாப்பாடு போட்டாள். உடலில் தெம்பு உள்ளவர்கள் பிச்சைக்கு வந்தால், 'எங்கேயாவது வேலை செய்து பிழைக்கிறதுதானே!' என்று எல்லோருமே சகஜமாகக் கேட்கிற கேள்வியைத்தான் நானும் கேட்டு வைத்தேன்.

அவன் நன்றி நிறைந்த பார்வையுடன், "சாப்பாடு போட்டு விட்டு இந்தக் கேள்வியைக் கேட்டது நீங்க ஒருத்தர்தானுங்க! மற்றவங்க எல்லாம் இதே கேள்வியைக் கேட்டு என்னை விரட்டியடித்தாங்க. உம்......உங்க வீட்டிலேயே எனக்கு வேலை கொடுத்தா சந்தோஷமாச் செய்வேனுங்க!" என்றான்.

நல்ல கண்ணுவின் முகஸ்துதிக்குத்தான் மயங்கினேனோ, அல்லது அவன் முகத்தில் பிரதிபலித்த நேர்மைதான் என்னை மயக்கியதோ தெரியாது. அவனை அந்த நிமிஷமே வேலைக்கு அமர்த்திக் கொண்டேன். இரு வேளையும் என் வீட்டில்தான் சாப்பாடு அவனுக்கு. தவிர, மாதம் பத்து ரூபாய் சம்பளம். தோட்டத்து மூலையிலேயே ஒரு குடிசை அமைத்துக்கொண்டு அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்டான் நல்ல கண்ணு. தோட்ட வேலை, வீட்டு வேலை, கடை கண்ணிக்குப் போவது—இத்யாதி எல்லா வேலைகளையும் அவனே பொறுப்பாகச் செய்து வந்தான். என்னதான் கடுமையான வேலையாயிருப்பினும் அவன் சலித்துக் கொள்ளுவதோ, முணு முணுப்பதோ இல்லை. சிரித்த முகத்துடன் அவன் உழைத்து வந்தான்.

முதல் மாதச் சம்பளத்தை அவனிடம் கொடுத்த போது, "உங்களிடமே இருக்கட்டுங்க. பிற்பாடு தேவையான போது வாங்கிக்கிறேன்" என்று அவன் கூறியதன் கருத்து எனக்கு விளங்க வில்லை.

அப்போதுதான் கேட்டேன், "உனக்குப் பெற்றோர் உற்றார் யாரும் இல்லையா!" என்று.

"இல்லை" என்று தலையாட்டினான்.

"கல்யாணம்......"

"இல்லிங்க!"

"ஏன், ஒரு பெண்ணைப் பார்த்துக் கட்டிப் போடேன்! கல்யாணம் செய்து கொள்ள வயதாக வில்லையா, உனக்கு!" என்றேன்.

அவன் சிரித்தவண்ணம், "இதுதானுங்க! நிம்மதியான வாழ்வு! கல்யாணம் செய்துக் கணும்னு, கையிலே கொஞ்சம் பசை வேணும். சொத்து சுகம்னு ஏதாச்சும் இருந்தாலும் பரவாயில்லை. என்னைப் போல வறட்டுப் பசங்களுக்குக் கல்யாணமே உதவாதுங்க!" என்றான் விரக்தியுடன். அவன் எதையோ எண்ணி உள்ளூறப் புழுங்குகிறான்; அதை வெளிப் படையாகச் சொல்ல விரும்ப வில்லை என்பது புலனாகியது. கல்யாணம் செய்து கொள்ளுவதும், செய்து கொள்ளாமலிருப்பதும் அவன் சொந்த விஷயம். அவன் நிர்மானிக்க வேண்டிய விஷயத்தைப் பற்றி நான் அதிகமாக வற்புறுத்துவது சரியில்லை என்று அந்தப் பேச்சை அதோடு விட்டு விட்டேன்.

காலையில் நான் ஆபீசுக்குக் கிளம்பும் தறுவாயில் அவன் என்னிடம் விட்டு வைத்திருந்த மூன்று மாதச் சம்பளத் தொகை முப்பது ரூபாயையும் கேட்டு வாங்கிக் கொண்டான். புடவை வாங்கத்தான் போலும்!

ஜானகி கொடுத்து விட்டுப் போன காகிதப் பொட்டணத்தைப் பிரித்துப் புடவையைப் பார்த்தேன். விரல் அகலத்துக்குச் சரிகை போட்ட ஆகாய நீல நிறம். நூல் புடவைதான் என்றாலும் கண்ணுக்கு ரம்யமாக இருந்தது. இருபத்தாறு ரூபாய் விலை குறிக்கப்பட்ட சீட்டு ஒன்றும் தொங்கியது.

"ஆமாம், யாருக்காக நீ இதை வாங்கினாய், நல்லகண்ணு!" என்றேன்.

"இதை வாங்கத்தான் சாமி, மூணு மாசமா நான் பணம் சேர்த்தேன். நான் ஒருத்தருக்குக் கடன்பட்டிருந்தேன். சேலையை உரியவங்க கிட்ட கொடுத்துட்டாப் போதும். என் கடன் தீர்ந்து போயிடும். மெய்யாலும் சொல்றேனுங்க. இந்த மூணு மாசமா எனக்குச் சரியான தூக்கமே இல்லீங்க. என் மூளையைப் போட்டுக் குழப்பிக்கிட்டே யிருந்தேன். இன்னிக்குத்தான் என் மனசுக்கு நிம்மதியாச்சுதுங்க!" என்று சொல்லி விட்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான், வேலைக்கார நல்லகண்ணு.

அவன் எதையோ என்னிடமிருந்து மறைக்கிறான் என்று ஏற்கனவே நான் சந்தேகப் பட்டதை ஊர்ஜிதம் செய்வது போலிருந்தது அவன் பதில். அந்த ரகசியத்தை அறிய விரும்பியவனாய், "நீ இனிமேல் நிம்மதியாகத் தூங்கலாம். தூங்கப் போவதற்கு முன்னால் நீ யாருக்கு எந்த விதத்தில் கடன் பட்டிருந்தாய் என்பதை விவரமாகச் சொல்லி விட்டுப் போ!" என்றேன்.

நல்லகண்ணு கூறினான் — அதாவது தன் வாழ்க்கைப் புத்தகத்தின் பழைய ஏடுகளைப் புரட்டினான். அதில் கண்ட விவரங்கள் (கொச்சை நீங்கலாக) வருமாறு :—

"நான்கு வருடங்களுக்கு முன்பு வரை நான் கிராமத்தை விட்டுச் சென்னைக்கு வரப் போவதாகக் கனவு கூடக் கண்டவனில்லை. கிராமத்தில் ஒரு குடிசையும் சிறிதளவு புன்செயும் என் பூர்வீகச் சொத்தாக இருந்தது. என் தகப்பனார் பட்டிருந்த சுமார் இருநூறு ரூபாய்க் கடனுக்காக என் பங்காளி ஒருவன்—கொஞ்சம் படித்தவன்; ஆனால் பேராசைக்காரன்—என் சொத்து முழுவதையும் பறித்துக் கொண்டு

விட்டான். ஏதோ சொல்லி என்னிடமிருந்து கையெழுத்து வாங்கிக் கொண்டது, என்னை அவன் மோசடி செய்வதற்காகத்தான் என்று பிற்பாடு அறிந்தேன். நானும் அவனைப் போல் கொஞ்சம் படித்திருந்தால் ஏமாந்து போயிருக்க மாட்டேன். கையெழுத்து மட்டுந்தான் போடத் தெரியும், எனக்கு.

இருநூறு ரூபாய்க் கடனுக்காக ஐந்நூறு ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள என் உடைமைகளைக் கைப்பற்றி, அவன் என்னை நிர்க்கதியாகத் தெருவில் விட்டதும், என் நெஞ்சு பற்றி எரிந்தது. ஊரில் எனக்குத் தெரிந்த சிலரிடம் நியாயம் கேட்டேன். அவர்கள், "நியாயம் என்னவோ உன் பக்கந்தான் இருக்கிறது. ஆனால் சட்டம் அவன் பக்கந்தான் பேசும். நீதான் கையெழுத்துப் போட்டு விட்டாயே! தவிரவும், உன் பங்காளி பெரிய போக்கிரி என்பது பிரசித்தம். அவனிடம் பேசினால் சண்டைதான் மிஞ்சும்!" என்று கூறி ஒதுங்கிக் கொண்டு விட்டார்கள்.

ஆனால்......பஞ்சாயத்தாருக்குத்தான் அவனிடம் பயம். எனக்கென்ன! என்னைப் பரதேசியாக நடுத்தெருவில் விட்ட அயோக்கியன் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளத் துணிந்தேன். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துச் சில நாட்கள் காத்திருந்தேன். ஒருநாள் அவன் என்னிடம் வசமாகச் சிக்கிக் கொண்டான். நானும் சுபாவத்திலேயே சற்று முரடன் தான். என் ஆத்திரம், அவனை நேருக்கு நேர் சந்தித்ததும் எல்லை மீறியது. பலம் கொண்ட மட்டும் தாக்கினேன்.

தற்செயலாக அச்சமயம் என் இடுப்பில் செருகியிருந்த கையரிவாள் நழுவி உடலில் இலேசாகச் சிராய்த்தது. அரிவாளை எடுத்துக் கீழே எறியப்போன சமயம் அவன்மீதுள்ள பிடி, சற்றுத் தளர்ந்தது. அவன் சமாளித்துக் கொண்டு எழுந்து, "ஐயோ! என்னை அரிவாளால் வெட்டுகிறானே!" என்று அலறினான். சற்றுத் தொலைவில் போய்க் கொண்டிருந்த இருவர் ஓடோடியும் வந்து அரிவாளும் கையுமாக நின்ற என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டனர். அவர்கள் வந்ததை நான் கவனிக்கவில்லை. ஆனால் அவன் கவனித்து விட்டான். கவனித்து விட்டுத்தான் கத்தினான் போலும்! என் மடமை ஒரு நொடியில் எனக்கு விளங்கி விட்டது. ஆம்; மீண்டும் என்னை வஞ்சித்து விட்டான் அந்தப் பாவி!

அதற்குமேல் எல்லாம் துரிதமாக நடந்தன. கொலை செய்ய முயன்றதாக என்மீது வழக்கு. கண்ணால் பார்த்ததாக இருவர் சாட்சியம். வேறு என்ன தேவை, எனக்குத் தண்டனை கிடைக்க! மூன்று வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது!

சிறைக்குப் போன புதிதில் ஒன்றிரண்டு மாதங்களுக்கு என் உள்ளக் கொந்தளிப்பு அடங்கவே யில்லை. 'மெய்யாகவே அவனைத் தீர்த்துக் கட்டி விட்டால்தான் என்ன! வெளியே போனதும் முதல் வேலை அதுதான்!' என்று பல தடவைகள் தீர்மானித்துக் கொண்டேன். காலம், எல்லாப் புண்களுக்கும் ஏற்ற மருந்தல்லவா! பழி வாங்கவேண்டும் என்ற உணர்ச்சி, விடுதலையாகும் சமயம் அறவே மறைந்து விட்டது.



"இந்தக் கழுதையை வளர்க்கிறதிலே ஒரு கஷ்டமும் கிடையாதுங்க. அது எதை வேணுமானாலும் தின்னு பிழைத்துக் கொள்ளும்!"

மீண்டும் வெளியுலகைக் காணும் பாக்கியம் கிட்டியபோது நான் பசுவைப்போல சாந்தமாகி விட்டேன். கிராமத்துக்குத் திரும்பிப் போக வேண்டுமென்ற ஆசையே கிடையாது எனக்கு. அவன் முகத்தில் விழிப்பதே பாவம் என்றுதான் தோன்றியது. சிறை அதிகாரி எனக்குக் கொடுத்திருந்த ரயில் டிக்கட்டைக் கிழித்தெறிந்து விட்டேன். சிறையிலிருந்த போது நான் உழைத்ததற்குக் கூலியாகக் கிடைத்த பணம் எட்டு ரூபாய் என் கையில் இருந்தது. அதிலிருந்து ஒரு வேஷ்டியும் மேல் துண்டும் வாங்கிக் கொண்டேன். எஞ்சியிருந்த தொகையைக் கொண்டு சென்னைக்கு ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டு ரயிலேறினேன்.

அந்த ரயில் பிரயாணம் என் வாழ்க்கையின் போக்கை மாற்றியமைக்கப் போகிறதென்று நான் கனவுகூடக் காணவில்லை. இதைக் கடவுளின் செயல் என்றுதான் கூற வேண்டும்! கடவுள் மனிதனைப் படைத்தது கூட விசித்திரமில்லை; சபல புத்தியுள்ளவனாக அவனைப் படைத்தாரே அதுதான் விசேஷம்!

ரயிலில் கூட்டம் அதிகமில்லை. நான் இருந்த பெட்டியில் எதிர் பெஞ்சில் ஒரு கிழவர் காலை நீட்டிப் படுத்திருந்தார். எனக்குப் பக்கத்தில் ஒரு நடுத்தர வயதுள்ள மனிதர் சாய்ந்து உட்கார்ந்து கிழவருடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து, கிழவர் சென்னையிலிருக்கும் தம் மகனைப் பார்க்கப் போவதாகவும், சுமங்கலிப் பிரார்த்தனைக்காக மகளுக்கு ஒரு சேலை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்றும் அதற்காக முப்பது ரூபாய் யாரிடமோ அவர் கடன் வாங்கிக் கொண்டு போவதாகவும் அறிந்தேன்.

"பெண்ணைப் பெற்றால் சுகம் ஏது! செலவுதான்!" என்று அனுதாபம் தெரிவித்துவிட்டு ஒரு கொட்டாவி விட்டார், என் பக்கத்திலிருந்தவர். சற்றைக்கெல்லாம் அவரும் படுத்து

விட்டார். குறட்டை விட்டு நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த பெரியவரின் சட்டைப் பையிலிருந்து ஒரு மணிபர்ஸ் வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

இருபத்தெட்டு வருடங்கள் நான் நல்லவனாக, பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல் வாழ்ந்ததெல்லாம் பொய்தானா! சிறையில் திருடர்களுடனும் கொலைகாரர்களுடனும் பழகிய தோஷம் என்னையும் இதயமற்ற கயவனாக்கி விட்டது போலும்! கிழவரின் சட்டைப் பையிலிருந்து சரிந்த மணிபர்ஸ் கீழே, என் காலடியில் விழுந்தது. இருவரும் அயர்ந்த நித்திரையில் ஈடுபட்டிருந்ததைக் கவனித்தேன். கால் விரல்களால் அதை எடுத்து ஒரு கணத்தில் என் மடியில் பத்திரப்படுத்தி விட்டேன். ஆம்; அந்த ஒரு கணத்தில் நான் மனிதத் தன்மையை இழந்து விட்டேன். வண்டி நின்றதும் நான் கீழே இறங்கிச் சென்றதைக் கூட யாரும் கவனிக்கவில்லை.

உறங்கிக் கொண்டிருக்கும் வயோதிகரின் பணத்தைத் திருடிவிட்டு நள்ளிரவில் ஓடிவந்த என் செயல் என்னை வாட்டிக் கொண்டேயிருந்தது.

என் மனச்சாட்சி என்னை அணு, அணுவாகச் சுட்டுப் பொசுக்கியது. நைந்த உள்ளத்துடன் நான் எங்கெல்லாமோ வேலைக்கு அலைந்தேன். ஒரு மாதகாலம் எனக்கு எங்கும் வேலை கிடைக்கவில்லை. திருடிய பணமும் கரைந்தது. சென்னைக்கு வந்த பிறகும் பல நாட்கள் பட்டினி கிடக்க நேர்ந்தது. அதற்காக நான் வருந்தவில்லை. எப்பாடு பட்டாகிலும் ஒரு முப்பது ரூபாய் சேர்த்து அந்தக் கிழவரின் மகளிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்ற தீர்மானம் என் மனத்தில் உருவாகியது. அதை நிறைவேற்றும் பொருட்டு நான் எந்த வேலையையும் மேற்கொள்ளத் தயாராயிருந்தேன்.



டாக்டர்:— நான் பத்து வருஷமா வைத்தியராக இருக்கிறேன். அதனாலே நான் சொல்வதைக் கேளுங்கள்!

நோயாளி:— நான் பதினைந்து வருஷமா நோயாளியாக இருக்கிறேன். எனக்கு நீங்க ஒன்றும் சொல்ல வேண்டாம்!

சில நாட்கள் கை வண்டி இழுத்தேன். ரயில்வே ஸ்டேஷனில் பெட்டி, படுக்கை சுமந்தேன். அதனாலெல்லாம் கிடைத்த சில்லறை அன்றாடச் செலவுக்கே போதவில்லை எனக்கு. முப்பது ரூபாய் எப்படிச் சேர்ப்பது என்று நினைத்த போதிலும் என் தீர்மானம் என்னவோ மேலும் உறுதிப்பட்டே வந்தது.

அந்த நிலைமையில்தான் பசியோடு தங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். தாங்கள் என் பசியைப் போக்கியதுடன், மானமாக வாழ வழி வகுத்துக் கொடுத்தீர்கள். மாதம் பத்து ரூபாய் சம்பளத்தில் வேலை கொடுப்பதாகச் சொன்னதுமே என் வேதனை அகன்றது. மனித உருவில் வந்த தெய்வமாகத்தான் தங்களை மதித்து வருகிறேன். அன்று முதல்!"—நல்லகண்ணுவின் பூர்வாசிரம வரலாறு இதுதான்.

* * *

சந்தர்ப்ப வசத்தால் சீரழிந்த நல்லகண்ணுவின் வாழ்க்கையை எண்ணி என் மனம் அவனுக்காகப் பச்சாத்தாபப்பட்டது.

நல்லகண்ணு தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "எனக்காக நீங்க ஒரு உபகாரம் செய்யணுங்க!" என்றான் கெஞ்சும் குரலில்.

"என்ன அது!" என்றேன்.

"இந்தச் சேலையை அந்த அம்மாளின் விலாசத்துக்குத் தபாலில் அனுப்பி விடவேணும். எனக்கு விலாசம் எழுதக்கூடத் தெரியாதுங்க!" என்று சொல்லி மடியிலிருந்து இரண்டு ரூபாய்ச் சில்லறையை என்னெதிரில் வைத்தான்.

"சரி, அந்த விலாசம் எங்கே!" என்றேன்.

அவன் குடிசைக்குள் நுழைந்து, ஒரு கசங்கிய காகிதத்துடன் திரும்பி வந்தான். அதில் எழுதப்பட்டிருந்த விலாசத்தைக் கண்டதும் நான் உள்ளூறச் சிரித்துக் கொண்டேன்.

"இந்த விலாசம் உன் கைக்கு வந்து நான்கு மாதங்களுக்கு மேலிருக்குமே! அவர்கள் இன்னும் அதே வீட்டில்தான் இருக்கிறார்களா என்று தெரிய வேண்டாமா! இல்லாவிட்டால் தபால் செலவு தண்டமாகி விடுமே! இடது கைப்பக்கம் மூன்றாவது தெருவில் நாற்பதாம் நம்பர் வீடுதான். நீயே போய் விசாரித்துக் கொண்டு வந்துவிடு. நாளைக்கு அனுப்பி விடலாம்!" என்று அவனிடம் அந்த விலாசத்தைக் கொடுத்து அனுப்பினேன்.

அரைமணிக்குப் பிறகு அவன் திரும்பி வந்த போது, அவன் அன்று வாங்கி வந்த அதே நீல நூல் புடவையை உடுத்திக்கொண்டு என் அருகில் நின்ற ஜானகியைக் கண்டதும் சிலை போல் ஸ்தம்பித்து நின்று விட்டான். நான் நான்கு மாதங்களுக்கு முன்பு குடியிருந்த என் பழைய வீட்டு விலாசம்தான் நல்லகண்ணு என்னிடம் கொடுத்த காகிதத்தில் இருந்தது! பணப்பையை ரயிலில் பறிகொடுத்து விட்டு என் மாமனார் பரிதாபகரமாக வீடு வந்து சேர்ந்த காட்சி என் நினைவுக்கு வந்தது.

பாவம், நல்லகண்ணு! செய்யாத குற்றத்துக்கு நீண்ட கால சிறைவாசம், செய்த குற்றத்துக்குத் தப்பி விட்டதுடன், நிரந்தரமாக ஒரு வேலையுமல்லவா கிடைத்து விட்டது அவனுக்கு! அவன் செய்த திருட்டுக் குற்றம் என் நெஞ்சிலேயே பதிய வில்லை. தூய்மையின் வடிவமாக அவன் நின்ற காட்சி என் மனத்தை விட்டு அகலவில்லை.





வரம் கேட்ட குதிரை

ஒரு காலத்தில் குதிரை மாட்டைப் பார்த்துப் பொருமைப்பட்டது. "இந்தப் பிராணிக்கு எவ்வளவு நல்ல கொம்புகள்! எனக்கு இல்லையே. இருந்தால் எவ்வளவு உபயோகமாக இருக்கும்!"

இப்படியெல்லாம் யோசித்து, 'கொம்பு வேண்டும், இரண்டு நீண்ட கொம்புகள் வேண்டும்' என்று தவம் இருந்தது.

தவம் பலித்தது. தலையில் கொம்புகள் முளைத்து வளர்ந்தன. குளத்தில் ஜலத்தில் தன் உருவத்தைப் பார்த்துக் குதிரை மிக சந்தோஷப்பட்டது. தான் அடைந்துவிட்ட கொம்புகளை எண்ணி எண்ணிப் பெருமைப் பட்டுக் கொண்டு குதிரை புல் மேய்ந்து கொண்டிருந்தது.

திடீர் என்று எதையோ கண்டு ஓடிற்று. ஆனால் முன்போல் ஓட முடியவில்லை. மாட்டைப்போல் தடுமாறி ஓடிற்று. கால்களில் ஓடும் சக்தி முன்போல் இருக்கவில்லை. "என்னவாயிற்று என் கால்களுக்கு?" என்று ஏக்கம் கொண்டது.

பிறகு புல் தின்று பசி தீர்த்துக்கொண்டு நின்றபோது, வயிற்றில் ஏதோ ஒரு கலக்கம் உண்டாயிற்று.

"இதுவென்ன வயிற்றில் என்னவோ பண்ணுகிறதே" என்று சொல்லி முடிப்பதற்குள் சாப்பிட்ட புல் வாய்க்கு வந்தது. அதை மென்ன மறுபடி கடித்து விழுங்கிய பின்னும் மறுபடி வயிறு கலக்கிற்று.

"இதுவென்ன வம்பு!" என்று ஒரு மரத்தடியில் படுத்துக் கொண்டது. தின்ற புல் அவ்வளவும் மறுபடி அசைபோட்டுத் தூங்கிற்று. பிறகு எழுந்து நடந்தது.

"என் பாடு கஷ்டமாகி விட்டது. மாட்டைப் போல் ஆகிவிட்டேனே! இந்தக் கொம்புகளும் வேண்டாம்; இந்த அசைபோடும் தொல்லையும் வேண்டாம்!" என்று மறுபடி பழைய மாதிரி ஆகவேண்டும் என்று தீவிர தவம் செய்ய ஆரம்பித்தது. அவ்வப்போது கால்களைப் பார்த்துக் கொண்டது. குளம்புகள் ஒவ்வொன்றும் இரண்டாகப் பிளந்து போய், முன் போல் இல்லை. முதுகின்மேல் ஒரு ஈ வந்து உட்கார்ந்தது.வாலால் அதைஓட்டிக் கொண்டபோது தன் புது வாலைப்பார்த்து மிக வெட்கம்கொண்டது. 'ஐயோ! துரௌபதியின் தலையில் அவிழ்ந்த கூந்தலைப் போல் இருந்த என் வால் இப்படி வைதிகனுடைய உச்சிக் குடுமியைப் போல் ஆய் விட்டதே'என்று துக்கம்மேலிட்டு அழுதது.

"நான் கெட்டேன், ஈசுவரா! இந்தக் கொம்புகளைத் திருப்பிப் பெற்றுக் கொள். என்னை முன்போல் சுகமாக இருக்கவும் கால் குளம்புகள் பிளந்து போனதைச் சரிப்படுத்தியும் செய்து என்னைக் காப்பாற்றுவாயாக.

"இந்த வாலை என்னால் சகிக்க முடியவில்லை. என்னுடைய பழைய வாலை



எனக்குத் தருவாயா?'' என்று மிகத் துயரப்பட்டுத் தவம் செய்தது.

"குதிராய்! என்ன உனக்கு?" என்றான் மகாதேவன்.

"என் கால்களைப் பார். இனி நான் ஓடமுடியுமா? என் வாலைப் பார். இது என்ன வெட்கக்கேடு!" என்றது குதிரை.

"என்ன இதற்கு? மான்களைப் போலவும் பசுக்களைப் போலவும் இரட்டைக் குளம்புகளும், அழகான குச்சு வாலும். அதனாலென்ன?" என்றான் மகாதேவன் சிரித்துக் கொண்டு.

"போதும், போதும்! என் பழைய குளம்புகளே, பழைய வாலே எனக்கு வேண்டும். தவிர, இதுவென்ன, சாப்பிட்டது ஜீரணமாவதில்லை? வயிற்றில் என்னவோ செய்து மேலுக்கு வருகிறதே!" என்றது பாவம் குதிரை.

"அது அப்படித்தான் செய்யும். அதனால் என்ன? மறுபடி நன்றாகக் கடித்து அசைபோட்டு விழுங்கினால் சரி!" என்றான் சங்கரன்.

"எனக்கு உண்டாகும் குழந்தைகளுக்கும் இதே பாடா?" என்றது குதிரை.

"ஆமாம்!" என்றான் பரமசிவன்.



"ஐயோ! என்மேல் கருணை கொண்டு தப்புவிப்பாய்!" என்று அழுதது குதிரை.

"கொம்புகளைத் திருப்பிக் கொடுத்து விடு!" என்றான் மகாதேவன்.

"இதோ எடுத்துக் கொள்! எனக்குக் கொம்பும் வேண்டாம், மாட்டுக் குளம்பும் வேண்டாம். தின்றது உடனே ஜீரணமாகும்படியிருக்கட்டும், படுத்து அசை போடும் வேலை எனக்கு வேண்டாம். நான் ஓடிக் குதித்து வாழ விரும்புகிறேன்!" என்று சொல்லிக் குதிரை பரமசிவன் காலைத் தொட்டு வணங்கிற்று.


"ததாஸ்து!" என்று ஆண்டவன் வரமளித்தான்.



வஸந்தத்தின் புத்துணர்ச்சி

உங்களுக்கு இன்றும்....என்றும்!

காஷ்மீர்பொக்கே டால்கம் பௌடர் சுத்த மனோரம்மியமே! மிக்க மிருதுவாக உங்கள் உடலில் வஸந்தநாள் காலையின் புத்துணர்ச்சியை அள்ளித் தெளிக்கிறது—உடலை ரம்மியமணத்துடனும் குளிர்ச்சியுடனும் மணிக்கணக்காக வைத்திருக்கிறது. அதிகப்படி ஈரத்தை உறிஞ்சுகிறது ... அரிப்பையும் எரிச்சலையும் தவிர்க்கிறது ... உங்கள் வசீகரத்தையும் மென்மையையும் பன்மடங்காக்குகிறது.





காஷ்மீர் பொக்கே

டால்கம் பௌடர்

ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்

ஒரு கால்கேட்—பாமாலிவ் தயாரிப்பு

கால்கேட் 1806 முதல் தரத்துக்குப் பெயர் போனது.

39. குகையில் ரகளை!



ரமணியின் முகத்தில் கலவரத்தைக் கண்டதும், முன் வரிசையில் உட்கார்ந்திருந்த பெரியவர், "என்ன தம்பி, கதையை நிறுத்தி விட்டாய்?" என்று கவலையோடு கேட்டார்.

"ஒன்றுமில்லை. நான் குகையில் இருந்தபோது என்னோடு சுந்தரம் என்று ஒரு பையன் இருந்தான். அவனோடு நான் பழகியதெல்லாம் இரண்டே நாட்கள்தான். ஆனாலும், அவன் என்னிடத்திலே எவ்வளவு பிரியமாயிருந்தான். முரடர் தலைவன் என்னை அடித்தபோது அவன் குறுக்கே வந்து நின்று கொண்டு தைரியமாகத் தடுத்தான். இரவிலே கூட அடி விழுந்த இடங்களை யெல்லாம் வெகு நேரம் வரை தடவிக் கொடுத்துக் கொண்டேயிருந்தான். அவன் எவ்வளவு நல்லவன்! நல்ல நண்பர்களைப் பற்றி நான் கதை சொல்லும் போது, அருமை நண்பன் சுந்தரத்தின் நினைவு வந்து விட்டது. ஐயோ! அவனுக்கு என்னென்ன தொந்தரவுகள் கொடுக்கிறார்களோ! பாவம்" என்று கூறினான். அப்போது அவன் கண்கள் கலங்கின. மேலே பேசவும் வாய் வரவில்லை.

உடனே சிற்சபேசன், "சரி, ரமணி! இன்று கதை சொன்னது போதும். பேசாமல் போய் மாடியில் படுத்துக்கொள்" என்று கூறி விட்டு, அங்கிருந்தவர்களிடம், "ரமணிக்கு அந்தப் பையனைப் பற்றியே கவலை. இரவெல்லாம் இதே நினைவுதான். காலையில் கூடச் சொல்லிக் கொண்டிருந்தான். இன்று கதை கேட்டது போதும். நாளை வாருங்கள். கட்டாயம் கேட்கலாம்" என்று சொன்னார்.

அந்த இடத்தை விட்டுப் போக யாருக்குமே மனம் வரவில்லை. ஆனாலும், என்ன செய்வது? சந்தர்ப்பம் சரியில்லையே! எல்லோரும் எழுந்து போய் விட்டார்கள். ஆனால், அந்தக் கிழவர் மட்டும் போகவில்லை.

அவர் சிற்சபேசனைப் பார்த்து, "ஆஹா! பிள்ளை யென்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? மிகவும் அற்புதமாகக் கதை சொல்லுகிறான். இரண்டே நாட்கள்தான் பழகினானாம். நல்ல சிநேகிதனை மறக்காமல் இருக்கிறான். இவன் உங்களுக்குப் பிள்ளையாகப் பிறந்தது முன் ஜன்மத்தில் நீங்கள் செய்த புண்ணியம்தான். இவனுடைய தங்கமான குணத்துக்கு எல்லாம் நல்லபடியாகவே நடக்கும். கவலைப்படாதீர்கள். ஆண்டவன் அருள் புரிவார்" என்றார்.


உடனே சிற்சபேசன், "தாங்கள் யார்? தெரியவில்லையே!" என்று கேட்டார்.

"என் ஊர் தஞ்சாவூர். பர்மாவைச் சுற்றிப் பார்க்க வந்தேன். இந்த ஊருக்கு வந்ததும், தம்பி அபாரமாகக் கதை சொல்லுவதாகக் கேள்விப் பட்டேன். எனக்குக் கதை கேட்பதென்றால், சிறு வயதிலிருந்தே பிரியம் அதிகம். தம்பியின் கதையைக் கேட்கத்தான் வந்தேன்" என்று கூறி விட்டு, ரமணியைப் பார்த்து, "தம்பி, உன் சிநேகிதன் பெயர் என்ன என்று சொன்னாய்?" என்று கேட்டார்.

"சுந்தரம்!" என்றான் ரமணி.

"சுந்தரம்! அப்படியானால், ஐந்து எழுத்துப் பெயர். நல்ல பெயர்தான். சரி தம்பி, ஒரு பூவின் பெயர் சொல்."

வழியைக் காட்டுங்கள்




காரியம் சீக்கிரத்திலே கைகூடும். நீ என்ன நினைக்கிறாய்? உன் சிநேகிதன் சுந்தரம் எப்போது திரும்பி வருவானோ என்றுதானே நினைக்கிறாய்? நாளைக் காலையில் தாமரை மலர்வதற்குள் வந்து சேர்ந்து விடுவான்.''

''என்ன! உண்மையாகவா, தாத்தா? அவன் எப்படி வருவான்?''

''அதெல்லாம் இப்போது சொல்லக்கூடாது. என் ஜோஸ்யம் பலிக்கிறதா இல்லையா என்பது நாளைக் காலையிலே தெரிந்து விடும். நான் வருகிறேன். கவலைப்படாதே!'' என்று கூறி விட்டுப் போய் விட்டார் கிழவர்.


* * *

'ரமணி கிடைத்து விட்டான்' என்று காமாட்சி அம்மாள், சிற்சபேசன், மாலதி எல்லோரும் ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தார்களே, அதே சமயம் 'ரமணியைக்



'அனசின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப் பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனசினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் :—

1. குயினா : ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்ய தற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின் : பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினசிடின் : ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட் : தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.



அனசினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனசின்' ஹிருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனசினையே கேட்டு வாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

சுந்தரத்துக்கும் ரமணியைக் காணாதது ஆச்சரியமாகவே இருந்தது. ஆனாலும், "நல்ல வேளை! ரமணி எப்படியோ தப்பி விட்டான்!" என்று நினைத்துக் கொண்டு உள்ளூர ஆனந்த மடைந்தான்.

அப்போது தலைவன் சுந்தரத்தைப் பார்த்து, "ஏ, சுந்தரம்! உன் சிநேகிதன் எங்கே!" என்று மிரட்டினான்.

"எனக்கு எப்படித் தெரியும்? நானும் உங்களைப் போல் தூங்கிக் கொண்டுதான் இருந்தேன். அவன் எங்கு போனானோ!" என்றான் சுந்தரம்.

"எமன் அறியாமல் உயிர் போகாது. நிச்சயம் உனக்குத் தெரிந்துதான் இருக்க வேண்டும். உள்ளதைச் சொல். இல்லாவிட்டால், என் கோபம் உனக்குத் தெரியும்" என்றான் தலைவன்.

"தெரிந்தால்தானே சொல்லலாம்? கோபத்துக்குப் பயந்து எதையாவது உளறச் சொல்கிறீர்களா? அவன் போன வழி எனக்குத் தெரிந்திருந்தால், அவன் கூடவே ஓடிப் போயிருப்பேனே!" என்றான் சுந்தரம்.



படத்தில் இரண்டு மீன் தெரிகிறதா? திருப்பிப் பாருங்கள். அது வேறு உருவமாக மாறும்!

தலைவன் சிறிது நேரம் யோசித்தான். பிறகு, "சரி, ஏதோ சூது நடந்திருக்கிறது" என்று கூறிக் கொண்டான். பிறகு சுப்பையாவைப் பார்த்து, "சுப்பையா! இப்போதே நீ கிளம்ப வேண்டும். செருப்புத் தைப்பவன் போல் வேஷம் போட்டுக் கொண்டு அந்த ரமணிப் பயல் வீட்டுக்கு எதிரே போய் உட்கார்ந்து கொள். செருப்புத் தைத்துக் கொண்டே, ரமணி அவன் வீட்டில் இருக்கிறானா, அங்கு என்னென்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து வா. சீக்கிரம் கிளம்பு. அவன் அங்கே இருந்தால், நமக்கு ஆபத்து! நாம் இருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுத்து விடுவான்" என்று கொஞ்சம் அச்சத்தோடு கூறினான்.

"அந்தக் கவலையெல்லாம் உங்களுக்கு வேண்டாம். இதோ நான் செருப்புத் தைப்பவனைப் போல் கிளம்புகிறேன். ரமணி அங்கிருந்தால், இரவோடு இரவாக அவனைத் தூக்கி வந்து விடுகிறேன்" என்றான் சுப்பையா.

"சபாஷ், சுப்பையா! உன்னாலேதான் ரமணி முதலிலே நமக்குக் கிடைத்தான். இப்போதும், உன்னாலேதான் அவன் கிடைக்க வேண்டும்" என்றான் தலைவன்.

"சரி, நான் திரும்பி வரும்வரையில் நீங்கள் வெளியே தலை காட்டாதீர்கள். ஆபத்து! பேசாமல் இங்கேயே இருங்கள். ரமணி அவனுடைய வீட்டில்தான் இருக்கிறானா என்பதை நான் எப்படியும் தெரிந்து கொண்டு விடுவேன். ஆனாலும், சந்தர்ப்பம் எப்படி இருக்குமோ! இன்று அவன் வீட்டிலுள்ள எல்லோருமே உஷாராகத்தான் இருப்பார்கள். ஆதலால், சமயம் பார்த்துத் தூக்கிக் கொண்டு வந்து விடுகிறேன். எதற்கும் ஒருநாள் தாமதமானாலும்கூட நீங்கள் கவலைப்படாதீர்கள்! இன்று அல்லது நாளை இரவுக்குள் அவனைக் கொண்டு வந்து சேர்த்து விடுகிறேன். இது நிச்சயம்" என்றுகூறிவிட்டுக் கிளம்பிச் சென்றான் சுப்பையா. (தொடரும்)



முப்பது ஆண்டுகளாகக் காஞ்சியில் ஸ்ரீ நாராயண சேவாஸ்ரமத்தைச் சலியாத உழைப்பினால் அபிவிருத்தி செய்து, சிறந்த பணியாற்றி வரும் ஸ்ரீமத் ஆத்மானந்த ஸ்வாமிகள், ஆச்ரமத்தின் வளர்ச்சிக்காக நிதி உதவிபெற 10-3-56ல் 'ஸ்டேட் ஆப் மதராஸ்' என்ற கப்பலில் மலேயாவுக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள். மலேயா வாழ் தமிழர்கள் நல்லாவேதப்பு நல்கி உதவுவார்கள் என்று நம்புகிறோம்.


எல்லாவித மரச் சாமான்களுக்கும்... உட்பூச்சுக்கும், வெளிப்பூச்சுக்கும்
எவ்வித சீதோஷ்ண ஸ்திதியாலும் பாதிக்கப் படாதது
ஷாலிமார்
பூசுவதற்குத் தயாரான பெயின்டு
ஷாலிமார்
அலுமினியம் பெயின்டு
ஒரு கழுவக்கூடிய, சுவர்களுக் கேற்ற பெயின்டு
பலவித வேலைகளுக் கேற்ற சிறந்த எனாமல்
ஷாலிமார்
சுவர்களுக்கேற்ற பெயின்டு
SHALIMAR PAINT, COLOUR
& VARNISH CO., LTD.,
Post Box 136, Madras 1
SPW 338



ருஷ்ய நாட்டு நாடோடிக் கதை

இரு சகோதரர்கள்

முன்னொரு காலத்திலே நடந்தது இது. ஒரு சின்னஞ் சிறு ஊர் இருந்தது. அந்த ஊரில் இரண்டு குடியானவர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் இருவரும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள். அவர்களில் ஒருவன் பணக்காரன்; மற்றவன் ஏழை. பணக்காரன் பட்டணத்துக்குப் போனான். வியாபாரம் செய்தான். நல்ல லாபம் வந்தது. பெரும் பணக்காரனானான். பட்டணத்தில் பெரிய வீடுகள் கட்டிக் கொண்டு அவன் சௌக்கியமாக வசித்து வந்தான்.

ஏழைச் சகோதரனைப் பற்றி என்ன சொல்வது! அவனுக்குப் பல நாட்கள் குடிக்கக் கஞ்சிகூடக் கிடைக்காமல் கஷ்டப்பட்டு வந்தான். பட்டினி கிடக்க நேரும். போதாததற்கு அவனுக்கு நிறையச் சின்னச் சின்னக் குழந்தைகள். அக் குழந்தைகள் ஓயாமல் 'பசி' 'பசி' என்று அழும். அவனும் வயிற்றைக் கழுவ என்னவெல்லாமோ செய்து பார்த்தான். பலன் ஏற்பட்டால்தானே!

ஆகவே, ஒரு நாள் அவன் தன் மனைவியிடம், "பட்டணத்தில் என் அண்ணன் இருக்கிறான். அவன் நல்ல நிலைமையிலிருக்கிறான். அவன் எனக்கு உதவக்கூடும். அவனைப் போய் ஏதாகிலும் உதவி கேட்டால் என்ன!" என்று யோசனை கேட்டான். அவள் பதில் சொல்லுவதற்கு முன்னாலேயே அண்ணனைப் பார்க்கப் புறப்பட்டு, பட்டணத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

அங்கே தமையனைப் பார்த்ததும், "அண்ணா! உனக்கு என்மேல் எவ்வளவு பிரியம்! இவ்வளவு பிரியமிருந்தும் நான் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறாயே. நீ எனக்கு உதவக் கூடாதா! என்னுடைய மனைவி, குழந்தைகள் யாவரும் நாள் கணக்கில் பட்டினியாகக் கிடக்கிறோமே!" என்றான்.

இதைக் கேட்ட அண்ணன், "ஒரு வாரம் என் வீட்டில் வேலை செய். உனக்கு ஏதாகிலும் தருகிறேன்" என்றான்.

தம்பி வேறு வழியின்றி ஒப்புக்கொண்டான். அண்ணன் வீட்டில் விறகை வெட்டிப் போட்டான். தண்ணீர் கொண்டு வந்து கொட்டினான். குதிரைகளைத் தேய்த்துக் குளிப்பாட்டினான். வீட்டைப் பெருக்கினான். இப்படி ஒரு வாரம் கடுமையாக வேலை செய்தான். கடைசியில் அண்ணன் தம்பிக்கு ஒரு ரொட்டித் துண்டைக் கூலியாகக் கொடுத்தான். "இது உன் வேலைக்குக் கூலி!" என்று சொல்லித் தம்பியிடம் கொடுத்தான்.

"அண்ணா! ரொம்ப சந்தோஷம். ஒன்றுமே இல்லாததற்கு இந்த மட்டுமாவது கிடைத்ததே!" என்று உண்மையான நன்றியுணர்ச்சியோடு கூறி, அண்ணனுக்கு வணக்கம் செலுத்தி விட்டுப் புறப்பட்டான்.

தம்பி பத்தடிதான் நகர்ந்திருப்பான், அதற்குள் தமையன் கூப்பிட்டான்.

"தம்பி, ஒரு நிமிஷம் நில். நாளை எனக்குப் பிறந்த நாள். உனக்கு நினைவிருக்கிற தல்லவா! உன் மனைவி குழந்தைகள் சகிதம் நீ, என் வீட்டு விருந்துக்கு வரவேண்டும். மறந்து விடாதே!" என்றான்.

"ஆ! அண்ணா என்னையா கூப்பிடுகிறாய்? உன் வீட்டுக்கு நாளை பெரிய பெரிய பணக்கார வியாபாரிகள் எல்லாம் வருவார்கள். அவர்கள் நல்ல உயர்தரமான ஆடைகள், பூட்ஸுகள் அழகாக அணிந்துகொண்டு வருவார்கள். அவர்களிடையில் நான் கிழிந்த துணியும், கிழிந்த பூட்ஸும் அணிந்து குறுக்கும் நெடுக்குமாகப் போய் வருவது நன்றாக இருக்குமா! உன் அந்தஸ்துக்குக் குறைவு ஏற்படாதா!" என்றான்.

இதைக் கேட்ட அண்ணன், "அதைப் பற்றிக் கவலைப்படாதே! தம்பி, எப்படியும் நாளை வந்துவிடு. உனக்குத் தகுந்த இடமாகப் பார்த்துச் சொல்லுகிறேன்" என்றான்.

"அப்படியானால் சரி. நாளை வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் போனான்.

வீட்டுக்குப்போன தம்பி, தன்மனைவியிடம் ஒரு ரொட்டித் துண்டைக் கொடுத்து, "இந்தச் சமாசாரத்தைக் கேட்டாயா! நாளை பிறந்த தினக் கொண்டாட்டத்துக்கு நம்மை எல்லாம் என் அண்ணன் அழைத்திருக்கிறான்!" என்றான்.

"என்ன சொல்லுகிறீர்கள்! யாருக்குப் பிறந்த தினம்!" என்றாள் அவன் மனைவி.

"நாளைக்கு நடக்கப்போகும் என் அண்ணன் பிறந்த தினத்துக்குத்தான் நம்மைக் கூட அழைத்திருக்கிறான்" என்றான் தம்பி.

"அப்படியானால் நாமும் போவோம்" என்றாள் அவன் மனைவி.

மறுநாள் காலை எழுந்திருந்து, அவர்கள் குடும்பத்தோடு பட்டணத்துக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

பட்டணத்தில் அண்ணன் வீட்டை அடைந்ததும் அண்ணனைப் பார்த்துத் தம்பி புன்னகை செய்தான். அண்ணன் கவனித்ததாகவே தெரியவில்லை. இருப்பினும் அங்கே ஒரு பக்கமாகப் போட்டிருந்த பெஞ்சியின் மீது தம்பி தன் குடும்பத்தாரோடு உட்கார்ந்திருந்தான். ஆனால் அவனுக்கு எதிரில் பெரிய வட்டமான மேஜையிருந்தது. அந்த மேஜையின்மீது ஏராளமான தின்பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்த மேஜையைச் சுற்றி நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அந்த நாற்காலிகளில் ஏராளமான பணக்கார விருந்தினர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் தமையன் ஆசார உபசாரம் செய்தான். தம்பியை மதிக்கவில்லை. அவனைக் குடும்ப சகிதமாய்ப் பிறந்த நாள் விருந்துக்கு அழைத்ததாகவே அவன் காண்பித்துக் கொள்ளவில்லை. ஏன், அவன் இருக்கும் பக்கமாகத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. மற்றவர்கள் சாப்பிட்டுக் குதூகலமாகப் பேசிக் கும்மாளம் அடிப்பதைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான் தம்பி.

தம்பிக்கு இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை. எழுந்திருந்தாவது போயிருக்கலாம் அல்லவா! அதற்கும் துணிச்சல் இல்லை.

சாப்பாடு எல்லாம் முடிந்து விருந்தினர் ஒவ்வொருவராகத் தங்கள் வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். அண்ணனை வாழ்த்தி விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள். ஏழைத் தம்பியும் எழுந்து நின்றான். அண்ணனுக்குத் தானும் மற்றவர்களைப் போல் தலை வணங்கி நன்றி செலுத்தி விட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

பணக்கார விருந்தினர்கள் வயிறு புடைக்கத் தின்றதால் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் வீட்டுக்குத் திரும்பினர். ஏழை வெறும் வயிற்றுடன் திரும்பினான்.

விருந்தினர்கள் பாடிக் கொண்டு போவதைப் பார்த்து விட்டு ஏழைத் தம்பி, "நாமும் பாடிக்கொண்டே வீட்டுக்குப் போவோமே!" என்றான் மனைவியிடம்.

அவளுக்குக்கோபம் வந்தது. "அவர்கள் எல்லாம் நன்றாகச் சாப்பிட்டிருக்கிறார்கள். அதனால் பாடிக் கொண்டு போகிறார்கள். நமக்கென்ன வந்தது! நாம் ஏன் பாட வேண்டும்!" என்று கேட்டாள்.

"நாம் பாடிக் கொண்டு போகவில்லை என்றால் நமக்குத்தான் பெருத்த அவமானம். பணக்கார அண்ணன் வீட்டுக்குப் போய் பெருத்த அவமானம் அடைந்து வந்திருக்கிறார்கள் என்று ஊரார் பேசுவார்கள். அதனால் நாமும்



பாடிக் கொண்டு போனால் அண்ணன் பிறந்த நாள் விருந்தில் ஏக அமர்க்களமாகச் சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறோம். அதனால் தான் இப்படிப் பாடிக் கும்மாளம் அடிக்கிறோம் என்று நினைத்துக் கொள்வார்கள்!" என்றான்.

"அப்படியானால் நீங்கள் வேண்டுமானால் பாடிக் கொண்டு போங்கள். நான் உங்களோடு சேர்ந்து பாட முடியாது!" என்று கூறி மறுத்து விட்டாள் மனைவி.

அவன் பாடத் தொடங்கினான். அவன் பாடும் போது அவன் குரலுடன் சேர்ந்து இன்னொரு குரலும் கேட்டது. உடனே பாட்டை நிறுத்தினான். மனைவியைப் பார்த்து, "என்னுடன் சேர்ந்து பாடினாயா, என்ன! உன் மெல்லிய குரலா என் குரலோடு இழைந்தது!" என்றான்.

"இது என்ன. உங்களுக்குப் பைத்தியம் கிபித்தியம் பிடித்து விட்டதா! நான் பாடலாம் என்று நினைக்கக்கூட இல்லையே. என் குரல் எப்படிக் கேட்கும்!" என்றாள்.

"பின் என்னுடன் பாடியது யார்!" என்றான்.

"எனக்கு எப்படித் தெரியும்! எங்கே இன்னொரு தடவை பாடுங்கள். இப்பொழுது நான் கேட்டுப் பார்க்கிறேன்" என்றாள்.



அவன் மீண்டும் அந்தப் பாட்டை முதலிலிருந்து தொடங்கினான். இப்பொழுது அவனுக்குத் தான் ஒருவன் தான் பாடுகிறான் என்பது உறுதியாயிற்று. இருப்பினும் இரண்டு குரல்கள் தெளிவாகக் காதில் விழுந்தன. பாட்டை நிறுத்தினான்.

"தரித்திரமே! என் தரித்திரமே! நீதான் என்னோடு பாடுகிறாயா!" என்று கேட்டான்.

"ஆமாம், எசமான்!" என்றது தரித்திரம் எங்கிருந்தோ.

"அப்படியானால், இப்படி வெளியே வந்து பகிரங்கமாக எங்களோடு நட! எங்களுக்கும் வழித் துணையாயிற்று!" என்றான்.

"அப்படியே செய்கிறேன் எசமான். இனி உங்களோடேயே இருக்கிறேன், எசமான்! இனி உங்களைத் தனியே விட்டுப் போகவே மாட்டேன்!" என்றான் தரித்திரன்.

ஆம், இனி அந்தத் தரித்திரத்தை நாமும் 'தரித்திரன்' என்று அழைப்போம்.

இப்படித் தரித்திரனையும் சேர்த்துக் கொண்டு அவர்கள் வீட்டை நோக்கி நடந்தார்கள். தரித்திரனோ, அவனை வழியெல்லாம் தேநீர்க் கடைக்கும் சாப்பாட்டுக் கடைக்கும் அழைத்துப் போகச் சொல்லி நச்சரித்தான்.

"நான் கடை கண்ணிகளுக்கெல்லாம் வர முடியாது, என்னிடம் பணமில்லை" என்று சொல்லிக் கொண்டே வந்தான் ஏழை.

"நமக்கு எதற்குப் பணம்! நீங்கள் போட்டிருக்கிற ஆட்டுத் தோல் சட்டையே போதுமே! வரப் போவதோ கோடை காலம். கோடை காலத்தில் நீங்கள் இந்தச் சட்டையைப் போட்டுக் கொள்ளவே மாட்டீர்கள். இதை அந்தக் கடையில் விற்று விட்டு ஏதாகிலும் வாங்கிச் சாப்பிட்டால் போகிறது!" என்றான் தரித்திரன்.

ஏழைத் தம்பியும் தரித்திரனும் கடைக்குப் போய் வயிறு முட்டப் பலகாரங்கள் வாங்கிச் சாப்பிட்டார்கள். பானங்கள் குடித்தார்கள்.

மறுநாள் பொழுது விடியும் போதே தரித்திரன் பெருமூச்சு விட்டான். முனகினான். தலை வலிக்கிறது என்றான். தன் எசமானை மீண்டும் ஹோட்டலுக்கு அழைத்தான்.

ஏழை, "பணமில்லை!" என்றான்.

"ஏன், எதற்குப் பணம் வேண்டும்! உங்களிடந்தான் வண்டி யிருக்கிறதே, அது போதுமே!" என்றான் தரித்திரன்.

ஏழை என்ன செய்வான்! தரித்திரன் பிடிவாதம் பிடித்தான். எவ்வளவு மறுத்தும் கேட்கவில்லை. அவன் சொற்களுக்குக் கீழ்ப் படிந்தே நடக்க வேண்டியதாயிற்று.

இப்படி ஒரு மாதத்துக்குள் ஏழைத் தம்பி தன்னிடமிருந்த பொருள்களை யெல்லாம் தொலைத்தான். தான் குடியிருந்த குடிசையைக் கூட அடகு வைத்தான். இருந்தாலும் தரித்திரன் விடுவதாக இல்லை. அவன் மனைவியின் ஆடைகள் யாவும் தொலைத்து, மேலேயுள்ள ஆகாயமும் கீழேயுள்ள பூமியும் தவிர வேறு உடைமை இல்லை என்ற நிலைக்குக் கொண்டு வந்து விட்டான்.

* * *

இந்நிலையில் ஒரு நாள் காலை எழுந்திருந்தான் தரித்திரன். இந்த ஏழையிடம் இன்னும் ஒன்று மிச்சமில்லை என்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொண்டான்.

அப்போது "எசமான்!" என்று அழைத்தான் தரித்திரன்.

"என்ன!" என்றான் ஏழை.

"நீங்கள் பக்கத்து வீட்டுக்காரரிடம் போய், அவர் வண்டியையும் மாடுகளையும் கொஞ்சம் இரவல் கேளுங்களேன்" என்றான்.

அவனும் 'சரி' என்று பக்கத்து வீட்டுக்காரரிடம் போய், "ஐயா! உங்கள் வண்டியையும் ஒரு ஜோடி மாடுகளையும் இரவல் கொடுங்களேன். பிறகு நான் வேண்டுமானால் உங்கள் பண்ணையில் ஒரு வாரம் வேலை செய்கிறேன்" என்று கூறினான்.

"எதற்கு உனக்கு வண்டியும் மாடும்!" என்றார் அவர்.

"காட்டுக்குப் போய், விறகு வெட்டிக் கொண்டு வரத்தான்" என்றான்.

"அப்படியானும் சரி, கொடுக்கிறேன். கொண்டு போ. ஆனால் பாரம் அதிகமாக ஏற்றி விடாதே!" என்று எச்சரித்தார் பக்கத்து வீட்டுக்காரர்.

"இல்லை, இல்லை. நீங்கள் நீடூழி வாழ்க!" என்று சொல்லி வாழ்த்தி விட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

வண்டி வீட்டு வாசலில் வந்து நின்றதோ இல்லையோ முதலில் தரித்திரன் வண்டியில் ஏறிக் கொண்டான். தன் எஜமானனை வண்டியை ஓட்டச் சொன்னான். வண்டி ஊரை விட்டு, வயலை விட்டு, வரப்பை விட்டு வெகு தூரம் வந்து விட்டது. அங்கே ஒரு பெரிய மைதானம். அந்தத் திறந்த வெளி மைதானத்தில் ஓட்டிக் கொண்டு போனார்கள்.

"எசமான், மைதானத்தின் நடுவிலே ஒரு பெரிய பாறை இருக்கிறதே, தெரியுமா!" என்றான் தரித்திரன்.

"தெரியும்" என்றான் அவன்.


"நேரே அந்தப் பாறைக்கு ஓட்டுங்கள்" என்றான்.

பாறையருகில் வந்ததும் வண்டியை நிறுத்தி, அவர்கள் இறங்கினார்கள். தரித்திரன் ஏழையை அந்தப் பெரும் பாறையை நகர்த்தச் சொன்னான். அவன் நகர்த்த முடியாமல் பெருமூச்சு விட்டான். தரித்திரன் அவனுக்கு உதவினான். கடைசியில் அவர்கள் பாறையை ஓரடியாகத் தூக்கி நகர்த்தி விட்டார்கள். இப்பொழுது பாறை யிருந்த இடத்தைப் பார்த்தால், என்ன ஆச்சரியம்! ஒரு பெரிய குழியல்லவா இருக்கிறது! அந்தக் குழி நிறையத் தங்க காணயங்கள்!

பல ஆண்டுகள் வறுமையால் அவதிப்பட்ட தம்பிக்கு இந்தக் காட்சியைப் பார்த்தால் எப்படி யிருக்கும்! ஒரு செல்லாத செப்புக் காசுக்கு ஏங்கித் தவித்த ஒருவனுக்கு கண்ணைப் பறிக்கும் காந்தியுடன் திகழும் தங்ககாணயங்களைப் பார்த்தால் எப்படி யிருக்கும்! அவனுக்குண்டான ஆச்சரியத்திலும் ஆனந்தத்திலும் திறந்த வாய் திறந்தபடியே இருந்தது! மலர்ந்த கண்கள் மலர்ந்தபடியே இருந்தன. அவன் வியப்பில் கல்லாகி நின்று விட்டான்.

தரித்திரன், "அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பானேன்; எசமான்! சீக்கிரமாக வண்டியில் ஏற்றுங்கள்" என்றான்.

அவ்வளவுதான். தம்பி மேற்கொண்டு செய்ய வேண்டிய வேலையில் மும்முரமாக இறங்கினான். வண்டி நிறையத் தங்கத்தைத் துரிதமாக ஏற்றினான். குழியில் ஒரு காணயத்தை விடவில்லை. குழி காலியாகவிட்டது என்பது நிச்சயமாகத் தெரிந்தது. எனினும்,



"தரித்திரனே! நீயும் ஒருதரம் குழியைப் பார். குழியில் இன்னும் கொஞ்சம் பொன் காணயங்கள் விடுபட்டிருக்க வேண்டும் போல் தோன்றுகிறது!" என்றான்.

தரித்திரன் குனிந்து பார்த்தான்.

"எங்கே! ஒன்றையும் காணவில்லையே!" என்றான் தரித்திரன்.

"ஏன் அதோ பார், அந்த மூலையில் ஒரு காணயம் பளபளவென்று மின்னுகிறது!" என்றான் ஏழைக் குடியானவன்.

"எனக்குத் தெரியவில்லையே!" என்றான் தரித்திரன்.

"குழிக்குள் இறங்கிப் பார். நன்றாகத் தெரியும்!" என்றான்.

தரித்திரன் குழிக்குள் இறங்கினான். அவ்வளவுதான்; குடியானவன் அந்தப் பாறையைத் தள்ளிக் குழியை மூடினான். "தரித்திரமே! இங்கேயே கிட. இந்த இடம்தான் உனக்கு நல்லது. என்னோடு அழைத்துக் கொண்டு போனால் இருக்கிற காசையெல்லாம் ஒழித்து விட யோசனை கூறுவாய்!" என்று சொல்லி விட்டு வீட்டுக்குத் திரும்பிப் போனான்.

வீட்டில் இந்தப்புதையலை ஒரு பெட்டியில் பத்திரமாக வைத்துப் பூட்டினான். வண்டியைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு, தன் வாழ்வுக்கு வழி வகுத்தான்.

ஆம், நிறைய மரம் வாங்கி நல்ல வீடு கட்டிக் கொண்டான். தன் அண்ணனை விட இரண்டு மடங்கு சிறப்பாக வாழலானான்.



கொஞ்ச நாளில் இவனுடைய பிறந்த நாள் வந்தது. அந்தப் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானித்து எல்லா ஏற்பாடுகளையும் செய்தான். விருந்துக்குத் தன் அண்ணனை அழைக்கப் போனான்.

அண்ணன், "என்ன சொல்லுகிறாய்! உனக்குப் பிறந்த நாளா! சாப்பிடவே ஒன்று மில்லாத போது, பிறந்த நாள் வேறு கொண்டாடப் போகிறாயா நீ!" என்றான்.

"முன்னொரு காலத்தில் ஒன்றும் இல்லாதிருந்தது. இப்போது கடவுளின் அருளினால் நிலைமை மாறிவிட்டது. உங்கள் நிலைக்குச் சற்றும் குறைந்து விட வில்லை. அதையெல்லாம் நீங்களே நேரில் வந்து பாருங்கள்" என்றான்.

மறுநாள் பணக்கார அண்ணனும் அவன் மனைவியும் தம்பியின் பிறந்த நாள் வைபவத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அங்கே போனால் அவர்களுக் குண்டான ஆச்சரியம் கொஞ்ச நஞ்சமல்ல! நேற்றுவரை உடுத்த ஆடையில்லாமலிருந்த தம்பிக்கு, இப்போது அரண்மனை மாதிரி வீடு! எந்தப் பணக்கார வியாபாரிக்குமே பட்டணத்தில் இத்தகைய வீடு கிடையாதே என்று நினைத்தான். இவ்வளவு பெரிய வீடும் வசதிகளும் செய்து கொள்ள, தம்பி பெரும்பணக்காரனாக அல்லவா ஆகியிருக்க வேண்டும். எப்படி இவன் இவ்வளவு பெரிய பணக்காரனானான்! இப்படிப் பலபடியாக அண்ணன் எண்ணி எண்ணிப் பொருமிக் கொண்டே வீட்டுக்கு வந்தான்.

தம்பி அண்ணனுக்கும் அவன் மனைவிக்கும், மற்றும் வந்திருந்தவர்கள் அனைவருக்கும் பிரமாத ஆசார உபசாரம் செய்து விருந்து வைத்தான். இதையெல்லாம் பார்த்து விட்டு, பணக்காரன் தம்பியைப் பார்த்து, "தம்பி, உனக்கு இவ்வளவு பணமும் செல்வமும் திடீர் என்று எப்படிக் கொழித்தது!" என்று கேட்டான்.

தம்பி எல்லா விவரங்களையும் நடந்தது நடந்தபடி சொன்னான். தரித்திரன் தன்னைச் சூழ்ந்து கொண்டது, வீட்டில் ஒரு சாமான் பாக்கியின்றித் தொலைந்தது, தரித்திரனே புதையலிருக்கும் இடத்தைக் காண்பித்தது, புதையல் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்ட பின்னர் தரித்திரத்தை அந்தக் குழியில் போட்டு மூடியது — ஆகியவற்றையெல்லாம் ஒன்று விடாமல் சொன்னான்.

கேட்கக் கேட்க அண்ணனின் உள்ளத்தில் பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரிந்தது. "நான் நேரே அந்த மைதானத்துக்குப் போய், கல்லைத் தள்ளித் தரித்திரத்தை வெளியே போக விடுகிறேன். அப்படிச் செய்தால் என்ன! அப்போதுதான், தம்பிக்குப் புத்தி வரும். தரித்திரம் மீண்டும் இவனைப் பிடித்துக் கொள்ளும். இவனும் தன் செல்வத்தைப் பற்றி என் எதிரில் பெருமையடித்துக் கொள்ள மாட்டான்" என்று மனசுக்குள் கருவினான்.

விருந்தெல்லாம் முடிந்து வந்திருந்தவர்கள் எல்லோரும் வீட்டுக்குப் போகப் புறப்பட்டார்கள். அண்ணனும் புறப்பட்டான். ஆனால் வீட்டுக்குத் தன் மனைவியைத் தனியே அனுப்பி விட்டுத் தான் மட்டும் திறந்த வெளி மைதானத்தை நோக்கிப் போனான்.

அங்கே பெரிய பாறையைப் பார்த்தான். ஆம்; இதற்குள்தான் தரித்திரன் அடைபட்டிருக்க வேண்டும் என்று நினைத்தான். அவனுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு பலம் வந்ததோ! அன்று இரண்டு பேரினால் நகர்த்த முடியாமலிருந்த பாறையை அண்ணன் ஒருவனே இன்று ஒரு மூச்சில் நகர்த்தினான். தரித்திரத்தை வெளியே விட்டான். "தரித்திரனே! என் தம்பியிடம் போய் அவனை மறுபடியும் ஓட்டையாண்டியாக்கு!" என்று கட்டளை யிட்டான் அண்ணன்.

"ஐயா, முடியாது. இனிமேல் அவரிடம் என்னால் போக முடியாது. நான் வேண்டுமானால் உங்களோடு இருந்து விடுகிறேன். என்மேல் உங்களுக்கு எவ்வளவு அன்பு! நீங்கள் தானே என்னை அன்போடு வெளியே விட்டீர்கள். உங்கள் தம்பி ரொம்பக் கெட்ட மனுஷன். என்னை இந்தக் குழிக்குள் போட்டு அடைத்து விட்டான். இனிமேல் அவனிடம் போக மாட்டேன். உங்களோடேயே இருக்கிறேன்" என்றான் தரித்திரன்.

கொஞ்ச நாளில் பொறாமைக்கார அண்ணனின் செல்வமெல்லாம் தொலைந்தது. பணக்காரனாக இருந்தவன் பரம ஏழையாகிப் போனான்.

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor: Mi. Pa. Somasundaram



ராமுவுக்கு வீடு
திரும்ப நடுக்கம்...
SUNLIGHT
SOAP
ஸன்லைட் சோப்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

